Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
ஆர். வி. ஜி. பீடி
உற்பத்தியாளர்
47, பீச்ரேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 230

# ஈழநாடு வார மலர்.

தீபாவளி வாழ்த்துக்கள்!
எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
அனைவருக்கும் உரித்தாகுக.
மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி
பரிசுகளைப் பெறுங்கள்.
மில்க் வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்,
கிளை:- 83, ஜிந்துப்பிட்டி வீதி,
கொழும்பு-13

மலர் 12 | ஐப்பசி 12 | ஷஃபான் 27 | ( 29 — 10 — 70 ) | வியாழக்கிழமை | இதழ் 260

# இன்றும் நாளையும் வங்கிகள் திறந்திருக்கும்

## 250 ரூபாய்க்கு மட்டுமே புதிய பணம் கிடைக்கும்

கோட்டை, வியாழன்

**இன்றும் நாளையும் வங்கிகள் திறந்திருக்கும். நேற்றிலிருந்து நாடு பூராவுமுள்ள வங்கிகளில் ரூபா 250 வரை மட்டுமே மாற்ற முடியும். 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றி 1000 ரூபாவரை வழங்கப்பட்டுவந்த தொகை 250 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது**

பணத்தைப் பதுங்கி வைத்திருக்கும் பெரும் புள்ளிகள் தரகர்கள்மூலம் பெரும் தொகையான பணத்தை மாற்ற வருவதாகவும், ஆயிரம், ஆயிரம் ரூபாக்கள் பலரிடம் பகிர்ந்து கொடுத்து மாற்றப்படுவதாகவும் அரசாங்கத்துக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, பழைய நோட்டுகளுக்குப் பதிலாக புதிய நோட்டுக்கள் மாற்றிக கொடுக்கும் தொகை குறைக்கப்பட்டுள்ளது.

250 ரூபாவுக்கு அதிகமாக 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை வைத்திருப்பவர்கள் வங்கியில் அப்பணத்தைப் போடவேண்டும். நவம்பர் மாதம் 2-ந் திகதிக்குப் பின்னரே இவ்விதம் போடப்பட்ட தொகைக்குரிய பணத்தை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### திறைசேரியில் பணமில்லை

திறைசேரியில் புதிய நோட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும்இவ்விதம் மாற்றிக் கொடுக்கும் தொகை குறைக்கப்பட்டதற்கு ஒரு காரணமெனத் தெரியவருகிறது. புதிதாக அச்சடிக்கப்பட்ட தொகைக்கு அதிகமான பணத்தைப் பழைய நோட்டுகளுக்குப் பதிலாக மாற்றிக்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று அரசாங்கம் கருதுவதினாலேயே இவ்விதம் 250 ரூபாவாகக் குறைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நேற்று முன்தினம்போல், பணம் மாற்றச் சென்ற பொதுமக்கள் ரூபா 1000 வரை வங்கிகளுக்குக் கொண்டுசென்றனர். ஆயினும் 250 ரூபா மட்டுமே மாற்றிக்கொடுக்கப்பட்டது. மிகுதிபணத்தை விரும்பினால் உடனடியாக வங்கியில் போடலாம்என்றும் அல்லது நவம்பர் மாதம் 25-ம் திகதிக்கு முன்னராக வங்கியில் கணக்குகள் இல்லாவிட்டால் புதிதாக ஆரம்பித்து பணத்தைப்போட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. வங்கியில் போடப்படும் பணம் 3 தினங்களின் பின்னரே பெற முடியும் எனத் தெரிகிறது.

### இன்று வங்கிகள் திறந்திருக்கும்

இன்று வழமைபோல் வங்கிகள் திறந்திருக்கும். விடுமுறைதினமான போதிலும் 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்காக வங்கிகள் திறக்கப்பட்டிருக்கும்.

யாழ் நகரில் கடந்த சில தினங்களாக ஒரே ஜனக்கூட்டமாகவேயிருக்கிறது வங்கிகளின் முன் மணித்தியாலக் கணக்கில் நீண்டகியூகாணப்பட்டது. இரண்டாவது இரவுக்காட்சிசினிமாப்படங்களைப் பார்த்து விட்டும் அனேகமானோர் கியூவில் நின்றனர். 2 மணி மட்டுமே வங்கிகளில் நோட்டுக்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டதால், ஆயிரக்கணக்கானமக்கள் நோட்டுக்களை மாற்ற முடியாமல் திரும்பினர். கொழுத்தும் வெய்யிலில் அதிகாலை தொடக்கம் காணப்பட்ட ஜனக்கூட்டம் மாலைவரை கியூவில் நிற்கக் காணப்பட்டனர்.

வங்கிகளுக்கு 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றச் செல்வோர் ஒரு விண்ணப்பப்படிவம்ஒன்றை வங்கியினுள்ளே நின்று நிரப்பிக் கொடுக்க வேண்டியிருப்பதால் பணம் மாற்றுவதில் பலத்த தாமதம் ஏற்படுவதாகப் பலர் குறை கூறினர். நோட்டுக்களை மாற்றச்செல்வோருக்குவெளியில்வைத்து அப்படிவத்தை நிரப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்தால், விரைவில் கியூவைக் குறைத்துவிடலாம் என பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### 50 ரூபா நோட்டுடன் பலர் நின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

ஒரேஒரு 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மட்டுமே வைத்துக்கொண்டும், சில மணி நேரக்கணக்கில் கியூவில் நின்ற பலரையும் நேற்றுக்காண முடிந்தது.

இவ்விதம் ஒரேஒரு நோட்டுக்களைமட்டும் வைத்திருப்பவர்களுக்கு கச்சேரி, தபாற்கந்தோர், காரியாதிகாரிக் கந்தோர் ஆகிய இடங்களில் பணத்தை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் மிகவும் சுலபமாயிருந்திருக்கும் என்று பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## தந்தையின் சடலத்துடன் வந்த மகன் விபத்தில் பலி

யாழ்ப்பாணம், வியாழன்

தந்தையின் பிரேதத்தை மோட்டார்வான் ஒன்றில் ஏற்றி தமது வீட்டுக்குக் கொண்டு சென்று கொண்டிருந்த மகனும் விபத்தில் சிக்கி மரணமானார். இச்சம்பவம் முறிகண்டிக்கு அண்மையில் நடைபெற்றது.

வவுனியாவைச் சேர்ந்த சடையப்பாபிள்ளை என்பவர் மரணமானதைத் தொடர்ந்து அவரது மகன் அருணாசலம் இறந்த தனது தந்தையின் பிரேதத்தை வான் ஒன்றில் எடுத்துச் சென்றார். அப்போது முறிகண்டிக்கு அண்மையில் பிரேதம் ஏற்றிச் சென்ற வானும் லொறி ஒன்றும் மோதிக் கொண்டதில் அருணாசலம் பலத்த காயத்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டார் அங்கு அவர் மரணமானார்.

வாசக நேயர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும் எமது
இதயம் கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

### அறிவித்தல்

இன்று தீபாவளி விடுமுறையாகையால் நாளை (30-10-70) வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## ஜனநெருக்கடியில் கள்வர் நடமாட்டம்

யாழ். நகரில் கடந்த 26ம் திகதி தொடக்கம் ஒரே ஜனநெருக்கடியாகவே இருந்தது, ஜனங்களின் மத்தியில் கள்வர் நடமாடுவதாகவும், கள்வரிடமிருந்து தப்பித்துக் கொள்ள மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளும்படியும் பொலிசார் ஒலிபெருக்கிமூலம்அறிவித்தபடியிருந்தனர். வங்கியிலிருந்து பணத்தை மாற்றிச் செல்லும் போதும், பணம்மாற்ற வரும்போதும் கவனமாக நடந்து கொள்ளும்படி பொலிசார் எச்சரிக்கை செய்த வண்ணமிருந்தனர்.

### வெடிச்சப்தம் இல்லை

யாழ்ப்பாணத்தில் தீபாவளித் தினத்திற்கு முதல் நாள் கேட்கும் பட்டாசு வெடிகளின் சப்தம் நேற்று எங்கும் கேட்கமுடியவில்லை. ஒவ்வொருவரும்பணம் மாற்றும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. சாராயத் தவறணைகளுக்கு முன்னால் வருடாவருடம் காணப்படும் நீண்ட கியூ வரிசையையும் நேற்றுக்காண முடியவில்லை.

கொழும்பு நகர வங்கிகளின் கியூவில் காணப்பட்ட அதிகமானோர் ஏழைகளாகவே காணப்பட்டபோதிலும், அவர்கள் பணம்பதுக்கி வைத்திருக்கும்பெரும்புள்ளிகளின் ஏஜண்டுகளாகவே இருந்தார்கள் சிறுவர்கள் கூட கியூவில் காணப்பட்டனர்.

மாகோவில் இரண்டுபேர் தலா ஒன்றரை லட்சம் ரூபாவைவங்கியில்போட்டுள்ளனர். தாமாகவே இவர்கள் வங்கியில் உள்ளகணக்கில் போட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வருமானவரிஇலாகா நோட்டுக்களைஏற்கும்

வருமானவரி இலாகா 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை ஏற்றுக்கொள்ளுகிறது. வருமானவரி செலுத்த வேண்டியவர்கள் நோட்டுக்களை வருமானவரி இலாகாவில் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டது. இவ்விதம் பெரும்தொகையான பணம் இதுவரை வருமான இலாகாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### கொழும்பில் வாகன சோதனை

கொழும்பை நோக்கிவரும் மோட்டார் வாகனங்கள் யாவும் நேற்றுப் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டன. முக்கிய வீதிகளில்ஆயுதந்தாங்கிய பொலிசார் வாகனங்களை மறித்துச் சோதனையிட்டனர். பெரும் தொகையான பணம் மாற்றுவதற்காகக் கொண்டு வரப்படலாம் என்று கருதப்பட்டதால் சோதனை நடைபெற்றது. இதுவரை எதுவித அசம்பாவிதங்களும் நடைபெற்றதாக பொலிசில் புகார் செய்யப்படவில்லை. நாடுபூராவும் அமைதியான முறையில் நோட்டுக்கள் மாற்றப்படுவதாக பொலிஸ் தலைமைக்காரியாலயம் அறிவித்தது. (சி.பி.ஏ.)

## தகப்பனைச்சுட்டுக்கொன்ற மகனும் தற்கொலை

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச்சேர்ந்த காசிப்பிள்ளை சிவப்பிரகாசம் (வயது 30) என்பவர்நேற்றுமாலை தனது தந்தையான தம்பையா காசிப்பிள்ளை (வயது 55 என்பவரை சுட்டுக்கொலை செய்துவிட்டுத் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டாராம்.

முல்லைத்தீவு பதில் மஜிஸ்திரேட் பி. சேனாதிராஜா விசாரணை நடத்தினார். முல்லைத்தீவு டி. எம். ஓ. டாக்டர் ஏ. இராஜலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார். கொலையும் தற்கொலையுமென விசாரணையின் முடிவில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய பண நோட்டுகளுக்கு கால் முளைத்த தினம்

'வங்கி வசதியற்ற கிராமப் புறங்களில் உள்ள வறியமக்கள்தம்மிடமுள்ள சில ஐம்பதுரூபா நோட்டுகளை மாற்ற வங்கிகளுக்குப் பிரயாணஞ்செய்ய இன்னுமொரு ஐம்பது ரூபாத் தானைச் செலவிடவேண்டியிருக்கும்!' என்று மின்னேரியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரத்ன தேசப்பிரிய சேனநாயகா கூறியபோது நிதியமைச்சர் சொன்னது:—

## "குஞ்சுமீன்களை நாம்காப்பற்ற முனைந்தால் சுறுமீன்கள் தப்பிவிடும்'

இது உண்மையா...? கியூ வரிசைச் சம்பாஷணைகளைக் கேட்போமே!'

பெரிய பணநோட்டுகளுக்குக் 'கால்முளைத்து', நடமாடி வருவதைக் கடந்த இருதினங்களாகக்கண்டு கொண்டிருக்கிறோம். புதிதாக வந்த தமிழ்ப்படங்களுக்கு முதல் தினத்தில்கூடத் திரளாத அளவுக்கு முந்தாநாளிலிருந்து மகாஜனங்கள் வங்கிகளை முற்றுகையிட்டிருக்கிறார்கள். சுருண்டு சுருண்டு நீளும் 'கியூவரிசை'யில்' நாம் கேட்கும் 'கியூவரிசைச் சம்பாஷணைகள் மிக ரசமானவை.

### குடும்பச்சண்டை

இது நேற்றுமுன் தினம் நடந்தது.

'பொம்பிளையளுக்கு இந்த அரசாங்கம் செய்த சேவை குடும்பச் சண்டைகளைக் கிளப்பிவிட்டதுதான்!' என்று சலித்துக்கொண்டார் எனக்கு முன்னின்ற பெண் மணியொருவர். 'குடும்பச் சண்டைகளா?' என்று ஆச்சரியப்பட்டுக்கேட்டேன்.

'பின்னையென்ன... என்ரை தங்கச்சியொருத்தி அத்தானுக்கு (தங்கையின் புருஷன்)த் தெரியாமல் சீட்டுப் போட்டு ஒரு முன்னூறு ரூபாக் காச வைச்சிருந்தவள் ... இப்ப திடீரென்று ஐம்பது ரூபா நோட்டுச் செல்லாமல் போகப்போகிறதெண்டு வந்தாப்போலை எல்லாத்தையும் அவருக்குச் சொல்லவேண்டியாய்ப் போச்சு ... ... அவள் பொம்பிளை, 'பாங்கு'க்கு வரமுடியுமோ...' புருஷன்காரன். 'எனக்குத் தெரியாமல் என்னடி சம்பாத்தியம்?' என்று ரா முழுவதும் ஒரே சண்டை!'

'ஓமோம். இவங்கள் சிலபேர் குடிச்சுப்போட்டு அக்கறையில்லாமல் திரிஞ்சால் உதுகள் பொம்பிளையள் தானை ஐஞ்சைப் பத்தைச் சேர்த்துவைச்சு ஒருமாதிரிக் குடும்பத்தைக் கொண்டிழுக்கிறதுகள் ... இப்ப வழிச்சுத் துடைச்சு காசையும் குடுஎண்டு நிப்பங்கள்!' இப்படி மனவருத்தத்துடன் ஆமோதித்தார் அருகில் நின்ற அம்மையார்.

'அப்பத் தீவாளிக்குப் புருஷன்மார்பாடு வாசிதான் எண்டு சொல்லுங்கோ!' என்று இப்போது கெக்கட்டமிட்டுச் சிரித்தார் ஓர் அறுபது வயது 'இளைஞர்'. இந்த நகைச்சுவையை (?) அந்த அம்மையார் ரசிக்கவில்லை 'விடியக்காத்தாலை தேத்தண்ணியும் நிம்மதியாய்க் குடிக்கயில்லைத் தம்பி, அவசரமாக வந்தனுங்கள் ... ... இவங்கள் இப்போதைக்குத் திறக்கமாட்டாங்கள் போலையிருக்கு!' என்று முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

அப்போது நேரம் மு. ப. 9.45!...

திடீரென்று ஒரு சலசலப்பு. நிலத்தில் இருந்த பெண்கள் சிலர்எழுந்து நின்றார்கள் சில இளைஞர்கள் தலையை நீவிவிட்டுக்கொண்டார்கள். எனக்குப் பின்னல் நின்ற ஒருவர்—ஆனைக்கோட்டையிலிருந்து காலையில் சாப்பிடாமலே வந்ததாகச் சொன்னவர்—அவசரமாக இடுப்பில் கைவைத்து நிமிர்ந்து நின்றார்.

**த. இந்திரலிங்கம்**

பிறகுதான் விஷயம் விளங்கியது; விசேஷம் ஒன்றுமில்லை — பத்திரிகைப் படப்பிடிப்பாளரொருவர் 'கமரா'வை உயர்த்திக் கொண்டு நின்றுகொண்டிருந்தார். எனக்கு முன்னின்ற பென்சனியரொருவர், கலாநிதி நாணயகார பதிரகேமார்ட்டின் பெரேரா (வேறெவருமல்ல. எங்கள் கௌரவ நிதிமந்திரிதான் — முழுப்பெயரைக் குறிப்பிட்டேன்!)வைப்பற்றி அச்சிட முடியாத வார்த்தைகளினால் திட்டத்தொடங்கினார். நான் கூடியவரை 'நடுநிலையை அல்லது கூட்டுச் சேராக் கொள்கை'யையே அனுசரிக்க முயன்றேன். ஆனால் என்னருகில் இருந்தவர் அதை வெறுத்தார். 'என். எம். பெரேராசும்மா ஆளல்ல ... முப்பத்திரண்டு வருட வரியையும் தன்னலை வசூலிக்க முடியும் — என்று சொல்லியிருக்கிறார். அது தனிமூளை என்றார்.

முன்னவருக்குப் 'புண்ணில் புளிபட்டது' போலிருந்தது. 'அதுக்கு இப்படியே மனுஷனை வெய்யிலிலை கருவாடு போடுறதிலை பெருந்தொகை பதுக்கிறவங்கள் வேணுமெண்டால் கமிஷனுக்கு ஆட்களை அனுப்பிக் காசை மாத்திப் போடுவாங்கள். நாங்கள் என்ன செய்ய இயலும்.'

''என்ன இருந்தாலும் எல்லாரையும் ஒரே மட்டத்திலை (தார் ரோட்டில்) கொண்டுவந்து நிப்பாட்டின பெருமை டாக்டர் என். எம். பெரேராவுக்குத்தான் சேரும்!' என்றார் இன்னொருவர். அதை என்னால் மறுக்க முடியவில்லை. காற்சட்டைகள், லோங்சுகள், வேட்டிகள், சாரங்கள். தொப்பிகள், நாஷனல்கள், மினி—ஸ்கேர்ட்டுகள்— எல்லோரும் ஒரே மட்டத் தரையில்தான் வரிசையாக நின்றார்கள்!

இதற்குள் பெண்கள் வரிசையில் சலசலப்பு உண்டாயிற்று. 'நாங்களெல்லாம் நிக்கிறம் அவ முன்னுக்குத் நுளைச்சுக்கொண்டு போரு!' இது ஒரு மனுஷியின் புகார்.

'நான் அப்போதை இதிலை தான் நிண்டிட்டுப் போனனான். கூப்பனை விட்டிட்டு வந்தனான்—எடுக்கப்போனீ சேர் இப்ப வந்து நிற்கிறன் இது அவவின் சமாளிப்பு.

'அப்போதை நிண்டாப் போல உங்களுக்கெண்டு அந்த இடம் முத்திரையொட்டிக் கிடக்கோ?,

—இது எதிர்வாதம்,

வாய்ப்பேச்சு வலுத்துக் கோஷ்டி கட்டியது. இந்தச் சமயம் பார்த்து என்பின்னல் நின்றவர், இஞ்சை பாருங்கோ ஆம்பிளையள் என்னமாதிரிச் சண்டையில்லாமல் நிக்கினம். பொம்பிளையள் நிக்கிற இடமெல்லாம் சண்டைதான்!' என்று தனது வர்க்கக்கொடியை உயர்த்தும் சமயம் பார்த்து வங்கியில் வேலை தொடங்கியது.

### என்ரைகாசு ஆறுயிரத்துச்சொச்சம் உள்ளே இருக்கு!

என்னைச் சூழ மீண்டும் சர்ச்சை கொடி கட்டியது. 'சும்மா சொல்லப்படாது பாருங்கோ... இது அநியாயம். நாங்கள் டவுனுக்குக் கிட்ட இருக்கிறனாங்கள். சுகமாக வந்து காசை மாத்திப் போடலாம் சில கிராமப்புறங்களிலை இருக்கிறதுகள் பாங்குக்குப் போறதுக்கு ஒரு ஐம்பதுரூபா செலவழிக்க வேண்டியும் வரும்!' என்று பேச்சை ஆரம்பித்தார் ஒரு சிறு வியாபாரி. பதில் சொன்னவர் ஓர் ஆசிரியர். படிப்பிப்பது போலச் சொன்னார். 'அது தான் பாருங்கோ என். எம். பார்லிமெண்டிலை சொல்லியிருக்கிறார். குஞ்சு மீன்களைக் காப்பாற்றப் போனால் சுறாக்களும் தப்பித்துவிடும்' என்று. இது சுறாக்களைப் பிடிக்கிற வேலைதான். நாங்களெல்லாம் குஞ்சுமீன்கள். நாங்கள் இந்தச் சிரமத்தைப் பார்க்கக் கூடாது.

'அது சரிதான். உங்கை நாட்டுக்காக எத்தனை தியாகங்களைச் செய்யுறுங்கள், நாங்கள் இதுவும் செய்யேலாதெண்டால்...!' இது இன்னுமோர் ஆசிரியர்.

'ஓமோம் ... ஒரு ஐயாயிரம் ஆறுயிரம் வைச்சிருக்கிற குடும்பகாரனை இது பாதிக்காது. அவன் நாலு பிள்ளையளிட்டை ஆயுரமாயிரமாகக் கொடுத்து மாத்திடலாம். ஆனல் [illegible] பதுக்கி வைத்திருக்கிறவன் 6 நாட்களுக்குள்ளை ஆள்தேடிச் செய்யிறது கஷ்டம். கனகாலமெண்டால் அவங்களும் அளிச்சிடுவன்கள்தான்- அதுக்காகத்தான் உடனே மாத்தச் சொல்றுன்கள்' என்ற அந்த ஆசிரியர் மீண்டும் நிதிமந்திரியின் மூளைவளத்தைதப்பற்றிப் புகழ்ந்தார்.

இதற்குள் வங்கிக் கட்டடத்துள் ஆரம்பமாகிய 'கியூ' வளைந்து.வளைந்து வீதியோரத்திற்கு வந்துவிட்டது. அரசாங்கச் சம்பளக் காசோலைகளை மாற்றுவோர் மட்டும் 'கியூ'வில் நிற்க வேண்டியதில்லை என அறிவித்ததைத் தொடர்ந்து ஒருவர்-(கிராமப்புறம்)நடுத்தர வயதினர் - முன்னேக்கி வந்தார். ஒரு பொலிஸ் அதிபாரி விசாரித்தார்:

'எங்கே செக்?'

நபர் 'செக்கை' எடுத்து நீட்டினார். 'செக்'கைப் பார்வையிட்ட பொலிஸ் அதிகாரி உதட்டைச் சுளித்தார்.

''இட் இஸ் நொட் எ டிபார்ட்மெண்ட் செக்!''

''இல்லை ஐயா, என்னுடைய 'கவர்ண்மெண்ட்' செக் உள்ளே இருக்கு. இது வேறை செக்!...''

''நோ ... நோ ... ஒன்லி டிபார்ட்மென்டல் செக்! ... நீர் உள்ளே போகமுடியாது''.

பொலிஸ்அதிகாரி கையை விரித்தவுடன் அந்த மனிதரின் 'பதவளிப்பு' அதிகமானது: ''நோ நோ! ... போ போ!'' என்ற பொலிஸ்அதிகாரியின் மிரட்டலையும்மீறி,

''என்ரை காசு ஆறுயிரத்துச்சொச்சம் உள்ளே இருக்கு ஐயா!'' என்று கத்தினார்.

பிறகு, ''இவங்கள் நம்புகிறாங்களில்லை... நம்பிக்கை கெட்ட நா...கள்!'' என்று முணுமுணுத்தபடியே 'கியூ'வில் தன் பழைய இடத்துக்குப் போய்ச்சேர்ந்தார்.

வெயில் உச்சியைத் தகித்தது. சோடா, மாம்பழ வியாபாரம் ஜாம் ஜாம் என்று நடந்தது. கொதிக்கும் வெய்யிலில் நின்று களைத்த 'குடு குடு' கிழவர்கள் கூடக் குழந்தைகளாக மாறி ஐஸ்பழம் சுவைத்த காட்சி மறக்க முடியாதது.

'மத்தியானச் சாப்பாட்டுப் பார்சல் கொண்டு வந்தால் நல்ல வியாபாரம் நடக்கும்' என்றார். ஒருவர் இளைஞரான அவரிடம் 'புதிய பட்ஜட் உங்களை எவ்வாறு தாக்கியிருக்கிறது என்று கேட்டேன்.

'சிகரட் விலையுயர்வு எக்கச் சக்கமாகத் தாக்கியிருக்கிறது.' என்றார் அந்த மாணவ இளைஞர் கவலையுடன்.

'பணத்தாள் மாற்றம் உங்களை என்ன செய்திருக்கிறது?' என்று இன்னொரு நகைக் கடைகார அன்பரிடம் வினவினேன். அவரது கண்களில் அவரையும் மீறிய திகில் தென்பட்டது. அதை மறைத்துக்கொண்டு 'வியாபாரம் மிகக் குறைவு. இருந்தாலும் நாம் கவலைப்பட ஒன்றுமில்லை. பணத்தைப் பதுக்கிக் கள்ளக் கணக்குக் காட்டிக்கொண்டிருக்கிறவர்கள் கவலைப்பட வேண்டிய விஷயம் இது!' என்றார். கூடவே 'போனல் போகட்டுமென்ற' ஸ்தாயியில், 'மிகப் புத்திசாலித்தனமாகத்தான் நிதிமந்திரி காரியம் செய்திருக்கிறார்... சாதாரணமாக இத்தனை பெரியநோட்டுகளை நாம் காண்பதில்லையே. இப்போது இவற்றுக்குக் கால் முளைக்கச்செய்திருக்கிறார்!'' என்றார்.

'புதியநோட்டுஇலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதும் பரம ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாமே.''

''இலங்கையிலும் ஓர் அரசியல்-பொருளாதார இரகசியத்தைக் காப்பாற்ற முடியும் என்பதை சரித்திரத்தில் முதற்தடவையாக நிரு

(20- பக்கம் பார்க்க)

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

அஜந்தாஸ்



பிடவை மாளிகை
162, கே. கே. எஸ். றேட்
யாழ்ப்பாணம்.
கிளைகள்:-
புஸ்பராணி ஸ்ரோர்ஸ்
பாங்சால்வீதி — யாழ்ப்பாணம்.
அஜந்தா ரெக்ஸ் பிரின்டேர்ஸ்
(பிடவை அச்சிடுபவர்கள்)
162 பி, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள்
அன்பர்கள் — ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
ரொலறம்ஸ்
46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7099

தித்திக்கும் இத்தீபாவளித்திருநாளில்
அனைவருக்கும் எமது இதயம் மலர்ந்த
நல் வாழ்த்துக்கள்!
பொருமால்ஸ்
(சேட் மாளிகை)
49, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள்- ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
கணேசன் ஸ்ரோர்ஸ்
(பிரபல பிடவை மாளிகை)
78, 63, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7169

ஈழநாடு
THE EELA NADU
தீபாவளி சிறப்பிதழ்

ஆனந்தா
திருக்குறட் கலண்டர்
தயாரிப்போர்
ஆனந்தா
அச்சகம்-புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 348 தந்தி 'அச்சகம்'

# தேவி சந்நிதியில்

கல்கத்தா நகரத்திற் பிரசித்திபெற்ற தக்ஷிணேசுவர ஆலயத்தில் தேவிக்குச் செய்யும் பூஜையை மிக்க வேண்டுதலின் பயனுக, தாம் செய்தற்குஒருவாறு உடன்பட்டருளினார்ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சதேவர். தாம் தேவிக்குப் பூஜைசெய்வதேயன்றி வேறெந்தப் பொறுப்புக்களையும் ஏற்கமுடியாமையைத் தெட்டத்தெளியத் தெரிவித்துவிட்டார், பரமகம்சர் கோயிலுக்கதிகாரியாயிருந்த மதுரநாதபாபு, பரமஹம்சரின் கோட்பாடு பரார்த்தம் என்று பெயர் வைப்பதிற்பயனே இல்லை. இவ்வுண்மை பரமஹம்சரின்பூஜையிலிருந்து தெளிவாகலாம். ஆன்மார்த்தம்-தன்பொருட்டு; பரார்த்தம்-பிறர்பொருட்டு.

ஒருமுறை தேவிக்குப் பூஜைசெய்து முடித்து, தேவியை நோக்கியபடி தியான சமாதி கைகூடும் நிலையில் நின்றார் பரமகம்சர். அந்நிலை கைகூடும் விஷயத்தில், காத்திராப்பிரகாரம் ஏதோ ஒரு தாக்கமுண்டாகிக் குழப்பம் வந்தது.

## பண்டிதமணி- சி- கணபதிப்பிள்ளை

களுக்கெல்லாம் கட்டுப்பட்டு பரமஹம்சர் பூஜை செய்தற்குடன்பட்டதையே முக்கியம் என்று கருதினார்.

பூஜை நடந்தது. தேவியின் உயர்ந்த அணியலங்காரங்களின் பாதுகாப்புக்கோ பிரசாதம்முதலியன பெறுதற்கோ ஸ்ரீராமகிருஷ்ணரை யாரும் எதிர்பாக்கவில்லை. பூஜை நடந்தது ஆன்மார்த்தமாகவே நடந்தது.

தம்மை முழுவதும் தேவிக்குஅர்ப்பணஞ்செய்து தேவியை அன்றி மற்றொன்றைக் காணுதவராய் சிலசமயங்களில் தம்மையும் காணுதவராய், தேவிபூஜையை நடத்தினார் பரமஹம்சதேவர்.

ஒருமுறை தேவியைத் தம் இருதயத்திலிருத்தி, தாமே தேவியாய்ப் பாவகம் முதிர்ந்து, மலர்களைத் தமது தலையிலே தூவி, தமக்குத் தாமே பூஜைசெய்து நிவேதனங்களையுஞ் சந்நிதியிலிருந்து தாமே உண்டார்.

கோயிற் சிப்பந்திகளுக்கு இராமகிருஷ்ணரின்செய்கை முழுப் பைத்தியச் செய்கையாய்த் தோன்றியது. மதுரநாத பாபுவுக்கு முறையிட்டார்கள். பயன் உண்டாகவில்லை. பாபு வாளாவிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மார்த்த பூஜை, அப்பூஜையைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற பக்குவர்க்கு உத்தம பரார்த்த பூஜையுமாமென்பதை நன்கு உணர்ந்திருந்தார் மதுரநாதர்.

ஆன்மார்த்த பூஜையே விரிந்து பரார்த்த பூஜையுமாய்ப் பிறர்க்கும் பயன்படத்தக்கது ஆன்மார்த்த மற்ற பூஜை யார்க்கும் பயன்படப்போவதில்லை அது கூலிக்குச் செய்யும் மாரடிப்பு. அதற்குப்

உடனே திடுக்கிட்டுத் திரும்பிப்பின்னே நோக்கினார்.

மதுரநாதபாபுவின் மாமியார்-அந்தக் கோவிலைத் தாபித்த எஜமாட்டி-தேவியில் மிகுந்த பத்திசிரத்தையுள்ளவர்-பெயர் ராணி ராஜமணிதேவி - தோழிகள் புடைசூழக் கும்பிட்டுக் கொண்டு நின்றார்.

அந்தச் சந்தர்ப்பத்தில், இராமகிருஷ்ணர், 'இங்கேயும் அப்படியா' என்று உறுமிக்கொண்டு, கும்பிட்டு நின்ற ராணிராஜமணி தேவிக்கு ஓங்கி அடித்துவிட்டார். தாம் அடித்ததை அவர் அறிவாரோ அறியாரோ யார் அறிவார்! உறைத்த நோக்குடன் பரவசராய் நின்றார் பரமகம்சர்.

'முழுப் பைத்தியத்தின் செய்கையைப் பாருங்கள்' என்று சொல்லிக்கொண்டு ஓடோடி வந்து பரமகம்சரைச் சூழ்ந்தார்கள் கோயிற் சிப்பந்திகள்.

ராணி ராஜமணிதேவி தமது கைகளை உயர்த்தி, பரமகம்சரின் மேனியை யாருந்தீண்டக்கூடாதுஎன்ற முறையில் தடைசெய்துகொண்டே, ஒருபுறம் ஒதுங்கி, அழுதழுது, தேவியின் தூயசந்நிதியில், தானே குற்றஞ் செய்தவள்' என்பதை ஒப்புக்கொண்டார்.

ராணிராஜமணி, தேவி சந்நிதியில் கும்பிட்டு நின்றாராயினும், அவர் மனம் அதில் ஈடுபடாமல், கோர்ட்டில் நடத்தும் வியாச்சியம் ஒன்றை நினைத்து அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. அந்த மன அலைவு சந்நிதியின் தூய்மையைத் தாக்கிப், பரமகம்சதேவரின் சமாதிநிலைக்குக் குழப்பஞ் செய்துவிட்டது. அதனுல் ராணிதண்டனைக்காளானார்.

(18-ம் பக்கம் பார்க்க)

## 'பூத்தது தீபாவளி'

—இ. நா. —

போனது நேற்றைப்
  பொழுது கிழக்கினில்
பூத்துப் பொலிந்தது நற்பொழுது
  ஆனது வீட்டினில் அன்புச் சுவையமு
தாக்கிடப் பூத்தது தீபாவளி.

துன்ப இருட்கணம்
  தூர விலகிட
துல்லிய நன் ம துலங்கிடவே!
  இன்ப மிசைந்தெம தில்லம் இலங்கிட
இங்குதீ பாவளி பூத்ததடா!

அன்புத் துணைவி!
  முகத்தினி லேயுயர்
அன்பில் மலர்ந்துள புன்னகையின்
  இன்பம் ஒளிபெற இல்லம் பலம்பெற
இங்குதீ பாவளி பூத்ததடா!

காலப் புதுமையைக்
  காட்டிடும் சேலையின்
கோலம் குலவிடக் குங்குமத்தின்
  சீலம் கமழ்ந்திட சீர்த்தி சிறந்திடத்
தீபாவளித் தினம் பூத்ததடா!

பாவ இருளின்
  பலங்கெட வேயுயர்
பண்பின் நலங்கள் பரிமளிக்க
  மேவும் மலர்ச்சி விளைந்ததடா அதன்
மேன்மையில் உண்மை மிளிருதடா!

பூத்தது நன்மைகள்
  பொங்கும் துயர்கெடப்
புண்ணியம் கண்ணியம் ஓங்கிடவே
  ஏத்தி இறைவனை என்றும் துதித்துமே
இன்பத் தமிழிசை கொட்டுவமே.

# "தீய சக்திகளின் அழிவு அவதார நிகழ்ச்சியினுல் ஏற்படும்"

## இந்தத் தத்துவ விளக்கமே தீபாவளி

க. குருநாதன்

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகையில் தீபாவளியும் தலைசிறந்தது தீபாவளியென்றால் ஒளிவரிசை எனப் பொருள்படும். (தீபம்-ஒளி; ஆவளி - வரிசை) இத்தினத்தைச் சிறுவர் முதல் விருத்தாப்பியர் வரை சகலரும் தம் இன்பந்துக்களுடனும் நண்பர்களுடனும் மகிழ்ச்சித் திருநாளாகவும் மங்களமான நாளாகவும் கொண்டாடுகின்றார்கள் இத்திருநாளைக் கொண்டாடுவதற்கு புராண இதிகாசங்கள் அடிப்படையாக இருக்கின்றன அட்டூழியமிக்க நரகாசுரனென்னும் அரக்கத்தன்மைமிக்க ஒருவனை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தன் அகதர்மினி சத்யபாமையின் துணையுடன் வதம்செய்தநாளே இந்நன்நாள் எனக்கூறுவர். அவ்வரக்கனால் ஹிம்சிக்கப்பட்ட தேவர்கள் காத்தற் கடவுளாம் மகாவிஷ்ணுவிற்குச் செய்த முறையீட்டின் காரணமாக பூரண அவதாரமாக அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண பிரானே நரகாசுரனைச் சங்காரஞ் செய்தருளினார் எனவும் இதிகாசங்கள் கூறும். அவரவர்களுடைய வேண்டுகோளின்படியே அந்நாளில் அனைவரும் எண்ணெய்தேய்த்து மங்கள நீராடிப் புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றி உற்றார் உறவினர் யாவருடனும் சந்தோஷமாகக் கொண்டாடுவார்கள். தென்னகத்தில் மட்டுமன்றி வட இந்தியாவிலும் இவ் விழாக் கொண்டாடப்படும் வழக்கம் இருக்கின்றது

தீபாவளியின் தாற்பரியத்தை இன்னொரு விதத்தில் நோக்கினால் தர்மத்தைச் சார்ந்த தெய்விகப் பாங்குடையவர்களுக்கும் (சுரர்க்கும்) அதருமத்தையே தமது வாழ்க்கையில் கைக்கொள்பவர்களுக்கும் (அசுரர்க்கும்) ஏற்படும் போராட்டத்தைச் சித்தரிப்பதாகவும் பரமாத்மாவின் அருள் கிட்டும்பொழுது தீயசக்திகள் மாய்கின்றனவென்பதையும் குறிக்கும். ஆகையினால் தீமை அழிந்து உலகில், அறம், தர்மம் ஆகியன நிலைநாட்டப்படுவதாகவும் அக இருள் ஒழிந்த மக்கள் சாந்தியையும் சந்துஷ்டியும் பெறுவதாகவும் கருதலாம்.

இப்புண்ணிய தினத்திலே யாவரும் புலரிக்காலத்தில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வதை முக்கிய கடமையாகக்கொள்வார்கள். இதையே அன்றைக்கும் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது கங்காஸ்நானம் ஆச்சா எனக் குசலம் விசாரிப்பதுபோல் கேட்கும் பழக்கம் இந்தியாவில் இருந்துவருகின்றது. மேலும் அன்றைக்கு எண்ணெய் ஸ்நானம் செல்வதில் லட்சுமி தேவியினதும், கங்காதேவியினதும கடாட்சம் கிடைக்கின்றதென்பதாக ஐதீகம் இதைதவிர வணிகப் பெருமக்களும் தம் பழைய கணக்குகளை முடித்துப் புதுக்கணக்குகளைத் தொடங்கும் வழக்கமும்

(18-ம் பக்கம் பார்க்க)


எல்லோருக்கும் எமது உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்
(பிரபல இசைக் கருவி விற்பனையாளர்களும் பழுது பார்ப்பவர்களும்)
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய், அருளம்பல முதலியார் குமாரர் தெல்லிப்பழை அம்பலவாண பண்டிதர்

கோப்பாயில் இருந்தவரும், தற்காலம் யாழ்ப்பாணத்தில் வழங்கிவரா நின்ற தேசவழமை என்னும் நியாயப் பிரமாணத்தைச் சேர்த்தவருள் ஒருவரும், உலாந்தாத் துரைத்தனத்தாரிடம் வண்ணார அதிகாரம் எனுங் கண்ணியங்கொண்ட உத்தியோகம் பெற்று விளங்கிய வேளாளப் பிரபுவாகிய அருளம்பலமுதலியாருடைய கனிட்ட புத்திரர் இவர் என்பது பாவலர் சரித்திர தீபகக் (பக். 18) கூற்று.

தேசவழமைச் சட்டம் 1707-ல்சேர்க்கப்பட்டதென ஜே. எச். மாட்டின் (J. H. Martyn) அவர்களின் யாழ்ப்பாணச் சரித்திரக் குறிப்புகள் (பக். 146) கூறும். எனவே, அருளம்பல முதலியார் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்திருத்தல் வேண்டும். அம்பலவாண பண்டிதரோ பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனச் சகல தமிழ்ப்புலவர் சரித்திரங்களும் கூறும். ஆகவே அம்பலவாண பண்டிதர் தேசவழமைச் சட்டத்தைச் சேர்த்த அருளம்பல முதலியாரின் புத்திரரல்லர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த அருளம்பல முதலியார்ஒருவரின் குமாரராதல் வேண்டும்.

அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாணமுதலியார் எனவும் அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாணபிள்ளை எனவும் இவர் உதயதாரகைப் பத்திரிகை இதழ்களில் குறிப்பிடப்படுகின்றார்.

அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாணபிள்ளை அவர்கள் இலங்கைத்தீவை அரசாட்சி பண்ணியதேசாதிபதியவர்களை (? Lord Torrington), கோப்பாயில் தங்கள் தோட்டத்து வங்களாவில் வரவழைத்து விருந்துபசாரஞ்செய்து மங்கல வாழ்த்துப்பத்திரம் வழங்கினரென உதயதாரகை (11-4-1850) இதழ் கூறும்.

இலங்கைச் சட்ட நிருபண சபைக்குத்(Legislative Council) தமிழர் பிரதிநிதியாக அம்பலவாண முதலியாரை அரசாங்கம்நியமிக்கவேண்டுமெனக்கோரி 1851-ல் வண்ணார் பண்ணையில் கூடிய கூட்ட விவரத்தில் அவர் தகப்பன் அருளம்பல முதலியார் 1830-ம் ஆண்டளவில் உடுப்பிட்டியில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்ததாகவும் அதனை அம்பலவாணமுதலியார் பரிபாலித்து வந்ததாகவும் உதயதாரகை (25-9-1851) இதழில் ஒரு குறிப்பு உண்டு.

தமிழ்ப்புலவர் சரித்திரம் (1916) அம்பலவாண பண்டிதர் பற்றிக் குறிப்பிடுவது வருமாறு:

இவர் ஊர் யாழ்ப்பாணத்துள்ள தெல்லிப்பழை. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு 37 வருடங்களுக்கு முன். இவர்கோப்பாய்அருளம்பல முதலியாருக்கு மைந்தர். சேனாதிராச முதலியாருக்கு மாணவர். தமிழ்மொழியிற் பல நூல்களும் கற்றவர். பாரதம், இராமாயணம், இரகுவமிசம்முதலியபெருங் காப்பியங்களிலும் பெரும் பயிற்சியுடையவர். காவிய சாத்திர விநோதத்தாற் பெரிதுங் காலங்கழித்தவர். சேனாதிராய முதலியார் பாடிய நல்லை வெண்பா, நீராவிக்கலிவெண்பா என்பவைகளைப் பரிசோதித்து அச்சிட்டவர்.

நல்லைவெண்பா, நீராவிக் கலிவெண்பா இரண்டினதும் மூலம் மட்டும் ஒரே நூலாக வெளியிடப்பட்ட முதற்பதிப்புப் பிரதியொன்றினை வட்டுக்கோட்டை ஸ்ரீ க. குருமூர்த்திசிவாச்சாரியர் அவர்களிடம் பார்த்தேன். 1878-ம் ஆண்டில் சென்னையில் அச்சிடப்பட்டிருக்கிறது. நல்லூர் அப்புக்குட்டிக் குருக்கள், இருபாலை, அமரசிங்கமுதலியார், தெல்லிப்பழை, சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் சாற்றுகவிகள் கொடுத்திருக்கின்றனர். இரண்டாம் பதிப்பு (நல்லை வெண்பா மட்டும்) புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளை எழுதிய குறிப்புரையுடன் 1942-ல் வெளிவந்துள்ளது. ஒன்றிலும் அம்பலவாண பண்டிதர் பற்றிய குறிப்புக்கள் இல்லை.

அம்பலவாண பண்டிதர் பற்றிப் பாவலர் சரித்திர தீபகம் (1886) மேலும் கூறுவதாவது:

முன்னேயாழ்ப்பாணத்தில் இருந்த பேர்சிவல் தேசிகருக்குத் (Rev. Peter Percival) தமிழாசிரியராய்ச்சிலகாலம் கல்வி கற்பித்தவர். பல தருணங்களில் இவரைக்கண்டு சம்பாஷித்திருக்கிறோம். இவரது தௌகித்திரி யாழ்ப்பாண மாகாணக்கோர்ட்டில் நியாயதுரந்தரராய் இருக்கும் மெஸ். பிரக்தர் அருளம்பலத்துக்குப் பாரியாராய்ச் சீவிக்கிறார். சுற்றமித்திரராம் பலர் கோப்பாய் ஆதியாம் இடங்களில் உளர். வழக்கமாய் மூத்தப்பு எனும் நாமத்தால் அழைக்கப்பட்ட இவர்ஏதும் ஒரு நூலியற்றாதபோதும் பல தனிப்பாக்கள் பாடினர்.

நல்லூர் சரவணமுத்துப் புலவரும், கோப்பாய் அம்பலவாண பண்டிதரும், ஆறுமுக நாவலரும் முறையே பேர்சிவல் தேசிகருக்குத் தமிழ் கற்பித்தனர் என்பது பெறப்படுகின்றது.

இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் கலைச்செல்வி (ஆனி 1960) இதழில் வெளியிட்ட கனகி புராணப் பாடல்களுள்ஒன்று கோப்பாய் மூத்தப்பு என்னும் பெயருள்ள ஒருவரைப் பற்றியது.

தாமரை குமுதம் மலையு
டன் அகிலும்
தண்முகம் வாய்தனங்
கூந்த
லாமென உவமை படைத்
திடு கனகே!

(5-ம் பக்கம் பார்க்க)

வட்டுக்கோட்டை

## மு. இராமலிங்கம்

எழுதுவது

---

திருமால் புகழ் பாடவந்த

## தீபாவளித்திருநாள்

— திமிலைக்கண்ணன் —

தீபநாளிலே தீப மிட்டுநாம்
திருமால் பதம் போற்றுவோம்—கொடும்
பாபத்தீ வினை இருள லநற்
பண்பால் உயர் வெய்துவோம்

மெய்யொளி யினால் வையகத்திலே
மேன்மை நிலை காணுவோம்—உயர்
தெய்வநன் நெறித் தவக்கனலினால்;
சாவையும் நாம் வெல்லுவோம்.

மும்மலத் துளே முதன்மையானதை
முதலில் அடித் தோட்டுவோம்—இனி
நம்மைதாம் அறிந் தநீதியாம்
நரகன் வதை செய்குவோம்.

எம்முளே கொடும் அசுரன்வாழ்வதை
இனிநாம் பொறுத் துய்வமோ? அட
நம்துணையெனும் சக்தி கண்டவன்
நடுங்கச் சிரம் கொய்குவோம்.

தீப ஆவளித் திரு நாள்தரும்
சிறந்த உயர் தத்துவம்—இதைத்
தீபநாளிலே நாம் உணர்ந்தினித்
திருமால் பதம் போற்றுவோம்

---


யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
V. K. இராசரத்தினம்
பிரபல
றேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்.
95, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
ஈஸ்வர் கோப்பறேசன்
அன்
றேடியோனிக்
(பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

அன்பர்கள்-ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

விக்னேஸ்வரா
புடவை மாளிகை
பஸ் நிலையம் முன், யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!
தங்கள் பட்டு உடைகளை நீண்டகாலம் பாவிக்க வேண்டுமானால் எங்களிடம் றைக்கிளீன் செய்ய ஒப்படையுங்கள்.
30 ஆண்டு காலமாக
மிக மென்மையானதும், பாதிப்பேற்படாததுமான விலையுயர்ந்த திராவக வகைகளால்
றைக்கிளீன் செய்வதில் தேர்ச்சி பெற்றதே எமது
சன்லைற் றைக்கிளீனேர்ஸ்
தாபனம்
- குறித்த தவணைக்கு உடைகளை வழங்குதல்.
- தூர இடங்களில் உள்ளவர்கள் பார்சலில் உடைகளை அனுப்பினால் றைக்கிளீன் செய்தபின் பார்சல் மூலமே அனுப்பி வைத்தல்.
ஆகிய சேவையே எமது சேவை.
சன்லைற் றைக்கிளீனேர்ஸ்,
ராணி தியேட்டருக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 474
தந்தி: ''றைக்கிளீன்''
கிளை ஸ்தாபனம்:
சாயி றைக்கிளீனேர்ஸ்,
வெலிங்டன் தியேட்டர் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசித் தொடர்பு: 474


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு வயதிலேயே ஆடத் தொடங்கியவர் இந்த நடனச் செல்வி மேனகா சிவசம்பு!



பரதக்கலை! ஆம் அது பாவையர்களுக்குரிய தனிக் கலை. அக்கலை எல்லோரிடமும் குடிபுகமாட்டாது ஒரே ஒரு சிலரிடம்தான் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொள்கிறது. மாதவி மகள் மணிமேகலையிடம் அவளது ஏழாவது வயதினில் பரதக் கலை குடிபுகுந்தது. ஆனால் பாரதிகண்டபுதுமைப்பெண்ணின் தோற்றமும், ஆடலுக்குத தன்னிச்சையாகவே வளைந்து கொடுக்கும் மெல்லிய உடல் வனப்பும், கதை பேசும் நயனங்களும் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற செல்வி மேனகா சிவசம்புவிடம் பரதக்கலை நான்காவது வயதிலேயே குடிபுக ஆரம்பித்துவிட்டது.




நான்காவது வயதில் அவர் உள்ளத்தில், அத்திபாரம் போட்ட பரதக்கலை பெற்றோர்களின் ஊக்கமும் ஆர்வமும் உறவினர்களின் கடுமையான எதிர்ப்பும், நாட்டியச் செல்வி மேனகாவின் உள்ளத்தில் ஊற்றெடுத்த ஆர்வமும் அவரை இன்று ஈழத்தில் ஒரு பிரபலமான நாட்டியச் செல்வியாக மட்டுமல்ல, பரதக்கலையின் வளர்ச்சிக்கோர் ஆசானுமாகத் திகழச் செய்கிறது.

கொழும்பு கொட்டாஞ்சேனை வாசல் ரோட்டில் உள்ள அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்தேன்

## பாடினால் ஆடுவேன்

''உங்களது கலைவாழ்வின் ஆரம்பம்பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?''

''ஆம்! விளக்கமாகக் கூறுகிறேன்'' என்று கூறிய செல்வி மேனகா, என் பக்கத்திலிருந்த தனது தங்கையாரை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே. ''எனக்கு குழந்தைப்பருவத்திலே நடனத்தில் ஆர்வம் ஏற்பட்டது. வீட்டில் ரேடியோவில் பாட்டுக்கள் ஒலிக்கும்போதெல்லாம் அதற்கேற்ப நான் ஆடத்தொடங்குவேன். இதைக்கண்ட என் பெற்ரேர், என்னைத் திருமதி கமலா ஜோன்பிள்ளையிடம் ஒப்படைத்தார்கள். அப்பொழுதே நான் பாடசாலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பலரின் பாராட்டுதல்களைப் பெற்றேன். 1967-ல் முன்னாள் விளையாட்டுத்துறை தேசிய சேவைகள் அமைச்சர் திரு. பி. ஏ. சுகததாசா அவர்களின தலைமையில் அரங்கேற்றம்நடந்தது. முன்னாள் பெற்ரோலியம்கூட்டுத்தாபன அதிபர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை பரதக்கலையில் எனக்கு ''டிப்ளோமா'' பட்டம் தந்தார்.

''பரதக் கலையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் உங்கள் உயர்படிப்புக்கு இடையூறாக இருந்ததா?' என்றேன்.

'இல்லை! 1967-ல் இலங்கைப் பல்கலைக்கழகப்பீடத்துக்கு அனுமதி கிடைத்தபோதும் 'கலையை வளர்க்கவேண்டும்' என்றஎன் தணியாத ஆர்வத்தினால் அதை உதறித் தள்ளினேன் எனினும் நான் அதுபற்றி எப்போதும் கவலைப்படுவதில்லை'' என்றவர்- தனக்கு நாட்டியம் சொல்லித்தந்தவர்களைப்பற்றிச் சொன்னார்.

''எனது ஆரம்ப குருவாக திருமதி கமலா ஜோன் பிள்ளை அவர்களும், அதன் பின் நாட்டிய கர்த்தா தஞ்சாவூர் சிறீ கோவிந்தபிள்ளை அவர்களுமாகும்.''

''தமிழகத்தில் பயிற்சியில் இருந்தபோது அங்கு ஏதாவது நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியதுண்டா?'' என்ற என் கேள்விக்கு அவர் சொன்ன பதில்:-

''தமிழகத்தில் தண்டியார் பேட்டையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளிலும், அடையாறு பரதசூடாமணி அதிபர் திரு. கே. லட்சுமணன் அவர்களுடைய நடனப்பள்ளியின் ஆண்டுவிழாவிலும் எனது நாட்டிய நிகழ்ச்சி இடம்பெற்றது.''

## கலைக்குடும்பம்

இப்பொழுது நாட்டியாலயா வைத்துநடாத்திவரும் செல்வி மேனகாவின் குடும்பமே ஒரு கலைக்குடும்பம். அவரது சகோதரி கூட இப்பொழுது பரதக்கலைபயின்று வருகின்ருர். தான் கற்றதை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கத் துடிக்கும் இவர் நிறைந்த குருபக்திகொண்டவர், அடையாறு கே. லட்சுமணனிடம் மூன்று மாதம் நட்டுவாங்கம் கற்றபோதும் அவரைத் தனது கலைத்தெய்வமாகப் போற்றும் இவர், திருமதி கமலா ஜோன் பிள்ளைமீது அபாரபக்தியுடையவர். சினிமாவில் சேரும் எண்ணம் உண்டா? என்ற கேள்வியை எழுப்பியவுடன், ஒரேயடியாக சினிமாபற்றி அவரது மனப்பயத்தை வெளிக்காட்டி தனக்கு சினிமாவில் நடிக்கும் எண்ணம் கனவில்கூட உதிக்கவில்லையே என்று பெருமூச்சுடன் கூறிமுடித்தார். அத்துடன் நானும் எனது பேட்டியை முடித்துவிட்டு விடைபெற்றேன்.

— மு. வாமதேவன்.

# கோப்பாய்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அனநடையாய் மொழிக் குயிலே;
பாமரு மாலை பாடிட வல்லோன்
பகர்ந்திடு மதன நூல் படித்தோன்
காமரு கோப்பாய் உறையு மூத்தப்பு
கன்னிநீ காணுதி யென்ருர்

இங்கு குறிப்பிடப்படும் கோப்பாய் மூத்தப்பு என்பவர் அம்பலவாண பண்டிதர் தானே என ஆராய்வது அறிஞர் கடன்.

அம்பலவாண பண்டிதரின் கல்விப்பெருமை, செல்வப் பெருமை, சிவபக்தி, வாக்கு வன்மை முதலியவைகளை அவர்மீது சி. வை. தாமோதரம்பிள்ளை பாடிய சரம கவிகள் இனிது விளக்கும். அவற்றுள் ஒன்று இது.

தெல்லி நகரந் திருவிழந்த தோதமிழ்மா
தில்லந் தனையின் றிழந் தாளோ-சொல்லரிய
வித்தார வாய்மை விறலம் பலவாணன்
செத்தானென் ருரோ சிவா.

இவரைப் பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது இதனைப் படிக்கும் அன்பர்களுக்கு இவரைப்பற்றிய வேறுவிவரங்கள் தெரியவரின் அவற்றை நேரிலோ இப் பத்திரிகை மூலமோ தெரிவித்தால் நன்றியுடன் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.




அன்பர்கள்-ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
நியூ லங்காபாம்
உரிமையாளர்:
எஸ். கே. துரைசிங்கம் ஜே. பி.
(பிரபல ஒட்டுமாக்கன்று வியாபாரி)
இணுவில்.



எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!



விவசாயிகளுக்கும் — வீட்டுப் பாவனையாளர்களுக்கும்
ஒருமுக்கிய அறிவித்தல்
இலங்கையிலேயே முன்னணி வகிக்கும்
'சென்ரிக் (Centric)''
தண்ணீர் பம்புகளுக்கு வடமாகாண விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறேம்
என்பதை இப்புனிதநாளில் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேம்
எந்த ஆழமான கிணறுகளையும் இறைக்கக்கூடிய சக்திவாய்ந்த 1/2 ஹோஸ் பவர் தொடக்கம்
3 ஹோஸ் பவர் வரையுமுள்ள பம்புகளை ஒருவருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
வடமாகாண பிரதான மின்பொருள் விற்பனையாளர்கள்:
நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
ஸ்ரான்லி [illegible] (போன். 7016) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. க. க. வுக்குஒப்பரேஷன் கிடையாது

மனிதனுக்கு உண்டாகும் க, க க (கவலை, கரைச்சல், கஷ்டம்) காரணமாக ஏற்படும் மனக்கோளாறினல் பலவிதமான நோய்கள் அவனைப் பீடிக்கின்றனவென்றும், உடலுறுப்புகளோடு சம்பந்தப்பட்ட நோய்களை உள்மருந்து, சத்திர சிகிச்சை மூலம் தீர்ப்பதுபோல இந்நோய்களை இலகுவில் தீர்த்துவிட முடியாதெனவும் முந்திய கட்டுரைகளில் கண்டோம்.

## மன வியாதி—4

மனத்தில் கோளாறு ஏற்படும்போது நரம்புகளும் தாக்கப்படுகின்றன. மனம் மூளையின்மூலம் வேலை செய்கிறது. உடலிலுள்ள நரம்புகள் எல்லாவற்றிற்கும் தலைமைக்காரியாலயம் மூளையில்தான் வீற்றிருக்கிறது. ஆகவே மனத்தின் வழியாக மூளை தாக்கப்படும்போது நரம்புகளும் தளர்ச்சியடைகின்றன.

நரம்புத் தளர்ச்சியினுல் உண்டாகும் தாங்கிக்கொள்ளமுடியாத இலகுவில் சொஸ்தமாகாத வியாதிகளில் ஒன்று அஜீரணம்.

மற்ற வியாதிகளைப் போலவே இதுவும் உடல் உறுப்புகள் சேதப்படுவதாலோ அல்லது அவை முறைப்படி இயங்காதமையினுலோ உண்டாகலாம். அன்றி மனவியாதியினுலும் உண்டாகலாம்.

மிதமிஞ்சி உண்ணுதல், நேரம் தவறி உண்ணுதல், உணவு சரியாக மெல்லுப்படாதபடி 'அவுக் அவுக்' என்று விழுங்குதல், இலேசில் ஜீரணிக்காத உணவை உண்ணுதல் இவையெல்லாம் வயிற்றில் அஜீரணத்தை உண்டுபண்ணும் செயல்கள். அஜீரணத்தைத் தொடர்ந்து வயிற்றில் வாய்வு குடிகொள்ளலாம். அல்லது குடலில் புண் ஏற்படலாம் அல்லது கட்டி தளரலாம் இந்த நோய்கள் நடைப்பிழையால் உண்டாகும் உடற்கூறு சம்பந்தமானவை. ஆதலால்தக்க மருந்துகளால் அவற்றை உடனே குணப்படுத்திவிடலாம்.

ஆனல் நாகரீகம் வளர்ந்து வரும் இக்காலத்தில் இந்நோய்களில் ஐம்பது வீதமானவை மனக்கோளாறினுலும் நரம்புத் தளர்ச்சியாலும் உண்டாகின்றனவென்று மனநோய் நிபுணர்கள் கூறுகிறுர்கள்.

நமது ஜீரணக் குழாய்க்குள்ளே அதன் வெவ்வேறு பகுதிகளையும் மூளையையும் தொடுக்கும் நூற்றுக்கணக்கான பெரிய, சிறிய நரம்புகள் வருகின்றன! இந்நரம்புகள் முன்னெரு காலத்தில் எமக்கு மிகவும் உபயோகமாயிருந்து இப்பொழுது அவ்வுபயோகம் கெட்டு அநாவசியப் பொருட்களாய் மாறிவிட்டன.

நமது முன்னோர்கள் காட்டிலும் மலையிலும் வாழ்ந்த காலத்தில் துஷ்டப் பிராணிகளோடும் வேறு இயற்கைச் சத்துருக்களோடும் தினமும் சண்டை போட்டு வாழ வேண்டியிருந்தது. அந்த

— சுநாதன் —

நிலைக்கேற்ப அவர்களுடைய உறுப்புக்களும் அமைக்கப்பட்டிருந்தன. துரத்துகின்ற வேங்கைப் புலிக்கு தப்பியோடிப்போய் மரஉச்சிக்கு ஏறவேண்டுமாக்கும். உடனே தேகத்திலுள்ள சகல நரம்புகளும் தொழிற்படஆரம்பிக்கும். மூளையுடன் தொடர்பு கொண்ட நரம்புகள் ஜீரணக் குழாய்க்குள் எவ்வித வேலையும் நடவாதபடி தடுத்துவிடும். ஜீரணிப்பு நின்று போகும் அதேசமயம் இந்நரம்புகள் அட்றனலின் முதலிய சில திரவப் பதார்த்தங்களை இரத்தக் குழாய்க்குள் செலுத்தி வேகமாய் ஓடிப்போய் மரத்தில் ஏறிக்கொள்ளக்கூடிய மேலதிகமான பலத்தை ஊட்டும்.

இன்றே நிலைமை வேறு இன்றிருப்பவை வேங்கைப் புலிகளல்ல, கடன் முதலிய பொருளாதாரப் புலிகளே. இவற்றைக் கண்டு மனிதன் ஓடிப்போய் மரத்தில் ஏறுவதில்லை. ஆயினும் வேங்கையைக் கண்டபோது உண்டான மனக் கிளர்ச்சியும் நரம்புத் தளர்ச்சியும இப்பொழுதும்உண்டாகின்றன.

நரம்புகள் ஜீரணப்பை நிறுத்திவிடுகின்றன. அட்றனலின் முதலியன இரத்தத்துக்குள் பாய்ச்சப்படுகின்றன. மனிதன் அவற்றை உபயோகிப்பதில்லை. ஆதலினல் உடலுக்குள் பலவித கோளாறுகள் ஏற்படுகின்றன.

குடலில் புண் உண்டான ஒருவர்டாக்டரிடம்போனல் அவர் கொஞ்சநாளைக்கு ஓய்வெடுக்கும்படியும் கடுமையாக மனதை அலட்டிக்கொள்ளவேண்டாமென்றும் இரண்டு மணிக்கொரு

(18-ம் பக்கம் பார்க்க)

அன்பர்களுக்கும்- ஆதரவாளர்களுக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
ஹரன் ஜுவல்லர்ஸ்
(பிரபல நகை வியாபாரிகள்)
(R. G. பில்டிங்)
50, கன்ஞதிட்டி — யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
சாரதாஸ்
பிடவை மாளிகை
27/3 மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்

## தீபதரிசனமே பாவவிமோசனம்

[புலவர் சிகாமணி வ மு இரத்தினேஸ்வரன்]

சீர்மலி தீபம் திமிர மகற்றும்
பார்மலி அசுரக் கிளையின் பண்பால்
மக்களன்றி மன்னிய தேவரும்
தொக்க பலவித தோற்ற வுயிர்களும்
இன்ப வாழ்வை இனிது போற்ற
துன்பந் துடைக்கும் தூய கிருஷ்ணன்
தன்பத் தினிசத்திய பாமா உடன்வர
நரகா சுரனை நணுகி அவன்தவம்
பரவுறு நான்செல பாங்காய்ச் சென்று
செப்பருமைப்பசி சிறந்த பதினன்
காகிய திதியில் அவனல் எய்திய
துன்பா மிருள்கெட தூயதாம் நீரில்
மூழ்கி யாவரும் முழுமதி பெற்றூர்
காலையுடன் மதுவின் கொள்மை மாறப்
போற்றுக! முழுகுக! பொன்னிகர் நாளே

## தீபாவளித் திருநாள்

— கொற்றை பி, கிருஷ்ணனந்தன்

சேலைக் கடைகளில் சென்று துணிகளை
சீருற வாங்கியே மங்கையர்கள்
நாலு புறத்துள்ள தோழியருமதை
நாடக் கதைக்குமோர் நற்றினமாம்

பட்டாசுக் கட்டு வெடித்திடுமாம் சிறு
பையன் மூலமும் களித்திடுமாம்
கட்டிலா இன்பக் களிவருமாம் துயர்
காணுத நன்மைகள் சேர்ந்திடுமாம்

## இறைவன் களிக்கும்நாள்

— அடம்பனூர் இளவல் —

தீபா வளியைக் கொண்டாடும்
செல்வச் சிறுவர்க் கொடுவார்த்தை
பாவம் அழிந்து பண்பாட்டை
பரமன் தந்த திந்நாளாம்

அரக்கன் அழிந்த நாளிதுவாம்
அறமே தழைத்த நாளிதுவாம்
இரக்கம் அன்பு ஈகையிலே
இறைவன் களிக்கும் ஒருதினமாம்.

## கவிஞனின் ஆவல்!

— கரவைக்கவி —

நேர்மை நிலவிட தீமை மழுங்கிட
சீர்மை சிறந்திட கூர்மை மிகுந்திட
நேர்மைப் பூமி நிமிர்ந்தே நன்மை
சார்ந்த மனிதரை எப்போ காண்பேன்?

அறிஞரும் கலைஞரும் மற்றைய மனிதரும்
அறிந்த நாளாம் தீபாவளிநலம்
செறிந்தவிவ் உலகில் சீருறும் நன்மை
செறிந்த நாளை எப்போ காண்பேன்?

## புத்தம் புதியநாள்

— சிவம் —

'கொக்கரக் கோ'வென கூவின சேவல்கள்
பக்க மெலாங்கருங் காக்கை கரைந்தன
செக்க சிவந்துகீழ் வானிடை வெய்யவன்
மக்கள் விழித்திட மலர்முகம் காட்டினன்

எத்தனை இன்பெழில்? எங்கும் இறைவனே
வைத்துள யாவிலும் மூச்சு மலர்ந்தது
புத்துடை பூண்டனர் தீபா வளியென
அத்தனை ஏத்தினர் சித்தம் பொலிந்திட.

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
BOSCH SERVICE
உங்களுக்குத் தேவையான பொஷ் Bosch
உதிரிப்பாகங்களுக்கு
வடபகுதி ஏகவினியோகஸ்தர்களாகிய எங்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்
சமுத்திராட் ரேடஸ் லிமிட்டட்
2?/2 ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம். தொலைபேசி: 7236. தந்தி: "சமுத்திரா"
கொழும்புக் கிளை:
18, ரேகினிவீதி, கொழும்பு - 6.
தொலைபேசி: 83755. தந்தி: "தியாகரி
வல்வெட்டித்துறைக் கிளை:
யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாற்றம்

## தீபாவளிக் கதை

### "சிந்தனைச் செல்வன்"

மழை இரவு முழுவதும் பெய்து ஓய்ந்திருந்தது.

காலை ஏழுமணிக்கு மேலாகியும் மழை இருள் அகலவில்லை. நாளைக்குத் தீபாவளி. இதை நினைத்தபோது குமாருக்கு மனதில் ஏக்கம் எழுந்தது.

படுக்கையை விட்டெழுந்தவன் காலைக்கடன்களைக் கூட முடிக்க மனமின்றி தரையில் விரிக்கப்பட்டிருந்த கந்தல் பாயில் அமர்ந்துகொண்டான்.

அடுக்களையில் தேநீர்தயாரித்துக்கொண்டிருந்த அவனுடைய தாயார் கறள்கட்டிப்போயிருந்த பழைய நெஸ்பிறே பேணியினுள் கையைவிட்டு அங்கே ஒட்டியிருந்த சீனித் துகள்களை வழித்தெடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் மனதிலும் ஏக்கம். நாளைக்குத் தீபாவளி!

அக்கம்பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் அழகாகப் புதுச் சட்டை உடுத்தி உற்றார் உறவினர் வீடுகளுக்குச் சென்று மகிழ்ச்சியாய் இருக்கப்போகிறார்கள். தன்னுடைய பிள்ளைகள்மட்டும் கந்தல் உடையுடன் நாளைய பொழுதைக் கழிக்கப்போகிறார்கள் என்பதை அவள் எண்ணிப் பார்த்தபோது நெஞ்சம் வெடிக்கும்போல் இருந்தது.

எதைப்பற்றியுமே கவலைப்படாதவனாக அவளுடைய கணவன் சண்முகம் நன்றாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான்

குமார் அவர்களுடைய மூத்தபிள்ளை. வயது சுமாராக எட்டிருக்கும். அவனுக்குப்பிறகுபிறந்த இரண்டுமே பெண்கள். ஒருத்திக்கு ஆறு வயதிருக்கும், மற்றவளுக்கு மூன்று வயதிருக்கும். அவர்களிருவருக்கும் நாளைப் பொழுதைப்பற்றி — தீபாவழியைப்பற்றிய கவலையே இல்லை,

கந்தல் பாயில் அமர்ந்திருந்த குமார் சோம்பலை முறித்துக்கொண்டு எழுந்தான்.

மெதுவாக அடுக்களைக்குள் சென்றான்.

'அம்மா ... அப்பா உடுப்பு எடுத்துக்கொண்டு வந்தவரோ?'

தன்தாயின் அருகில் சென்று அமர்ந்தவன் அவளுடைய முகத்தைப் பார்த்துக் கேட்கிறான்.

அவள் பெருமூச்சு விடுகிறாள். என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

தனது அன்புக் குழந்தையின் முகத்தை ஆசையோடு நோக்கியவள் 'இந்தா ... தேத்தண்ணியைக் குடி' என்று அவனிடம் தேநீரை நீட்டுகிறாள்.

குமாருக்கு ஏமாற்றம். கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே என்று அவனுடைய பிஞ்சுஉள்ளம் தடுமாறுகிறது.

'அம்மா ... ... உடுப்பு...' அவன் கண்கலங்கக் கேட்கிறான்.

'நான் ராசாவுக்கு உடுப்பு எடுத்துத்தாறன். இப்ப தேத்தண்ணியைக் குடி ராசா'.

தன் மகனின் தலைமயிரைக் கோதியபடியே அவள் கூறுகிறாள். அவளுடைய வார்த்தைகள் அவனுக்குக்கு நம்பிக்கையூட்ட தேநீரை அருந்துகிறான்.

அவள் அடுக்களையைவிட்டு வெளியே வந்து வெளிவிருந்தையில் தூங்கிக்கொண்டிருந்த கணவனை எழுப்புகிறாள்.

அவன்கண்விழித்துப்பார்க்கிறான். அவனுடைய கண்கள் நன்றாகச் சிவந்திருந்தன, வாயிலிருந்து வழமைபோல் சாராயநெடி வீசிக்கொண்டிருந்தது.

'அம்மா...அம்மா...' படுக்கையில் கிடந்த அவளுடைய கடைசிப்பிள்ளை ராணி அழுதுகொண்டு அவளிடம் வருகிறாள்.

பிள்ளையைத்தூக்கி இடுப்பில் வைத்தவள் 'முகத்தைக் கழுவிப்போட்டு குசினிக்குள்ள தேத்தண்ணி இருக்கு வந்து குடியுங்கோ'' என்கிறாள்.

சண்முகம் படுக்கையை விட்டெழுந்து கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவிவிட்டு வந்து தேநீரைப்பருகிக் கொண்டிருக்கிறான்.

''நாங்களும்மனிசரெண்டு உலகத்தில வாழுறதில என்ன இருக்கு. நல்லநாளும் பொழுதுமாய், எங்களுக்குத்தான் இல்லையெண்டாலும் இந்தப் பிஞ்சுகளுக்கு நல்ல உடுபிடவை இருக்கா. உழைக்கிறதும் குடிக்கிறதும் தான் மிச்சம். ஒழுங்காய் இந்தப்பிள்ளையள் சாப்பிட்டு எத்தனை நாளாகுது மனிசன் கொஞ்சமெண்டாலும் யோசிக்கவேணும். நாலு பேர் மனிசரெண்டு நம்மை மதிப்பினமே...''

சண்முகத்தின் மனைவி கருணைநாயகி தன் கணவனைப் பார்த்துக் கேட்கிறாள். குமார் பயந்து நடுங்கியபடி அவளையும், தகப்பனையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு இருக்கிறான். தகப்பனைப்பற்றிஅவனுக்குத் தெரியும் ''பொல்லாத மனிஷன்'' என்று அவன் எண்ணக்கூடியவிதமாகசண்முகம் நடந்துமிருக்கிறான்.

அன்னையின் பேச்சு அவளுக்கு என்ன பெற்றுக் கொடுக்கப் போகிறதோ என்ற அச்சம் அவன்மனதை அரித்தது.

சண்முகம் அமைதியாக தேநீரை அருந்திக்கொண்டிருக்கிறான். அவனுடைய வாயிலிருந்து எந்த வார்த்தையும் வெளிவரவில்லை படிப்படியாக அவன் கண்களிலிருந்த செம்மைநிறம் மறையத் தொடங்குகிறது

உள்ளே படுத்திருந்த அவர்களுடைய இரண்டாவது பெண்பிள்ளை ரஜனி குசினிக்குள் வருகிறாள். அவளுக்கு நித்திரைச் சோம்பல் இன்னும் மாறவில்லை. தந்தையின் முதுகில் வந்து படுத்தவள் தன் கரங்களால் அவனுடைய கழுத்தைச்சுற்றிப்பிடித்துக்கொண்டுமுகத்தைத் தாயின் பக்கம் திருப்பிச் சிரிக்கிறாள்.

பிள்ளையின் சிரிப்புக்குப் பதில்சிரிப்பு அவளால் கொடுக்க இயலவில்லை. 'நாளைக்குத் தீபாவளி' என்ற எண்ணமும், அத்தீபாவளித் திருநாளில் தன்செல்வங்கள் கந்தல் உடைகளுடன்தான் உலவப் போகின்றனவென்பதும் அவளுக்குப் பெருத்த வேதனையைத்தந்துகொண்டிருந்தன.

''நீங்கள் பகல் முழுதும் உழைச்சுப்போட்டு, உழைச்ச பணத்துக்கு. இரவு முழுதும் குடிச்சுப்போட்டு வாங்க. நாங்க பட்டினி கிடந்தாலென்ன? நீங்க தாற இரண்டு ரூபாவிலும் என்ன மாதிரிச் சமாளிக்கிறது. வருடத்தில் ஒருநாளைக்குக் கூட இதுகளுக்கு நல்ல உடுப்பு எடுத்துக்கொடுக்க முடியாமல் சனியன் நம்மை பிடிச்சாட்டுது'' என்று கருணைநாயகி சலித்துக்கொண்டாள்.

''இந்தக் காதானைக் கொண்டுபோய் அடைவு வச்சுப்போட்டு காசைக் கொண்டாங்க. இதுகளுக்கு சித்தையிலையாவது எடுத்துக் குடுப்பம்'' என்றபடி அவள் தன் காதில் கிடந்த தோடுகளைக் கழற்ற முயன்றாள். சண்முகம் விருட்டென எழுந்து அடுக்களையைவிட்டு வெளியே முற்றத்துக்கு வந்தான்

''கந்தையாண்ணை நாளைக்கு ஆடு வெட்டுகிறாராம். ஆசைக்கு வேண்டிப்பிள்ளையளுக்குக் காச்சிக்கொடுக்கலாம் காசெல்லோ வேணும்'' அடுக்களைக் குள்ளிருந்து கருணைநாயகி கூறியது முற்றத்தில் நின்ற சண்முகத்துக்கு கேட்கத் தவறவில்லை.

அவன் நடக்கத்தொடங்கினான்: 'நாளைக்குப் போயா தினம்; தீபாவளி'. அவன் வாய் முணுமுணுக்கிறது. அவன் வீதியால் நடந்து கொண்டிருக்கிறான். வீதியை அண்டியுள்ள வீடுகளில் தீபாவளியைப் பற்றியும், புதிய ஆடைகளைப்பற்றியும்பேசப்படுகிறது. அவன் அவ்வார்த்தைகளைக் கேட்க முடியாதவனாகி நடந்து கொண்டிருக்கிறான்'

வானத்தை கவ்வியிருந்த இருள் அகல்கிறது. சூரியன் தனது கதிர்களை பூமித்தாயின் மடியில் அர்ப்பணிக்கிறான்.

சண்முகம் நேராக முற்றவெளியை அடைந்தான். தபால் கந்தோருக்கு முன்பாகவிருந்த பெரிய பூவரச மரமொன்றின்கீழ் அமர்ந்து கொண்டான்.

கருணைநாயகியை அவன் திருமணம்செய்து பத்து ஆண்டுகளாகின்றன. இந்தப் பத்துவருடங்களில் அவனுக்கு எஞ்சியது மூன்று குழந்தைச்செல்வங்களும் இருக்கும் வீடும் வளவும் தான். இடையில் ஏற்பட்ட குடிப்பழக்கம் அவனுடைய குடும்பத்தை வறுமைப்படுகுழியில்தள்ளிவிட்டிருந்தது. காலைதொடக்கம்மாலைவரை மூட்டைகளை ஏற்றி இறக்கிவிட்டு கிடைக்கும் பணத்தில் இரண்டு ரூபாவை வீட்டுச் செலவுக்கென எடுத்து பத்திரப்படுத்தியபின்பு மீதிப் பணமெல்லாவற்றிற்கும் குடித்துவிட்டு நேரந்தப்பி வீட்டுக்கு வருவான். மனைவி ஏதும் கேட்டால் இரண்டு அடியுடன் அவளை அடக்கிவிடுவான். ஆனாலும் அவள் பொறுமையாக நடந்து கொண்டிருந்தாள். நாளொன்றுக்கு பதினைந்து இருபது ரூபாவென்று உழைக்கும் அவன் மற்றத் தொழிலாளர்களுக்கும் தன் பணத்தில் மதுவை வாங்கிக் கொடுக்கத் தவறுவதில்லை,

பூவரசமரத்தின் கீழிருந்து தனது குடும்ப வறுமை நிலைமையையும், தான்இதுவரை வாழ்ந்தகேவல வாழ்க்கையையும் எண்ணிப்பார்த்தான். தனக்கென்று ஒளிமயமான வாழ்வு இனி இல்லையென்றாலும், தன் குடும்பத்துக்கு அந்தவாழ்வு உண்டென்பதை உணர்ந்த அவன்அந்த இடத்தைவிட்டு எழுந்தான்.

நேராக அவன் வேலைசெய்யும் கடைகளுக்குச் சென்றான்.

அவர்களிடம் கடன்கேட்டான். ஒருவாரத்தவணையில் அவன் கடன்கேட்டபோது கடையின் சொந்தக்காரர்களால் அதைத் தட்டிக்கழிக்க இயலவில்லை கடந்த பத்து வருடங்களாக அவன் அந்தக் கடைக்காரர்களிடம் தான் மூட்டை தூக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தான். ஆனால் கூலியைப் பெற்றுச் செல்வானேதவிர எக்காரணத்தைக் கொண்டும்மற்றத்தொழிலாளரைப் போல் கடன்கேட்டிருக்க மாட்டான்.

கடனுக்குப் பெற்ற பணத்துடன் புடவைக்கடை சென்றான். ''கடன்பெற்று தீபாவளிகொண்டாடவேண்டும்'' என்றும் அவன் எண்ணத்தவறவில்லை.

''இரத்த வியர்வை சிந்தி உழைத்து அந்தப் பணத்திலை அநியாயமாககுடித்துத் தொலைக்கிறனான் தானே'' இனிமேல் அந்தப்பணத்தில் கடனை அழிக்க வேணும்'' அவன் தன் நெஞ்சுக்கு,மாத்திரம் கேட்கக்கூடியதாக சொல்லிக்கொண்டு பிடவைக் கடையிலிருந்து பிடவைப் பார்சலுடன் வெளியேறுகிறான்.

''மற்றப் பெண்டுகளைப் போல என்ர மனிசிக்கும் ஆசையாயிருக்காதோ'' அவன் வாய் முணுமுணுக்கிறது.

அவன் வீட்டை அடையும்போது மாலை நாலுமணியாகிவிட்டது. கணவனைப் பார்த்ததும் கருணைநாயகி மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி எழுந்தது.

பிடவைப் பார்சலை அவிழ்த்துப் பார்த்தாள். அவளால் கண்களையே நம்ப முடியவில்லை.

குமாருக்கு மன நிறைவு ஏற்பட்டது. அந்த குழந்தையுள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

''கருணை,இனி நான் குடிக்கிறதில்லையெண்ட முடிவுக்கு வந்திட்டன். இந்தா இதில எழுபத்திரண்டு ரூபாவுக்குக் கிட்டஇருக்கு. வைச்சுக்கோ. கந்தையாண்ணயட்டை இறைச்சிக்கும் சொல்லிக் காசைக் கொடுத்துவிடு'' என்று சண்முகம் கூறிவிட்டு அவளைப் பார்க்கிறான்.

தன் கணவனின் திடீர் மனமாற்றத்தையும், வாழ்வையே அழித்து வறுமையின் எல்லைக்கு குடும்பத்தைக் கொண்டுவந்த மது அரக்கனை அவன் மறந்துவிட்டதையும் எண்ணிய பொழுது அவளுடைய நெஞ்சம்மகிழ்ச்சியால்விம்மியது.

சண்முகத்தின் வீட்டில் மதிய உணவு முடிந்து பிள்ளைகள் முற்றத்தில் துள்ளிக் குதித்து விளையாடுகின்றனர்.

சண்முகம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அவனுடன் சந்தோஷம் கொண்டாட வந்த சகதொழிலாளர் சண்முகத்தின் புது வாழ்வு கண்டு வியப்படைந்தவர்களாய் ''தீபாவளி'' வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றனர். சண்முகம் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு முடிக்கிறான். ''கருணை, முத்தவெளியில் மாட்டுவண்டிப் போட்டியாம், போயிட்டு வருவமே ''-சண்முகம் மனைவியைப் பார்த்துக் கேட்கிறான்.

(14-ம் பக்கம் பார்க்க)

நமது

தீபாவளி வாழ்த்துக்கள்

உங்களுக்கே உரியன

புன்னகை பூக்கும் பூவையரே!
பொன்னகை வேண்டாமா?

- காலத்திற்கேற்ற கவர்ச்சி
- உத்தரவாதம்
- நீடித்த பாவனைக்கு உகந்த

தங்க, வைர நகைகளுக்கு
விஜயஞ் செய்யுங்கள்!

ராணி ஆபரணமாளிகை

224, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

Manager. A. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை அழைக்கப்படமாட்டார்! புது ஆடைகள் வாங்கப்படமாட்டா!

## வட இந்தியர்களின் தீபாவளிக் கொண்டாட்டம்

தீபாவளிப் பண்டிகையை வட இந்தியர்கள் எவ்விதம் கொண்டாடுகிறார்கள் என்பதைக் கேட்கப் பலருக்கும் ஆர்வம் உண்டாகலாம். தீபாவளியன்று மாப்பிள்ளையை அழைக்கும் வழக்கமோ, புது உடைகள், புடவைகள் வாங்கும் வழக்கமோ அவர்களிடையே இல்லை.

### மகாலக்ஷ்மி பூஜை

வட இந்தியாவில் உள்ள எல்லாப் பிரதேசங்களிலும் அன்று சூரிய அஸ்தமன சமயத்தில் தீப அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். அப்போது மகாலக்ஷ்மி பூஜை செய்வார்கள். சில பாகங்களில் தனலக்ஷ்மி பூஜை என்று சொல்வார்கள். சில விடங்களில் பிரதோஷ லக்ஷ்மிபூஜை என்றும் குபேர பூஜை என்றும் குறிப்பிடுவோர் உண்டு. குறிப்பாக வங்காளத்திலே மாலையில் லக்ஷ்மி பூஜையுடன் நள்ளிரவு காளிபூஜையும் நடைபெறும்.

குஜராத்தி, மார்வாரி முதலிய மற்றும் வியாபாரம் நடத்தும் இதரப் பிரதேசத்தினர் யாவரும் தீபாவளியன்று மாலையில் தம் வியாபார ஸ்தலங்களை நன்கு அலங்கரிப்பார்கள். தங்களுடன் லேவாதேவி வைத்துக் கொண்டிருக்கும் அனைவரையும் அழைத்து அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு பட்சணம் முதலியவைகளை வழங்குவது உண்டு. அன்று புதுக்கணக்குப் புஸ்தகங்களை ஆரம்பித்து 'அன்று தேதியில் வரவுரு......' என்று பதிவு செய்வார்கள்.

### தீப அலங்காரம்

ஒரு தாம்பாளத்தில் தங்க நாணயங்களையோ அல்லது வெள்ளிருபாக் குவியலையோ வைத்து அதை லக்ஷ்மியாகப் பாவித்து அதற்குப் பூஜை நடத்துவார்கள். வசலும் வீடு முழுவதும் நாம் கார்த்திகைக்கு அகல் தீபம் ஏற்றுவதுபோல் அவர்கள் தீபம் ஏற்றுவது உண்டு. வட இந்தியாவில் வசிக்கும் தென் இந்தியர்கள் அவர்களைப்போல் தீபாவளியின்போது அகல்தீபம் ஏற்றுமல் கார்த்திகையின் போது ஏற்றுவதைக் கண்டு அவர்கள் பெரிதும் வியப்புறுவதும் உண்டு.

### பாத்திரம் வாங்கும் வழக்கம்

பஞ்சாப், டில்லி, உத்தரப் பிரதேசம் முதலிய இடங்களில் தீபாவளித் தினத்தன்று குடும்பத்தில் சாதாரணமாக உபயோகப்படும்படியான பித்தளைப் பாத்திரம் ஒன்று வாங்கும் வழக்கமும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும்ஒரு சிறு மண் பொம்மை அளிக்கும் வழக்கமும் இருந்து வருகின்றன. அன்று தெரு முழுவதும் வரிசை வரிசையாகப் பாத்திரங்கள் அடுக்கியுள்ள கடைகளையும் பொம்மைக் கடைகளையும் காணலாம்.

### வங்காளத்தில்...

வங்காளத்தில் மாத்திரம் மேலே கூறப்பட்ட லக்ஷ்மி பூஜையை ஒரு தனி முறையில் கொண்டாடுகின்றனர். வாழை மரத்தின் பட்டையை நறுக்கி அதைப் படகுபோல் செய்து அதன் நடுவில் மாட்டுச் சாணியால் செய்யப்பட்ட உருண்டை ஒன்று வைக்கப்படும். இந்தப் படகை வீட்டு வாசற்படியின் வெளியில் இடது புறம் வைத்து அதன் அருகில் ஒரு அகலை ஏற்றிவைப்பார்கள். வீட்டுச் சிறுவர்கள் கிழிந்த முறம் அல்லது சல்லடையைத் தட்டி மேளம் வாசிப்பார்கள். சிறிது சணல் தட்டை அல்லது வைக்கோலைக் கொளுத்தி இந்தப் படகைச் சுற்றி வெளியில் எறிந்துவிடுவார்கள். அதாவது அவலக்ஷ்மி வீட்டை விட்டு வெளியே அகற்றப்பட்டாள் என்று பொருள்.

### 16 அல்லது 21 மாவிளக்குகள்

பிறகு வாசலில் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு வாயைக் கொப்பளித்து வீட்டிற்குள் நுழைந்து வேறு ஒரு படகில் மாவினால் செய்த லக்ஷ்மியைப் பூஜிப்பார்கள். இந்தப் படகில் மாவினால் செய்யப்பட்ட மூன்று மூர்த்திகள் வைக்கப்பட்டிருக்கும். நடுவில் மஞ்சள் வர்ணத்தில் லக்ஷ்மியும், கறுப்பு வர்ணத்தில் ஒரு புறம் குபேரனும், மற்றொரு புறம் நீலவர்ணத்தில் நாராயணனும் வீற்றிருக்க, பதினாறு அல்லது இருபத்தொன்று திரிகள் கொண்ட மாவிளக்கினால் தீபாராதனை நடைபெறும். அதன் பிறகு இந்தப்படகு ஒரு அகல்தீபத்துடன் கங்கையிலோ, குளத்திலோ கொண்டுவிடப்படும்.

### காளிபூஜையும் ஆடு பலியும்

மேற்கூறிய லக்ஷ்மி பூஜையைச் சாயந்திரம் முடித்த பிறகு, வங்காளிகள் நள்ளிரவில் காளிபூஜையை நடத்துவார்கள். மூன்று அல்லது நாலு அடிஉயரம் பயங்கரத் தோற்றமளிக்கும் காளியின் மண் பிரதிமைகளை இரவு பத்துமணிக்குப் பிரதிஷ்டை செய்வார்கள். அதன்முன் அகல்தீபங்கள் ஏற்றுவார்கள். ஆடுகளைப் பலியிடுவார்கள். இரவு முழுவதும் ஹோமம் முதலியபூஜைகளை நடத்தி மறுநாள் அதிகாலையில் பூஜையை முடிப்பார்கள்.

குஸ்தி, கசரத்முதலியவைகளைப் பழக ஏற்பட்டுள்ள 'வ்யாயாம் மண்டல்' எனக் கூறப்படும் சங்கங்கள் அநேகம் வங்காளத்தில் இருக்கின்றன. காளி சக்தி ஸ்வரூபமாகையால், அவள்தான் பலம் அளிப்பதற்கு ஏற்ற அதிதேவதை எனக்கருதி, இந்தச் சங்கங்களில்எல்லாம் காளியின் பிரதிமைகளை அமைத்து அவசியம் அன்று இரவு பூஜை செய்வார்கள். மறுநாள் இந்தப் பிரதிமைகளைஊர்வலமாக எடுத்துச் சென்று ஆறு அல்லது குளத்தில் விட்டுவிடுவதுவழக்கம்.

### அக்ஷய நவமி

தீபாவளிக்கு அடுத்துவரும் ஒன்பதாவது நாள்தான் அக்ஷய நவமியாகும். அன்று சூரியன் துர்க்கை அம்மனைப் பூஜித்து வரம்பெற்றதாகக் கூறப்படுகிறது. வங்காளத்தில் ஒவ்வொரு வீட்டிலும், அன்று ஜகதாத்ரி என்ற பெயருடன் துர்க்கை பூஜிக்கப்படுகிறாள். இது துர்க்கா பூஜையைப்போல் பிரதிமைகள் அமைத்துப் பொது ஸ்தலங்களில் மிகுந்த ஆடம்பரத்துடன் பூஜிக்கப்படுவது இல்லை. அதிக அமளியின்றி ஒவ்வொரு வீட்டிலும் இப்பூஜை நடைபெறும்.

இதற்குப் பிரதிமைகள் கூட அமைப்பதில்லை. ஒரு கலசம்தான். ஜகதாத்ரியின் சின்னம். பூஜையும் ஒரே நாள்தான். அன்று துர்க்கையைப் பூஜிப்பவர்களுக்கு, சேர்ந்தாற்போல் நான்கு மாதங்கள் துர்க்கையைப் பூஜித்த பலன் கிட்டும்என்று தேவி புராணம் கூறுகிறது.

### பொம்மைப் பட்சணங்கள்

தித்திப்புப் பண்டங்கள் தீபாவளி ஸ்நானத்துக்குப் பிறகு உண்ணும் வழக்கம் வடஇந்தியாவிலும் பரவி உள்ளது. "தினம் தினம் பட்சணம் தின்ன இது தீபாவளியா என்ன?" என்று ஹிந்தியில் ஒரு பழமொழி உண்டு. சர்க்கரைப்பாகை மர அச்சிலிட்டு மிருகங்கள் போலும் பக்ஷிகள் போலும் பொம்மைப் பட்சணங்களை அநேக வர்ணங்களில்செய்து அன்று கடைகளில் விற்பனை செய்வார்கள். இதுதீபாவளி சமயம்தான் கிடைக்கும். மற்றச் சமயங்களில் கிடைக்காது. ஒவ்வொருவரும் மேற்படி பட்சணங்களைக்கடைகளில் வாங்கி உண்பதுவழக்கம்.

### திருஷ்டிபடாமல் கண்மை

சிறு குழந்தைகளும் பெரியோரும் கண்களுக்கு இட்டுக் கொள்ளும் மை தீபாவளி அன்று இரவுதான் கூட்டப்படும். இதற்கு "அமாவாஸ்-

(12-ம் பக்கம் பார்க்க)

— எஸ். ஆர் —

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
சிறந்த முறையில் உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்
நோர்தேண் இன்டஸ்றீஸ்
8 / 1, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்
போன்: 7158

தந்தி: யாழ் மெற்றல் தொலைபேசி எண்: 7049
யாழ் உலோகத் தொழிற்சாலை
உறுதியும் உத்தரவாதமுமுள்ள
கும்பகோணம் குடம்
★ செம்பு
★ தாம்பாளம்
★ கிடாரம்
★ வங்காளம் சட்டி
★ இட்டலிச்சட்டி
ஆகியனவும்
வீட்டுப் பாவனைக்குரிய சகல யாழ்மார்க் அலுமினியப் பாத்திரங்களும் தயாரிப்பாளர்களும்
சில்லறை மொத்த விநியோகஸ்தர்களும்
கோயிலுக்குத் தேவையான திருவாசி, கொடித்தம்பம் ஆகியனவும் மற்றும் சகல சாமான்களும் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
தொழிற்சாலை & கந்தோர்
250—251, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
அனுதாபிகள் அனைவருக்கும்
எமது
தீபாவளி வாழ்த்துக்கள்!
அரிய சேவையால் லட்சக்கணக்கான
மக்கள் உள்ளங்களின்
அமோக
அன்பையும் ஆதரவையும் பெற்ற
நகை வியாபாரிகள்
ஏ.கே.எஸ். அன் சன்ஸ்
(நகை மாளிகை)
63, 65, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 519

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
செ. காசிப்பிள்ளை அன் கோ.,
(பிரபல பிடவை வியாபாரிகள்)
82, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.
கிளை: சி கே பி 74/8 பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவக நாடகம்

# தலைவன் தாள்

## பீடிகை

முன்னம் அவனுடைய
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய
ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே
பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும்
அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார்
ஆசா ரத்தை
தன்னை மறந்தாள்
தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே.

அப்பர் பெருமானின் தேவாரப் பண்ணிசை செவியுட் புகுந்து சிந்தையை நிறைத்தது. நிஷ்களங்கமான இறைவனை எண்ணத் திருத்தி கற்பனைச் சிறகு கட்டிப் பறந்தபோது எதிர்பட்டது ஓங்கி உயர்ந்த மலையொன்று. அந்த மலையின் உச்சியிலே நின்று பார்த்தபோது எங்கும் நீக்கமற நிறைந்த பசுமைக் காட்சி புலப்பட்டது. பாறுங்கல்லை உருட்டி பசுமையினூடே நெளிந்து ஓடுகிறாள் நதிப்பெண். இவள் எங்கே செல்கிறாள்? இவள் ஓட்டத்தின் காரணமென்ன? என்ற வினாக்கள் பிறந்தன. அதன் விளைவே இந்த நாடகம்:

### பாத்திரங்கள்

கங்கை— (நதி)
ஆழித்தேவன்— (கடல்)
மலைத்தாய்— (குறிஞ்சி)
முல்லைத்தேவன்—(முல்லை)
மருதிளங்குமரன்-(மருதம்)
தென்றல்:
மலர்:

### காட்சி: 1

குறிப்பு: கங்கை அலைபரப்பிப் பாய்ந்து பாடிச் செல்லுகிறாள்.

பாடல்

துள்ளிக் குதித்திடுவேன்
எழிற்
சோலையைச் சுற்றிடுவேன்
பள்ளந் தனிற்பாய்ந்தே-
இசை
பாடிப் பரந்தோடுவேன்.
என்னை எதிர்ப்பவர்கள்-
புவி
எங்குமில்லை யறிவீர்
என்னரும் சக்தியினை-
இங்கே
எவரும் அறிவதில்லை.
எங்கும்புனல்பரப்பி-தினம்
ஏரைப் புரந்திடுவேன்
பொங்கிப் புரண்டோடி-
துயர்
போக்கி அருளிடுவேன்
பூவை வளர்த்திடுவேன்-
எழில்
பூக்க வழியமைப்பேன்
பாவை இசைத்திடுவேன்-
கவி
பாங்கை உயர்த்திடுவேன்

மலர்: கங்கா நில்...... ஓடாதே......

மலர்: நீயார் என்னைத் தடுப்பதற்கு?

மலர்: என்னை மலர்என்று அழைப்பார்கள், மெதுவாகச் செல் கங்காதேவி.

கங்கை; எனக்கா கட்டளை இடுகிறாய்?

மலர்: கட்டளையிடவில்லை கனிவுடன் கேட்கிறேன், நீ வேகமாய்ப் பாய்வதால் என் தாயாகிய மரத்தின் வேர்கள் பாறிவிடும் என்று அஞ்சுகிறேன், அவள் சரிந்துவிட்டால் என் வாழ்வும் என் குலவாழ்வும் சரிந்துவிடும்.

கங்கை: என்னைக் கண்டும் ஒதுங்காது உன் தாயாகிய மரம் குறுக்கே நிற்பதுமட்டும் சரியோ?

மலர்: அவள் அசையமுடியாதவள், அந்த இடத்தில் நிற்கவேண்டுமென்பதே இறைவன் விதித்தவிதி.

கங்கை: நல்லவிதி நல்ல இறைவன் நான் குறிஞ்சிநாட்டு நாயகி என் ஆட்சிக்கு உட்பட்டவர் அனைவரும் எனக்குக் கட்டுப்பட்டேயாகவேண்டும். நானே சக்தி.

மலர்: உன் சக்தி உனக்குச் சொந்தமானதல்ல; இறைவன்கொடுத்ததேயது. இறைவனே எல்லாவற்றையும் படைத்தான்? அவன் படைத்தவற்றை அழித்துவிடும் உன்விளையாட்டு. உன் விளையாட்டால் நாம் வேதனையடைவதா? வேண்டாம்.

கங்கை என் வேகத்தைப் பொருட்படுத்தாது எதிர்த்து நின்ற பாறுங்கல்லைப் பார்? அதோ அது புரண்டு சாய்ந்துவிட்டது.

மலர்: பார்த்தேன் கல்லை உருட்டிய உன்னைக் கண்டே என்தாய் கண்கலங்குகிறாள்.

கங்கை: யான் இந்தப் பகுதியின் நாயகி. என் சுதந்திரமே பெரிது. எவருடைய அழிவுபற்றியும் எனக்கு அக்கறையேயில்லை.

— இ. நாகராஜன் —

குறிப்பு: (தென்றல் அசைந்து பாடி வருகிறது.)

பாடல்

பூவினைப் புரப்போன்
அன்பும்
பொறுமையும் பூத்த
மெய்யன்
சாவினைக் கண்டஞ் சாத
சற்குணன் சகல வற்றும்
மேவியே விளங்கும்
மேலோன்
வித்தகன் அன்புள்
ளோர்க்கே
ஓவிலா துதவு கின்ற
உள்ளமே உடையோன்

கங்கை: தென்றலே; மதுவை மாந்தியதால் வெறி தலைக்கேறிவிட்டதா? உலகத்தையே மறந்து ஏதேதோ, உளறிக்கொண்டு செல்கிறாயே...

தென்றல்: கங்கா! இந்த உலகத்தை வலம் வருகின்ற கடமை எனதாகும். இந்தக் கடமையை எவன் தந்தான்? இறைவன்தான் தந்தான் அவனைப் பாடுகிறேன். காலையில் கண்விழித்துக் கந்த மலர்த் தேனுண்டு வண்டின் பாடலைக் கேட்டு மகிழ்ந்து பல்லிடமும் பரந்துசென்றேன் என்னுடையஇதத்தை எல்லாமே ஏற்று இன்பம் கண்டன. ஆனால் ஒருவன் மட்டும் என்னைப்பற்றி அக்கறையில்லாது ஏகாக்கிர சிந்தனையில்ஆழ்ந்திருந்தான். பூவில் எதையும் பொருட்படுத்தாத மனவைராக்கியமுடையவன் ... உலகத்திலுள்ள அனைத்தும்...என்னை இருகை கூப்பி வரவேற்றன. அவன் விழி திறந்தே பார்க்கவில்லை.

கங்கை: அகம்பாவியா.

தென்றல்: அகத்தை அடக்கி ஒடுக்கிய ஞானி அவன்.

கங்கை: சோம்பேறிகளுக்கு வேறென்னவேலை இருக்கமுடியும்.

தென்றல்: அவனா சோம்பேறி. உலகத்தை இயக்கும் உயர்ந்த பணிக்கு...அவன் ஆதாரமானவன். காலை எழுந்து, கதிரவனார் வான வட்டத்தை வலம் வருகிறாரே...அப்போது பூவுலகம் வாழ நீரைக்கொடுத்துதவும் செயல்செய்கின்றான். அவன் தந்த நீரைக் காராக்கியே மழையாகப் பெய்விக்கிறான் கதிரவன். அவன் தரும் நீரே உலகத்தில் நீ உற்பத்தியாக வழியாகிறது.

கங்கை: என்ன நா... இயங்க அவனா ஆதாரமாயிருக்கிறான்.

தென்றல்: நீ மட்டுமல்ல, பல்லுயிரும் அவன் ஊட்டத்தினால்தான்...உயிர்வாழமுடிகிறது' ஆனால் இத்தனை திறமிருந்தும் அவன் அடக்கமுள்ளவன். நீ சிறு கல்லைப் புரட்டி...பின் மரத்தின் வேரை அரித்து மரத்தைச் சாய்க்கமுயற்சிக்கிறாய், உன்னைப் பெற்ற மாதாவாகிய பாரிய மலைகள் பலவற்றை அடக்கி வைத்திருக்கிறான்' ஆயினும் கட்டியாளவேண்டுமென்றகர்வமில்லாதவன். உலகத்தாசைகளை ஒதுக்கிவிட்ட உத்தம ஞானிபோல் அரன்பெயரை வாய்அரற்ற அடக்கத்தோடுள்ளான்

கங்கை: அப்படியா... அவர் பெயர் என்ன?

தென்றல்: ஆழித்தேவன் என்பது அவன் பெயர்.

கங்கை. அவன் வண்ணம்.

தென்றல்: வானத்தையே தனதாக்கிய வண்ணத்தவன் அகன்றுவிரிந்துபடர்ந்தவன் ஆழமானவன் ... சந்தமார் பாடலுக்குச் சுதி

(12-ம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்
★ திருமணமா
★ தீபாவளியா
★ கடுக்கன் பூணலா
★ காதுகுத்தலா
எந்த விழாவானாலும்
எம்மைக் கலந்து கொள்ளுங்கள்

முருகன் ஆபரண மஹால்
சுன்னாகம்
(பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக)

அனைவருக்கும் எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
உங்கள் ஜவுளித் தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள மறவாதீர்கள்!
கணேசானந்தாஸ்
(முட்டாசுக்கடைச் சந்தி)
208, காங்கேசன்துறைவீதி — யாழ்ப்பாணம்.

அனைவர்க்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்
"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

வாசக நேயர்களுக்கு
'வலிகோப்டெக்ஸின்'
தீபாவளி வாழ்த்துக்கள்!
★ வண்ண வண்ணச் சேலைகள்
★ பகட்டும் பாவாடைத் துணிகள்
★ பட்டுநிகர் வேட்டிகள்
★ அழகான மலிவான
அளவான சேட்டுக்கள்
மறவாதீர்கள்! 'வலிகோப்டெக்ஸ்' ஆடைகள்
வலிமேற்கு பலநோக்கு
கூட்டுறவுச் சமாஜம்
சங்கானை.
தொலைபேசி: 525, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும்" சேர்ந்த கந்தரோடை

நன்செய் நிலங்கள் நாற்றிசையும் சூழ, மருத நிலப் பரப்புக் கொண்ட பழம்பதி கந்தரோடை. நீர் வளத்தால் நிலம் செழித்த கிராமம். குளக்கோட்டு மன்னனால் குளம் அகழ்ந்து கழனிகளமைத்த பெருமை கந்தரோடை மண்ணுக்கு உண்டு. இங்கே கோட்டன் கட்டு என்ற பெயரோடு ஒரு குறிச்சி இருப்பது அதனை நிலை நாட்டும். இன்று சிற்றூராகிலும் என்றோ ஒரு காலம் தேரோலியும் திருமன்னர் சீர் சிறப்பும் பெருகிய பேரூராகத் திகழ்ந்தமையை வரலாறுக அடக்கியிருக்கிறது. தனது நூற்றாண்டு வாழ்வை யொட்டிவிழா எடுத்து தென்னகத்தும் புகழ் பரக்கச் சிறப்புடன் மிளிரும் ஸ்கந்தவரோதயக் கல்விக் களஞ்சியத்தைக் கண்ணாகக் கொண்டது கந்தரோடை. உடுவில் தொகுதிக்கோர் பாராளுமன்ற உறுப்பினரை உதவிய சிறப்புடையது.

சுன்னாகம் புகையிரத நிலையம் இலங்கையில் பிரசித்தமானது அதை அடுத்து மேற்கே இருபர்லாங் தூரத்தில் சுன்னாகம் சந்தை அமைந்துள்ளது. சந்தைச் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் கற்பாதை வழியே மூன்று பர்லாங் தாண்டினால் கந்தரோடை கிராமத்தைச் சேரலாம். இங்கிருந்து மூன்று பர்லாங் தூரம் நேரே சென்றால் கிராமத்தின் இக்காலச் சிறப்புக்குக் காரணமான ஸ்கந்தவரோதயக் கல்லூரியை அடையலாம். கற்பாதையின் வடக்கே கல்லூரி அமைந்துள்ளது. அதற்கு எதிரே செல்லும் ஒழுங்கை [சிறுகற்பாதை] வழியாகத் தெற்கு நோக்கிச் செல்வோமானால் கிராமத்தின் மத்திய பகுதியை அடையலாம். பழையநகர மும் மாளிகையும் இருந்த அடையாளங்களை ஒழுங்கையின் இரு மருங்கும் காணலாம். இப்பகுதிகள் திடலாயிருக்கின்றன. சில இடங்களில் கட்டிடங்களின் சிதைவுகளும், செங்கற்களால் ஆக்கப்பட்ட அத்திபாரங்களையும் காணலாம். கிராமத்து மக்கள் நடுப்பகுதியில் நெருங்கி வாழ்கிறார்கள், பெரும்பாலோர் விவசாயிகள். நாற்புறமும் கிராமத்து வயல்நிலங்கள் உள்ளன. தெற்கே உடுவில் குளமும் மேற்கே உத்திரிக்கைக் குளமும், வடக்கே பிணக்கைக் குளமும் இருப்பதனால் விவசாயத்திற்குக் குறைவில்லை. அதிகமாக நெல் வேளாண்மையுண்டு. வான்பயிர்களாக மாமரங்கள் நிறைய உண்டு தென்னையும்பனையும் நன்கு செழிப்புற வளரும், கிராமத்தின்செழுமைபோல் மக்களும் வாழ்கிறார்கள். 'தள்ளா விளையுளும், தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு' என்ற வள்ளுவர் வாக்கிற்கு உதாரணமாகலாம் கந்தரோடை. ஊரின் மத்தியில் இரு பெரிய ஆலயங்களுள. ஒன்று பிள்ளையார் கோவில், ஏனையது அம்மன் கோவில்.

சைவமதத்தவர்களே கிராமத்து மக்களனைவரும். கிறீஸ்தவ மார்க்கம் நுழையாதவாறு கிராமத்தில் வாழ்ந்த இரு பெரியார்கள் இரு பாடசாலைகளை அமைத்து தமிழ்க் கல்வியையும், ஆங்கிலக் கல்வியையும் வளர்த்தனர். மிஷனரிமார் கல்வி மூலம் கிறீஸ்தவ மதத்தைப் பரப்ப வழியில்லாமல் போயிற்று. ஆங்கிலக் கல்லூரியைத் தாபித்தவர் கந்தையா உபாத்தியாயர் (தெற்கர்) அவர்கள். தமிழ் வித்தியாசாலையைத் தாபித்த பெரியாரும் அதே பெயர் கொண்டவர் ஆனதால் ஒருவரிலிருந்து ஒருவரை வேறுபடுத்த தமிழ்க் கந்தையா உபாத்தியாயர் (வடக்கர்) எனக் கிராமத்தவர் அழைத்தனர் இவர்சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் மாணாக்கருமாவார். கிராமத்தில் தென்கோவை கந்தையாபிள்ளை (வித்தகர்) அவர்களின் தொடர்பால் இலக்கண இலக்கிய வளர்ச்சி ஓங்குவதாயிற்று. அவர் வித்தகம் என்ற சமய ஏட்டின் ஆசிரியராகவும் பணியாற்றி[illegible] கிராமத்தின் அறிஞர் வரிசை[illegible] மல்ல இந்தியாவிலும் பெரிதும் பாராட்டப்பட்டவராவார். சுமார் ஒரு நூற்றாண்டின்முன் கந்தரோடைக் கிராமத்தின் கலை வளர்ச்யிலும் கல்விவளர்ச்சியிலும் கண்ணுங்கருத்துமாக இராசா பொன்னம்பலம் அவர்களும் திரு. அப்பாத்துரை அவர்களும் உழைத்தார்கள். இவர்கள் காலத்தோடடுத்து பன்னாலையிலிருந்து வந்து கந்தரோடை கிராமத்தில் வைத்திய சேவை புரிந்தும் கிராமத்துச் சிறப்புக்காக கல்வி கலாச்சாரங்களில் தொடர்பு கொண்டவருமாக வைத்திய சிகாமணி முத்தர் (முத்துக்குமாரு) அவர்களும் சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களும் கிராமத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கினர். இவர்களையடுத்து ஆங்கில வைத்தியராகச் சேவை புரிந்த செல்லப்பா அவர்களும் முக்கியமானவராகத் திகழ்ந்தார்.

## எங்கள் கிராமம் 4

திருவாளர் கந்தையா உபாத்தியாயரது ஸ்கந்தவரோதய கல்வி நிலையம் 1894-ம் ஆண்டில் ஸ்தாபிதமானதிலிருந்து கந்தரோடைக் கிராமம் மறுமலர்ச்சி பெற்றதெனலாம். கிராமத்திலுள்ளவர்களும் சுற்றுவட்டாரக் கிராமங்களிலுள்ளவர்களும் ஆங்கில அறிவு பெற்று மலாயா முதலிய வெளிநாடுகளிலும் இலங்கையிலும் உத்தியோகம்பெறும் வாய்ப்புப் பெற்றனர். கல்லூரியின் வளர்ச்சிக்கு அங்கு கற்ற பழைய மாணவர் நன்றிப்பாடுற்றவர்களாய் பொருளுதவிபுரிந்தும்ஆவன உதவியும் கண்போல் காத்து வருகின்றனர். கந்தையா உபாத்தியாயரது மைத்துனர் முறையினரான வைத்தியக் கலாநிதி சு பிரமணியம் (பி.எஸ்) அவர்கள் கல்லூரி வளர்ச்சிக்கானசேவைகள் பல புரிந்து மனேஜராகவும்கடமைபுரிந்தார்இவரது தம்பியாரான விஸ்வநாதர் அவர்கள் அக்காலத்தில் எம். ஏ பட்டதாரியாகி கல்லூரியின் சிறந்தஆசிரியர்களுள் ஒருவராகக் கடமையாற்றினார். அன்னாரின் ஏக புத்திரர்தான் இன்று உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றும் திருவாளர் தர்மலிங்கம் அவர்கள்(இலங்கையர்) அந்திய காலச் சிந்தனைஎன்ற அழகிய கவிதைத் தொகுதியை இயற்றிய சின்னத்தம்பி அவர்கள் போன்ற புலவர்களையும், சைவச் சிறப்பு விளங்கப் பல ... மணக் ... குடும்பங்களை ... கந்தரோடை அடக்கிய ... தது.

### சரித்திரம் சிரிக்கின் ...

(1917-ம் ஆண்டின் பின் ... 1966-ம் ஆண்டு)

ஆயிரத்துத் தொழாய ... துப் பதினேழாம் ஆ ...

'ஆதவன்' - ...

கந்தரோடையின் வர ... றிலே மிக முக்கியத் ... வாய்ந்த ஆண்டாகும் ... ஆண்டிலேதான் பு ... பொருளாக இருந்த ... மம் வரலாற்று அறி ... ளின் விழிப்புணர்ச்சி ... ஆயிற்று எனலாம். ... லாற்று அறிஞராகவும் ... வாளாகவும் விளங் ... போல் பீரிஸ்துரை அவ ... வரலாற்றின் பொ ... மான இக்கிராமத்தின் ... மேடுகளில் ஒரு பகுதி ... அகழ்ந்து ... ராய்ச்சி ... மகாவம்சம் என்று ... லப்படும் பௌத்த இ ... சத்தில் கூறப்படும் ' ... கொட விகாரை' இ ... இடம் என்பதற்கு ... சான்றுகளும் கண்டா ... கிறிஸ்தவ சகாப்தத் ... முன்னிருந்தே நாக ... நகராக என்றோ ஒரு கா ... வரைக்கும் மிளிர்ந்த ...

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 6. தீந்த நெஞ்சில் தேன்மாரி!

யாகத் தீயாஞ் சிந்தனையில்
  ஆழ்ந்து வீழ்ந்து வெந்தோங்கிப்
போகும் வேள்விப் பொருளாகப்
  பொலிந்தே உணர்வுப் புரட்சி பெறும்
நோகும் நெஞ்சின் நச்சிக்கு
  நோயோ நொடியோ என்றேங்கி
வேகும் வயிற்றுத் தாய்கனகம்
  மெல்ல வந்தாள் அறைதேடி!

படுத்துக் கிடந்த வானச்சி
  பார்த்தான் தரையைப் பார்த்தபடி
அடக்க மாக எழுந்திட்டான்!
  அழுத்தமான குரலினிலே
படுத்தி வந்தேன் உங்களை நான்
  பரிந்து மன்னித் திடுகம்மா
கெடுத்தே னென்னே டுங்களது
  கிளர்வை மகிழ்வை'' என்றிட்டான்

மகனே இன்னுஞ் சிலநாளில்
  வாங்கித் தருவோம் வருந்தாதே!
உகுநீர் விழியோ டவனன்னை
  உரைத்தாள். அவனோ பதறிட்டான்
சுகமே ஈயா அப்பொருளைத்
  தூரவிட்டு மறந்திட்டேன்
அகலா அருகா மெய்யின்பம்
  ஆண்டவ னடியில் எனவோர்ந்தோன்!

அம்மா ஆசான் ஓங்கலனார்
  அழகாச் சொன்னார் வகுப்பிலிதை
சும்மா சொன்ன சொல்லல்ல
  தூய மறைபோற் சொல்லம்மா
இம்மா நிலத்தின் இன்பமெலாங்
  எதுவும் உண்மை இன்பமல
அம்மா தவனின் அடி நல்கும்
  ஆன்ம இன்பம் தானின்பம்!

கொள்ளை ஆசைத் தீயாலே
  குலைந்தேன்! குலைத்தேன் உங்களையும்!
பிள்ளை ஆசைத் தீநாவின்
  பிடியில் நீங்கள் வேகின்றீர்!
உள்ளந் தம்மை இனியேனும்
  ஓவா திறைவன் மேல்வைத்துத்
தள்ளாப் பிறவிப் பிணிதள்ளத்
  தவம் மேற் கொள்வீர் தயங்காதீர்!

அப்பா பலர்க்குங் கடனாளி
  ஆண்ட வற்குங் கடனாளி!
உப்புப் பானை யாய் உண்ணு
  ஓயா உழைப்பால் உடலிற்றார்!
அப்படி யிருந்தும் அவரைநான்
  அரித்து வந்தேன் பணங்கேட்டே!
எப்படி அம்மா என்பாவம்
  இப்பிற விக்குள் நீங்குவது?

கடனுய்த் தொகையெவ் வளவுண்டு?
  கணக்கிட் டுச்சொல் வீரம்மா!
அடநான் அப்பா இருக்கையிலே
  அதையிட் டேன்நீ கவல்கின்றாய்?
விடுநீ அதனைக் கேளுனக்கு
  வேண்டும் பொருள்கள் வாங்கிடுவோம்
கொடுமை அம்மா அதுகொடுமை
  கொல்லேன் மேலும் உங்களை நான்!

நானினி மேலுங் குழந்தையல
  நானினி மேலும் மிருகமல
வானிலே தேடும் அளவிற்கே
  மனம்பண் பட்ட கட்டிளைஞன்!
தேனினு மினிய கடமையெனத்
  தீர்ப்பேன் நீங்கள் பட்டகடன்!
கூனிய பின்னும் முத்திபெறுங்
  குறியில் உழைப்பேன் தவநெறியில்!

(வளரும்)




பீ எச் சீ


நெற் பூச்சி கட்டுப் பாட்டிற்கு பீ எச் சீ 10% தூள். சிறந்தது. பீ எச் சீ 6% துணுக்குகளும், பீ எச் சீ 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.




களைக்கொல்லி

'M-50'

'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக் 'களைக்கொல்லி,' 3-5 வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்து அழிக்கவல்லது.




சுமித் ...

ஓர் பாதுகாப் ... கிருமிநாசினி. ... குமிழ் ... பாட்டிற்கு ...



லங்மிகம் இலங் ...

செலிங்கோ ஹவுஸ் த. பெ. ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்
டை
ல பிரா
ளையும்
கியிருந்
ன்றது
பின்
மூாயிரத்
ஆண்டு

கிராமம் அந்நியர் படையெடுப்பில் அமைதியில் ஆழ்ந்துவிட்டது.

வடபகுதியில்வரலாற்றின் நிலைக் களங்களாக அமைந்த புராதன நகரங்களுள் கந்தரோடையும் ஒன்று. ஏனையவை வல்லிபுரம், திருக்கேதீஸ்வரம்(மாந்தை) என்பனவாம். இம்மூன்று பழைய நகரங்களிலும் காணப்படும் பழைய நாணயங்கள், மணிவர்க்கங்கள், போளங்கள்-ஜாடிவகை, ஒடுகள், பழங்காலத்து அரண்மனைகள் இட்ட செங்கற்கள், ஓடுகள்' தூண்தாங்கி கற்கள் மட்பாண்ட ஓடுகள் ஆதியன பெரிதும் ஒற்றுமைப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

## - சி. பொன்னம்பலம்

### எழுதுவது

வரலாற்
பத்துவம்
ரும் இந்த
புதை
த கிரா
அறிஞர்க
சிக்குவித்
. வர
வும் நீத
ங்கிய
அவர்கள்
பாக்கிஷ
ின் மண்
பகுதியை
செய்து
சொல்
இதிகா
'கதுர
இருந்த
அகச்
காலம்.
த்திற்கு
கரீக
ு காலந்
த நமது

காலத்தால் முற்பட்ட சேர, சோழ, பாண்டியர்களது நாணயங்களும், பௌத்த நாணயங்களும், சீன நாணயங்களும், அராபிய நாணயங்களும், கிரேக்க, உரோம நாணயங்களும், பிற்காலப் பட்ட ஒல்லாந்த, போர்த்துக்கீசிய ஆங்கில நாணயங்களும் வரலாற்றின் கருவூலமான மேடுகளிலிருந்து காலத்துக்குக்காலம் மழை வெள்ள அரிப்புகளால் மக்கள் பார்வைக்கு அகப்படுகின்றன. இவற்றைக்கொண்டும் போல்பீரிஸ்துரை அவர்களின் அகழ்விலேற்பட்ட ஆராய்வுகளைக்கொண்டும் சமீபத்தில் (1966 ல்) அரசாங்கம் - புதைபொருள் ஆராய்ச்சி இலாகா - அகழ்ந்தெடுத்த கருவூலங்களைக் கொண்டும் நீண்டதொரு ஆய்வுக் கட்டுரையாகத் தொடரும். [தொடரும்]

# ஒரு பயந்தவன் ஓடிக் கொண்டிருக்கிறன்!

திடீர் திடீரென பஸ் புரள்கிறது! இருந்தாற்போல் ரயில்கூடத் தடம் புரள்கிறது! இயந்திரக் கோளாறு காரணமாக விமானங்கூடத் தரையில் விழுந்து நொருங்குகிறது! பாலைதீவுப் படகு விபத்தை இப்போது நினைத்துப்பார்த்தாலும் நெஞ்சு புல்லரிக்கிறது. அதில் பிரயாணஞ்செய்த அனைவரும் நீரில் ஊறப்போட்ட ரேஸ்பாண் துண்டுகளாக திக்குத்திக்காக மிதக்கவில்லையா? இந்த உலகம் விபத்து உலகமாக மாறிவரும்போது எவனுக்கு வீட்டைவிட்டு வெளியேறமனம் வரும்?

முந்தநாள்கூட வீதியோரமாக இருவர் கதைத்துக்கொண்டு நின்றனராம். எங்கோ இருந்து அசுரகெதியில்வந்த கார் இருவரில் ஒருவரைத் திடீரென மோதி பரிதாபகரமாக ஸ்தலத்திலேயே அவர் துடிதுடித்து மரணமானாராம்!

அத்துடன் இன்றைய பத்திரிகையின் தலைப்புச் செய்தியைப் பார்த்ததும் எனக்குத் தலையே விறைத்தது. வீட்டைவிட்டு வெளியில் வரவே பயமாக இருந்தது. இந்த உலகமே விபத்தில் தான் ஓடுகிறதா? எங்கு பார்த்தாலும் விபத்துக்கள்! மரணங்கள்! தற்கொலைகள்! கொலைகள்! உலகம் இந்த லட்சணத்தில் இருக்கும் போது நான் எப்படித் துணிந்து வீட்டைவிட்டு வெளியேறமுடியும்?

பத்திரிகையில் கிடந்த செய்தி இதோ. வீதிவிபத்துக்கள் வருடந்தோறும்அதிகரிக்கின்றனவாம். 1970-ம் வருடத்தில் ஆறு மாதங்களில் 7838 விபத்துக்கள் நடந்தனவாம் இந்த விறுத்தத்தில் இன்றைய உலகம் இருக்கும்போது நான் எப்படி வீட்டைவிட்டு வெளியேறமுடியும்?

1966-ம் ஆண்டு 13,592 விபத்துக்கள் நடந்தனவாம். அதில் 487 பேர்கள் மாண்டனராம். அந்த 487 பேர்களில் நானும் ஒருவனாக இருந்திருந்தால்...ஐயய்யோ ...நான் வீட்டைவிட்டுவெளியேறமாட்டேன்.

1967-ம் ஆண்டு 14,592 விபத்துக்கள் 7224 பேர்கள் படுகாயம்! 546 பேர்களை எமன் எடுத்துக்கொண்டானாம்! என்ரை அப்பு ...நான் வீட்டைவிட்டு வெளியேற முடியாது.

1968-ம் ஆண்டு 14,549 விபத்துக்கள்-அதில்598பேர்கள் அகாலமரணம்! கடவுளானை நான் வீட்டைவிட்டு ஒரடிகூட நகரமாட்டன்!

—குமார் தனபால்—

1969-ம் ஆண்டு 17,038 விபத்துக்கள்! 621 பேரைச் சாவு அணைத்துக் கொண்டதாம் அந்த 621 பேர்களில் நானும் அகப்பட்டிருந்தால்...அம்மாடியோ ... என்னால் வீட்டைவிட்டு ஒரு இஞ்சிகூட நகரமுடியாது. என்ன தைரியத்தில் நான் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பமுடியும்? நீங்களே சொல்லுங்கள்?

இன்னுமொரு விஷயம் ஞாபகம் வருகிறது. போன கிழமை எங்கடை பொன்னம்பலத்தார் கிணற்றடியில் முகம்கழுவிக் கொண்டிருந்தபோது பக்கத்தில் நின்ற தென்னைமரத்திலிருந்து ஒரு தேங்காய் அவர் பிடரியில் விழுந்து கிணற்றடியிலேயே அவர் பிணமாகக் கிடந்தாரே!

ஐயய்யோ...! எனக்கு இப்போது எங்கள் வீட்டு வளவிற்குள் கூட உலாவப்பயமாக இருக்கிறது. தேங்காயோ பனங்காயோ என் உச்சந்தலையில் விழுந்து நானும் துடிதுடித்துஸ்தலத்திலேயே அகாலமரணமடைந்துவிட்டால்... நான் வீட்டு அறையைவிட்டு வெளியேறமாட்டேன்.

சென்றவருடம் அடித்த பெரும்காற்றில் ஒரு வீட்டிற்குமேல் தென்னை சரிந்து அந்த வீட்டிற்குள் இருந்த குழந்தைகளும், பெற்ருேர்களும் கூண்டோடு கைலாசம் செல்லவில்லையா?... என்ரை ராசா ... இப்போது எனக்கு வீட்டிற்குள் இருக்கக்கூடப்பயமாக இருக்கிறது!

சாடையாக வெளியே சோவெனக் காற்றடிக்கிறதே! இதுவே சற்றுப்பலமாக அடித்தால் ... வீட்டு விருந்தையில் நின்று எட்டிப் பார்க்கிறேன்-அருகில் கம்பீரமாக நின்ற தென்னை, நிறைவெறிகாரன் போல் தலையைத்தலையை ஆட்டுகிறதே! திடீரென அதுமுறிந்து படாரென என் வீட்டிற்கு மேல் விழுந்தால் ... நானும் கூண்டோடு...

எனக்கு இப்போது வீட்டிற்குள் இருக்கவே பயமாக இருக்கிறது! என்ன தைரியத்தில் நான் வீட்டிற்குள் இருக்க முடியும்?

வீட்டை விட்டுப் பயத்துடன் வெளியே பாய்கிறேன், நிமிர்ந்து பார்க்கிறேன், தென்னை ஆட்டம் போடுகிறது, பனை தள்ளாடுகிறது, தேங்காயோ பனங்காயோ தவறி என் தலையில் விழுந்தால்......அல்லது மரமே முறிந்து என் மீது சாய்ந்தால்......கடவுளே! எனக்குப் பயமாக இருக்கிறதே!

தெருப் படலையைத் தள்ளிக்கொண்டு வீதியில் கால் வைத்தேன் கார்-பஸ் வண்டிகள் பயங்கர வேகத்துடன் மாறி மாறிப் போய்வந்து கொண்டிருக்கின்றன. ஏதாவது இப்போது என் மீது மோதினல் ...... ஐயய்யோ! எனக்குப் பயமாக இருக்கிறதே!

வீதியைவிட்டு வயல் வெளிகளால் ஓடுகிறேன். நாசமாப்போன விஷயம் இப்போதுதான் எனக்கு ஞாபகம் வரவேண்டுமா? போன மாதம் எங்கடை கந்தப்பு வயல் வரம்பால் நடந்துகொண்டிருக்கும்

(14- பக்கம் பார்க்க)




உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுகெ!

மித்தியன்
...காப்பான, நிச்சய ...னி. விசேஷமாக ...மிழ் ஈ கட்டுப் ...ற்கு உகந்தது.

'எல்ட்ரெக்ஸ்' 20
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதி சிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி.எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

களைக்கொல்லி 'D'
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

'அசொட்றின்' 60
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்றழிக்க வல்ல,ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்.

களைக்கொல்லி 'P-20'
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ்வேளை சகல தாவரங்களதும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

'ஸ்டாம்' எப்-34
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




...கை லிமிட்டெட்

...பெ. 519 கொழும்பு. டெலிபோன்: 28333

குரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை அழைக்கப்பட ....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கா-கஜல்'' என்று பெயர், தீபாவளி கூடிய இரவு கூட்டிய மை இட்டுக்கொண்டால் தான்திருஷ்டிபடாமல் தடுக்கலாம்என்ற நம்பிக்கை வடஇந்தியாவில் நிலவி வருகிறது. இந்த மை திரட்டுவதற்குக் கடுகு எண்ணெய் தான் உபயோகப்படுகிறது. தீபாவளி இரவு முழுவதும் ஒவ்வொருவீட்டிலும் பெரிய அகல் ஒன்றை எரியவிட்டு இது சேகரிக்கப்படுவதைக் காணலாம். இதை மறுவருஷத் தீபாவளிவரையிலும் ஜாக்கிரதையாக வைத்திருப்பார்கள்.

## கோவர்த்தன் பூஜை

உத்தரபிரதேசத்திலுள்ள கிராமங்களில் தீபாவளிக்கு மறுநாள் 'கோவர்த்தன்' என்ற பெயருடன் ஒரு பூஜையும் உண்டு. வீட்டு வாசற்படியின் வெளிப்புறத்தில் ஒரு சிறு திண்ணை எழுப்பி அதன்மீது மண்ணினால் ஒரு பொம்மை வீடு கட்டுவார்கள். அந்த வீட்டிற்குள் மண்ணினால்செய்த கணபதியும் கௌரியும் வைக்கப்படும். அதன் முன் மாவிலை கட்டிய அரிசிகுத்தும் உலக்கையும், புதிய கரும்புக்கழியும் வைக்கப்படிருக்கும்.

கரும்புக்கழிபோல் இந்த வீடு உயரவேண்டும்; கங்கையும் யமுனையும்போல் செல்வம் கொழிக்கவேண்டும்'' என்று பாடிக்கொண்டு, வீட்டிலுள்ள சுமங்கலி ஸ்திரீகள் உலக்கையை மூன்று தரம் சுற்றுவார்கள். உலக்கையைச் சுற்றுவதினால் தரித்திரம் அகன்றுவிடும் என்பது அவர்களின் நம்பிக்கை. தீபாவளிக்குப்பிறகு தான் சாதாரணமாய் அப்பிரதேசங்களில் கரும்பு அறுவடை செய்யப்படும். இந்திரனுக்குச் சேரவேண்டிய பண்டிகையைத் தான் ஏற்றுக் கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைத் தாங்கினது இன்றுதான் என அவர்கள் கருதுகின்றனர்.

## பம்பாய், பூனாவில்...

பம்பாய், பூனா பிராந்தியங்களில் வசிக்கும் மகாராஷ்டிரர்கள் தீபாவளி தினத்தன்றுதான் பலிச் சக்கரவர்த்தி முக்தி அடைந்ததாகக் கருதுகின்றனர், தீபாவளிக்கு ஒருவாரம்முதல் வீட்டின் எல்லா அறைகளையும் நன்கு சுத்தம் செய்து, மாவினால் இழைக்கோலம் இட்டு அலங்கரிப்பதுஉண்டு. பொட்டுக்கோலம் இடுவதிலும், வர்ணமிட்ட மண்ணினால் தரையில் விதவிதமான சித்திரங்கள் வரைவதிலும் மகாராஷ்டிரப் பெண்கள் கைதேர்ந்தவர்கள்.

ஒரு தட்டில் மாவினால் பலிச்சக்கரவர்த்தியின் உருவம் செய்து, அறையின் மத்தியில் வைப்பார்கள். ''கஷ்டம் எல்லாம் தொலைய வேண்டும்; பலிச்சக்கரவர்த்தியின் நாடு செழித்து ஓங்க வேண்டும்'' என்று மராத்திப் பெண்கள் பாடுவது வழக்கம்.

## சகோதரிகள் மரியாதை பண்டிகை

டில்லி, வங்காளம், பீஹார், உத்தரப் பிரதேசம் முதலிய இடங்களில் தீபாவளிக்கு அடுத்த இரண்டாவது நாள் ஒரு விசேஷக் கொண்டாட்டம் உண்டு. சகோதரிகள் தம் சகோதரர்களுக்கு. மரியாதை செலுத்துவதற்கென ஏற்பட்ட பண்டிகை இது. ஒவ்வொரு சகோதரியும் தம் சகோதரர்களைத் தம் வீட்டுக்கு அன்று வரும்படி அன்புடன் அழைத்து விருந்து அளிப்பார்கள்.

யமனுடைய சகோதரி யமுனா இன்று தன் சகோதரனை அழைத்து விருந்து செய்வித்ததாயும், உண்ட பிறகு மிகவும் மகிழ்ச்சி கொண்ட யமன், இவ்விதம் சகோதரிகளின் விருப்பத்துக்கு இணங்கி விருந்து உண்ணும் ஒவ்வொருவனும் நீடூழி வாழ்வான் என ஆசீர்வதித்ததாயும் கூறப்படுகிறது.

## யமுனை நதியில் ஸ்நானம் விசேஷம்

யமுனை நதிதான் யமனின் சகோதரி எனக் கருதப்படுவதால், அந்நதியில் அன்று ஸ்நானம் செய்வது மிகவும் விசேஷம். பிரயாகையிலும் யமுனை நதியின் இருபுறமுள்ள நகரங்களிலும் இன்று பெரியமேளா நடைபெறும்.

ஸ்நானம் முடிந்ததும், சகோதரன் மனையில் அமர, சகோதரி தன் வலதுகையில் சந்தனக் கிண்ணம் ஏந்தி, இடது கைச் சுண்டு விரலால் அண்ணன் நெற்றியில் திலகம் இடுவாள். இச்சமயம் அவள் பாடும் பாட்டுக்கு, ''என் உடன் பிறந்தான் நெற்றியில் திலகம் இட்டு, யமனின் வழியில் முள் இட்டேன். அதாவது யமன் வராதபடி செய்தேன் யமுனையைப்போல் என் சகோதரனை யானும் பணிந்திடுவேன்! யமனைப்போல் என் சகோதரனும் அமர வாழ்வு பெறுவான்'' என்பதுதான் பொருள்.

## உயர்ந்த விருந்து

இதன் பிறகு பெரிய விருந்து நடக்கும். சாதாரணமாக எல்லா வீடுகளிலும் அன்றையச் சமையலைச் சகோதரி தானே தன் கையினால் செய்வாள். ஒருவனுக்கு அநேக சகோதரிகள் இருந்தால், ஒவ்வொருவர் வீட்டுக்கும் சென்று ஒரே நாளில் ஒன்றன்பின் ஒன்றாய் உருந்து சாப்பிடுவது மிகவும் வேடிக்கையாய் இருக்கும். உடன் பிறந்தவர்களுக்குள் சிறுவயதில் ஏற்பட்ட அன்பு, விவாகத்துக்குப் பிறகு சிறிதும் குன்றக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்துடன் ஏற்பட்ட பண்டிகைதான் போலும் இது!

# தலைவன் தாள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தவறாது தாளமிடத்தெரிந்த மத்தளக்காரன். ஜதி தவறாமல் ஆடத் தெரிந்தவன் ஆழமான அறிவுச் சுழிகளை அடக்கியுள்ளான். சினமென்ற மதப்பாறைகளைக் கட்டி ஆண்டவன். மதமென்ற அகங்காரத்தை வென்றவன். மோகத்தைப் பொடியாக்கியவன். ஆக்கத்துக்குரிய உணர்ச்சிகளை அடக்கி ஆண்டவன். இறைவன் நாமத்தை அர்ச்சிப்பதால் தன்னை அடக்கிவிட்டவன் முத்துக்கள் பவளங்கள் சங்குகள் போன்ற திரவியங்களை முயற்சி உடையவருக்கு வழங்குவான். எதையும் தனக்காக உபயோகப்படுத்தாத பிறர்க்குரியாளன். அவன் நீர் உப்புத்தான். ஆனால் உண்டிக்கு உயிரான சுவையல்லவா அது.

கங்கை, என் நினைவுக்கு வருகிறது. இன்று நேற்றல்ல... கர்ப்பகாலந்தொடக்கம் ...என் கருத்திற் கலந்தவர் அவர். என்னுவியோடு இரண்டறக் கலந்த இனியவர். அவர் பற்றி இதுவரை அறியத்தவறிவிட்டேன் நான்.

தென்றல்: கங்கா நீ அவனை அறிவாயா?

கங்கை: ஆம் என் உள்ளுணர்வில் அவன்பற்றிய நினைவு எழுகிறது,

தென்றல்: என்ன என்னைப் பரிகசிக்கிருயா?

கங்கை: தென்றலே யான் பரிகாசம்செய்யவில்லை உண்மையே பேசுகின்றேன். உன் பேச்சின்போது வெளியாகிய உண்மைக்குப்பிறகு என் பலவீனத்தை உணர்ந்தேன். அதேவேளை உள்ளத்தினுள்ளொளிரும் பூர்வ எண்ணங்கள் பூத்தன.

தென்றல்: அப்படியா நீ ஒரு ஞானியாகிவிட்டாயா?

கங்கை: தென்றலே பரிகாசத்தை நிறுத்து. என் நெஞ்சில் நீறுபூத்துக் கிடந்தது... நீற்றை நீ கலைத்துவிட்டாய்... நெருப்பின்சுடர் வீச ஆரம்பித்துவிட்டது. இனி எனக்குரிய இடம் இதுவல்ல...

தென்றல்: அப்போ உனக்குரிய இடம்-

கங்கை' ஆழித்தேவனின் அகமே என் வாழ்க்கைக்கு உரிய இடம்.

தென்றல்: என்ன, ஒரு யுவதியின் பேச்சா இது... உன்தாய் மலைமங்கை இதையறிந்தால் யானே உன்னைக் கெடுத்தவள் எனத்திட்டுவாள். உன் கொட்டத்தைக் கண்டு அதனை அடக்கஆழித் தேவனின் பெருமையைக் கூறினேன், ஆனால்...

கங்கை: உன் நன்றியை நான் மறவேன். யான் வருகிறேன்.

தென்றல்: ஐயையோ இது கூடாது. மலைத்தாயே உன்மகள் கங்கை உன்னை மறந்து ஓடுகிருளே...

மலை: யார் என்னை அழைப்பது?

தென்றல்: நான்தான் தென்றல்... கங்கை தன் காதலனைத் தேடி ஓடுகிருள்.

மலை: கங்கா...கங்கா...


கங்கை: அம்மா என்னைத் தடுக்கவேண்டாம்.

மலை: எங்கே செல்கிருய்; என் அனுமதியில்லாது நீ வேறிடம் செல்லலாமா?


கங்கை: அம்மா நான் பிறந்த பிறவிப்பயனை எய்த வேண்டுமே

(16- பக்கம் பார்க்க)


இத்தீபாவளி நன்னாளில்
எங்கள்
அன்பர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்
வாடிக்கைக்காரர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
WINSLOW GARAGE
AUTOMOBILE ENGINEERS
Power House Road, Jaffna.
Phone: 269

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!


நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


நீடித்த உழைப்பும்
நிறைந்த பயனும்மிக்க
உலகில்
புகழ்பெற்ற
றேடியோக்கள்
மிகவும் நிதான விலையில் கிடைக்கக்கூடிய
நம்பகமான ஸ்தாபனம்
மறவாதீர்கள்
S. சுலைமான்கண்டு & பிறதர்
5&7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தித்திக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்
★ மணவிழாவா
★ திருவிழாவா
★ பெருநாளா
★ பண்டிகையா
எதற்கும் எங்கும் எவருடனும் சரிநிகராகக் கலந்துகொள்ள
★ வசந்தாஸ் அச்சடிச் சேலைகள்
★ வசந்தபுரம் பட்டுச் சேலைகள்
வசந்தாஸ்
42, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
வசந்தபுரம்
7, 2ம் ஒழுங்கை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமரியாதைத் திருமணமே சிறந்தது!

## ஈ. வே. ரா. பெரியார் கருத்து

**சென்னையில் பெரியார் தலைமைவகித்துச் சிக்கனமான முறையில் ஒரு திருமணத்தை நடத்திவைத்தார். வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் என்ற அந்தமண விழாவிலே அவர் நிகழ்த்திய உரையின் சாரம் இங்கு தரப்படுகிறது.**

'தமிழர்கள் திருமணம் நடத்திய முறை எப்படிங்கிறதுக்கு வரமுறை கிடையாது. ஏதோ பெரியவங்க நடத்திருங்கன்னு சொல்லிக்கிட்டு அப்படியே நடத்திக்கிட்டு வர்ருங்க.

தமிழர் திருமண வழக்கம் எப்படீன்னு நானும் ஆராய்ச்சி செஞ்சுபாத்தேன். புலவன்களைக்கேட்டுப்பார்த்தேன் ஆளுக்கு ஒண்ணு சொன்னுங்க. எந்தப் பொண்ணுக்காவது வயசுவந்து திருமணம் செய்யறதுன்ன அந்த நாள்லே கிராமத்திலேமுரட்டுக்காளையை அடக்க அனுப்பி வைப்பாங்களாம். எவனே ஒருவன் உயிருக்குத் துணிஞ்சு காளையை அடக்கப்போவானும். அப்படிப் போறவங்களை முரட்டுக்காளை, குத்திக் கிழிச்சுப் போட்டாலும் போட்டுடும்! அப்படிப் பார்த்தா உயிரு தப்பிக் காளையை அடக்கிட்டு வர்ற இளைஞன் யாராவது ஒருத்தன்தான் இருப்பான். அவனுக்கு மட்டும்திருமணம் ஆனல் போதுமா! மத்தவங்க சங்கதி என்ன?

புலியை அடக்கி அதன் நகத்தை எவன் கொண்டு வாரானே அவனுக்குப் பொண்ணைக் கட்டிக்கொடுக்கிறதாம்! புலிக்கிட்டே எவன் துணிஞ்சு போவான். அப்படிப் போறவங்கள்லே உயிரோடு எவன் திரும்பி வருவான்!

இன்னென்னும் சொல்லிக்கிடுருங்க.

பொண்ணை ஒரு பக்கமா நடக்கவிடறதாம்! பையனை இன்னொரு பக்கமா நடக்கச் சொல்றதாம்! ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கடைக்கண்ணுலே பாத்திக்கிடறதாம்! அதுக்கு ஆதாரமா ஒரு பாடலே இருக்காம்! இப்படியெல்லாம் தமிழர் திருமண முறை இருக்குதுன்னு சில புலவன்க என்கிட்டே 'ஆர்க்யூ' பண்ணிஞங்க.

பொண்ணும் பையனும் அப்படியும் இப்படியும் நடந்துக்கிட்டுக் கடைக்கண்ணுலே பார்க்கிறதாது'. அதுஎன்ன நாடகக்கொட்டகையா? சுத்த பைத்தியகாரத்தனம்!

ஒருத்தருக்குப் பிடிச்ச பெண்ணைத் காதலிக்க சீர்திருத்த முறையிலே மணம் செஞ்சுக்கிறதுதான் நல்லது. இதனுல் காதல் வளரும் சமத்துவம் வளரும். இப்படிப்பட்ட சுயமரியாதைத் திருமணங்க செல்லாதுங்குன்க. இப்படிச் செஞ்சிகிட்டுகையோடேரிஜிஸ்டரும்செஞ்சுகிடணும். நான் கூடரிஜிஸ்டர் மரேஜ்தான் செஞ்சுக்கிட்டேன்!

திருமணத்திற்குப் பின்னர் கணவனும் மனைவியும் சமம். ரெண்டுபேருக்கும் சம உரிமை உண்டுங்கிற எண்ணத்தோடே வாழணும் சிக்கலமா வரவுக்குத் தகுந்த செலவு செய்யணும். குழந்தை குட்டிகளை அதிகம் பெத்துக்காமே ஒண்ணு ரெண்டோடு நிறுத்திக்கிங்க!'


மாணவ—மாணவிகளுக்கும்
மற்றும்
அன்பர்கள் - ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

M. S. T.

95 / 3, ஸ்ரான்லி ரேட் — யாழ்ப்பாணம்.
தலைமைக்காரியாலயம்:

M. S. S. T.

49, பேஸ்லைன் ரேட் — கொழும்பு-8.



அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

S. R. S.
ஜவுளி மாளிகை
அன்
நெசவு நிலையம்



காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்
போன்: 296



எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!



கண்ணையும் — கருத்தையும்
கவரும்
தங்க - வைர நகைகளை
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீருன் சாஹிப்

தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னதிட்டி, (போன்:585) யாழ்ப்பாணம்.


## வாழைத்தண்டு

பருமனைக் குறைக்க மருந்துதேடி அலைபவர்கள் வாழைத் தண்டைப் பயன் படுத்தலாம் வாழைத் தண்டின் சாறைப் பிழிந்து வாரத்திற்கு ஒருமுறை அருந்துவதால் பருமன் குறைகிறது.

வயிற்றுக் கோளாறுகளைச் சரிசெய்வதில் வாழைத்தண்டு சிறந்த மருந்தாகும். வாழைத் தண்டை அன்றாட உணவில் பயன்படுத்தி வந்தால் வயிற்று வியாதிகள் பலவற்றை நீக்கலாம்.

### வாயை குறையுங்கள்

நீயும் உனது மனைவியும் சேர்ந்து நான்கு கண்களால் உலகைப் பார்த்தும் நான்குகாதுகளால் செய்திகளைக் கேட்டும் இல்லறத்தை நடத்துங்கள். சிறப்படைவீர்கள். ஆனல்காதுகளையும், கண்களையும் பெருக்கிக் கொள்வதனல் மட்டும் வெற்றிபெற்றுவிட இயலாது. வாய்கள் இரண்டையும் ஒன்ருகக் குறைத்துக் கொள்வதிலே தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

எஸ். ஆர்.

## மழலை

(ஆலந்தூர் கோ. மோகனரங்கன்)

பொன்வீணை காணுத புதுப்பாடல் ஒன்று
பூப்போன்ற உன்வாயில் உருவான தின்று!
இன்பத்தை அளிக்கின்ற இணையற்ற சொல்லே
இதுபோல என்வாழ்வில் நான்கேட்ட தில்லை!

0 0 0

தேனுக்கு வீணுகத் திரிவார்கள் எங்கும்
தேடாமல் நம்நெஞ்சில் நாள்தோறும் தங்கும்
வானுக்கும் மேலான எண்ணங்கள் கொட்டும்
வழிகேட்டு மனைவாசல் வரைவந்து தட்டும்!

0 0 0

ஏட்டுக்குள் அடங்காத எழுத்தாகக் கண்டேன்
இமையாமல் நானெடுத்து நெஞ்சார உண்டேன்
வீட்டுக்குள் விளையாடும் மழலைச்சொல் அருமை
வேறெங்கும் அறியாத விருந்தாகும் பெருமை!

0 0 0

கனியின்பம் முகம்நாணிப் போனுலும் போகும்
கருங்கல்லும் மலராக ஆனுலும் ஆகும்!
தனியின்பம் இதுவென்று புவியெல்லாம் கூறும்
தணலெங்கும் சில்லென்று குளிராக மாறும்




தயாரிப்பு: குணம்

## இன்றைய பெண்களின் நவீன அலங்காரம்!

இந்தநாளையப் பெண்கள் தங்களை அலங்காரஞ் செய்வதாகச் சொல்லிக்கொண்டு மகா அலங்கோலஞ் செய்து கொள்கிருர்கள். எந்த வகையில் அவர்கள் அலங்கோலம் செய்துகொள்கிருர்களென்று பார்ப்போம்.

### நைட்டிறஸ்

இரவிலே போடுகின்ற இந்த உடுப்பை நமது பெண்களில் ஒருசிலர் பகலிலே போட்டுக் கொண்டுபோதகர்களாகத் தோற்றமளிக்கிருர்கள். ஒருவீட்டிலே அம்மா, பிள்ளை, பெரியம்மா, சின்னம்மா எல்லோரும் இந்த டிறஸை அணிந்து ஒரே 'நைட்டிறஸ்' குடும்பமாகக் காட்சியளித்ததைத் துரதிர்ஷ்ட வசமாகக் காண நேர்ந்தது. அருமையான சேலைசட்டை அணிந்து கண்ணுக்கு அழகாகத் தோற்றமளிக்கவேண்டிய இந்தப் பெண்கள் எதற்காக இந்த அவலட்சணமான உடையை அணிந்துகொண்டு திரிகிருர்களோ தெரியவில்லை.

### மினிஸ்கேட்

இன்னும் மேலைத்தேச நாகரிகத்தில் மூழ்கிய நமது பெண்கள்மினிஸ்கேட் உடைகளை அணிந்துகொண்டு பஸ்ஸுகளில் ஏறமுடியாமலும் வேகமாக நடக்க முடியாமலும் தொல்லைப்படுகிருர்கள். நல்ல வசதியானநமது நாட்டு உடைகள் இருக்க இவர்கள் அவைகளையெல்லாம் விட்டுவிட்டு எதற்கும் உதவாத இந்த அரைகுறை ஆடைகளை அணிந்து தாங்கள் அவதிப்படுவதோடு எங்களையும் எதற்காக அவதிப்படுத்துகிருர்களென்று புரியவில்லை.

### சாளரச்சட்டை

இன்னும் இவர்கள் சாளரச்சட்டைகளை அணிந்து கொண்டு சற்றும் நாணமின்றி உலாவருகிருர்கள். தமிழகத்துப் பல்கலைக் கழகமொன்றில் நடைபெற்ற விழாவிலே அப்பழுக்கற்ற சட்டைகளணிந்த தமிழ் நாட்டுப் பெண்களின் மத்தியிலே இத்தகைய அலங்கோலச்சட்டைகளோடு நமது நாட்டுப் பெண்கள் தோற்றமளித்ததையும் அதன்காரணமாக அந்நாட்டு வாவிபர்களில் சிலர் எம்நாட்டைப்பற்றித் தரக்குறைவாகப் பேசியதையும் இன்றும் எம் நெஞ்சம் மறப்பதாக இல்லை,

புலவர் தமிழ்மாறன்

### சாயம்போக்கும் சாயம்

இன்னும் இக்கன்னியர்கள் கண், வாய், கை, நகங்களில்

(16-ம் பக்கம் பார்க்க)


எல்லோர்க்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக்கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்

எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்

நகைகள் — வைர வியாபாரிகள்
கன்னதிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நூல் நிலையம்

தெய்வக்கீதமாலை ஆக்கியோன்: தமிழிசைக் கவிஞர், சைவப்புலவர், சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி.

''இறைபணி புரித லாலே
யின்பமே யெங்கும்
தேங்கப்
பிறைநதி யரவு சூடும்
பரமனின் அருளைக் [illegible]
காட்டும்
திருமணி தூய நீறு
ஐந்தெழுத் தென்றும்
போற்றி
நிறைவுறு வாழ்வு காண
நினைந்துரு வான கீதே''

நூலில் ஆசிரியர் முன்னுரையாகப் பாடிய பாடலின் முதலில் உள்ளதுஇது, இப்பாடலே இந்நூல் தெய்வக்கீதமாலைதான் என்பதை முதலிலே தெரிவிக்கின்றது. இசைக்கு இசைவான் இறைவன் என்பது அமுதமொழியாகும். ஆத்மீக உணர்ச்சிக்கு வித்திடும் பாடல்கள் இசையுடன் இணையவேண்டியது அவசியமாகும். ஆசிரியர் இசையை நன்கு புரிந்தவர். மேலும்

''ஏரம்பமூர்த்தி இசைப்
பாடல்
ஈசனிடம்
வாரம் பெருக்கி
மகாருளத்தில் -ஈரமுறச்
செய்யும் இயல்பு
கண்டோம்''

என்று வாழ்த்துரையில் சுத்புருடதேசிகர்கூறுவதிலேயே இவரது பாடலுக்கும் இசைக்குமுள்ள தொடர்பு தெளிவுபடுகின்றது.

''என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே'' என்பது திருமூலர் வாக்கு. இந்த வாக்குக்கமையவும் இறைவனுகிய தலைவனை பரவும் நூலாகவுள்ளது தெய்வப்பாடல்.

காலத்தின்கோலத்தில் மயங்கிய மனித நெஞ்சங்கள் ஆறுதலற் அலைபாயும் நிலையை நாம் இன்று காண்கின்ருேம். பாடலின் பொருள் என்ருல் என்ன? மனிதனின் உலகாயுத வாழ்வைப் பாடுவதல்ல. உலகாயுத வாழ்வுக்கப்பால் ஒளிமயமான உண்மைதான் நிலைத்துவமானது என்பர் மூதறிஞர். அந்த உள்ளுணர்ச்சிக்கு இந்த நூல் ஒரு காரணமாகியுள்ளதை மறுக்கமுடியாது.

கணபதி தொடக்கம், வாவி ஈருக பன்னிரு கடவுளரைப் பாடி, அப்பால் சக்தியின் பல்நிலை; திருநீறு. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசக சுவாமிகள், அருணகிரிநாதர் செம்மனச்செல்வி, தெளிவு, வாழ்த்து ஆதியாம் ஏனைய பத்துத் தலையங்கங்களுக்கும் பத்திமையானகருத்து மிளிர ஆசிரியர்யாத்துள்ள கவிதைகள் அனைத்தும் அவரது சிவநினைவை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

ஆரம்ப நிலையில் அமைந்துள்ள பாடல்கள் சிறுவர்களும் சிந்தைகொள்ளும் பெற்றிமை பெற்றுள்ளன. அப்பால் அருணகிரியாரின் சந்தங்களை அடியொற்றியும் பாடப்பட்டுள்ளன. ஆசிரியர் இசையோடு ஈடுபாடுள்ளமையால் பாடல்கள் அநேகம் பண்ணுடன் பொருந்தியுள்ளன.

நல்லதான, நாட்டுக்குத் தேவையான நூல், ஆசிரியர் பணி வளரப் பிரார்த்திக்கின்ருேம்.

— இ. ந.

## வானத்திலிருந்து மின்சாரம்

வளி மண்டலத்தின் மேல் அடுக்குகளில் எல்லையற்ற வலுசமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொஸ்மிக் கம்ர்களினதும், சூரிய கதிர்களினதும் இடையருத செல்வாக்கின் கீழ் எரிவாய்வு மூலக்கூறுகள் துகள்களாக அயோன்ஸ்களாகச் சிதறல் அடைகின்றன. இந்தத் துகள்கள் மூலக்கூறுகளாகமாறுவதற்கு மீண்டும் ஐக்கியப்படமுனைகின்றன. இந்த நிகழ்வுப் போக்கில் வலு ஜனிக்கின்றது. இதை நாம் நமது பாவிப்புக்குப் பயன்படுத்த முடியுமா? இதற்காகப் பத்துலட்சம் வால்ட்ஸ் சக்தியுள்ள டி.ஸி பிறப்பாக்கிகளை உருவாக்கும் பணியில் சோவியத் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இது வானிலிருந்து மின் வலுவை பெறும் புதிய தொழில்உருவாக வழிவகுக்கும்'


றேட் அன் ருன்ஸ்போற் கம்பனி லிமிட்டெட்,
(ஏஜண்டுகளும் நிர்வாககர்த்தாக்களும்)
யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
ஓட்டோமோபைல் என்ஜினியேர்ஸ்,
யாழ்ப்பாணம்.
பெற்ரேலிலும், டீசலிலும் இயங்கும் எல்லாவித வாகனங்களும் திருத்திக் கொடுக்கப்படும்.
மோட்டார் உதிரிப்பாகங்களும்
ப்ராம் ஓயில் பில்டர்கள்
சுப்பர்டெக்ஸ் ஓயில் சீல்ஸ்
ரிம்கென் ரேலர் பெயரிங்ஸ்
இருப்பிலுள்ளன
தேவைகளுக்கு எம்மிடம் விசாரியுங்கள்


## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

''நானும் கேள்விப்பட்டனுன், இரவைக்கு நாடகங்களும் இருக்குதாம். பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு போவம்.''

சண்முகத்தின் மனமாற்றம், அவன் வாழும் பகுதியையே ஒருவித விழிப்புணர்ச்சிக்குள்ளாக்கியது.


(யாவும் கற்பனை)

## ஒரு பயந்த...

(11-ம் பக்கத்தொடர்ச்சி)

போதுதாஞம் அவரை ஒரு நாகம் தீண்டி வயல் வரம்பிலேயே நுரைகக்கி நீலம் பூத்து மரணமாஞராம்.

வரம்புகளை எட்டி எட்டிப் பாய்ந்து ஓடுகிறேன்- ஓடுகிறேன் - மரணவேகம்! இளைக்கிறது. உடம்பெல்லாம் களைக்கிறது! ஓட்டத்தின் வேகத்தால் என் மூச்சுத் திணறுகிறதே! கால்கள் பின்னுகின்றன! முடியாது என்ருல் இனி ஓட முடியாது! அப்படியாஞல் இதிலேயே விழுந்து நான் சாக வேண்டியதுதாஞ? முடியாது, உயிர் போஞல் போகட்டும். எனக்கு இந்த 'விபத்து உலகத்தில்' வாழப் பயமாக இருக்கிறது; நான் ஓடுகிறேன்!


யாழ்க்குடா விவசாயிகளே!

உங்கள் அபிமான இரு சில்லு ட்ராக்டர் லான்ட்மாஸ்டர் 150.

பூவுலகின் எத்திசையிலும், லான்ட்மாஸ்டர் 150 ஒன்று நிச்சயமிருக்கக் காண்பீர்கள். பலமானது நம்பிக்கையானது. அமோக பணிகள் பல புரியவல்லது. நானிலமெங்கும் பரவிய சேவை வசதிகள் கொண்டது.

இத்தகைய தகுதிகள் கொண்ட வலிமிகு பணியாளியின் உருவாக்கம் ஓர் இலங்கையரையே சாரும். ஆசிய நிலைமைகளை மனதிற் கொண்டு உருவான இவ்வுயர் படைப்பு இலங்கையில் 2000த்திற்கும் அதிகமான விவசாயிகளால் பாவிக்கப்படுகிறது. நாடெங்கிலும், பயிற்சி பெற்ற, வேண்டிய உபகரணம் கொண்ட, சேவை நிலையங்கள் உதவி பின் கொண்டது. உங்கள் தேவைகளுக்குத் தக்கதாக வேண்டிய மேலதிக உபகரணங்கள், உருப்புக்கள் வசதியும் கொண்டது லான்ட்மாஸ்டர்.

லான்ட்மாஸ்டர் 150, இலகுவாகச் செலுத்துக் கூடியது. வேண்டியபோது உழுதலைக் கூட்டலாம்.

உங்கள் வருவாய்க்குத் தகுந்த இலகுவான பணக்கட்டண வசதிகள் உள்ளன.

புதிய விநியோகஸ்தர்: ஈ. சி. செல்வராஜன்
'பார்ம் சேர்விசஸ்'
55 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மேல் விபரங்களுக்கு, கூப்பனை நிரப்பி அனுப்பவும்

பெயர்..........................................

முகவரி..........................................

லான்ட்மாஸ்டர் 150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்

## காசிநகர்க் குரங்குகள்

காசியிலுள்ள குரங்குகள் யாத்திரிகர்களைத் துன்புறுத்தி இம்சிப்பதற்குப் பெயர்போனவை. ஒருநாள் நான் அவற்றிடம் அகப்பட்டுக்கொண்டேன். அவை என்னை வழிமறித்து நின்று பெருங் கூச்சலிட்டு எனது கால்களைப் பிடித்து இழுத்து தொந்தரவு செய்தன. நான் ஓட்டம்பிடித்தேன். எவ்வளவு வேகமாக ஓடினேனோ அவை அதிலும் வேகமாகப் பாய்ந்துவந்து என்னை மொய்த்துக்கொண்டு கடிக்கவும் ஆரம்பித்தன. அச்சமயம் அவ்வழியால் போன ஒருவர் 'பயப்படாமல் அவற்றை எதிர்த்து நில்' என்றார் நானும் அவ்வாறே ஓட்டத்தை நிறுத்திவிட்டு திரும்பி நின்று எதிர்த்தபோது குரங்குகளும் பின்னால் தயங்கி நின்றுவிட்டு கடைசியில் கலைந்தோடிவிட்டன,

துன்பங்களையும் கஷ்டங்களையும் தைரியமாக எதிர்க்க வேண்டும். குரங்குகளைப்போல அவை பின்னடைந்துவிடும் கோழைகள் ஒருபோதும் வெற்றிபெறுவதில்லை. விடுதலை பெறவேண்டுமானால் அல்லல்கள் அனைத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

—சுவாமி விவேகானந்தர்

## அவர் எழுதிய தமிழ்

மாரனுக்கு மணிசூட்ட வந்ததுபோன்ற இவ்வசந்த காலத்திலே ஒருநாள் உலகமெலாந் தொழுகின்ற ஆயிரஞ் சுடர்க்கை அலரிவானவன் குணதிசைக் குன்றின் உச்சியையடைய எட்டிப் பார்க்கிறான். பூம்பொழிலகத்தும் பொய்கையின் கண்ணும் பொன்விளை செறுவினும் பறவையினங்கள் துயிலுணர்த்தொலியா நின்றன, தாமரைபுரி நெகிழ்ந் தவிழ்க் குமுதம் வாய்மூடின, கடவுளர் கோட்டத்துக் காவலர் முன்றிலினும் வால்வெண் சங்கமும் காலை முரசமும் களைகுரலியம்பின. அப்பொழுது திருந்திய அறிவுடை அருந்தமிழ்ப் புலவனொருவன் வண்டறைந்து தேனார்த்து வரிககுயில்களிசை பாடத் தண்டென்ற விடைவிரவித் தனியவரை முனிவுசெய்யும் ஓர் பொழிலகம் புகுந்தான்.

## அண்ணாவின் உவமை

மோட்டாரை நன்றாக ஓட அதை ஓட்டவிசை இருந்தால் மாத்திரம் போதாது. அது தவறான வழியில் சென்றால் தடுக்க பிரேக்கும் வேண்டும். நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால்மாத்திரம் போதாது--அதிலிருந்து வெள்ளம் புரண்டு ஊரை அழித்துவிடாமல் இருக்க கரைவேண்டும். நல்ல காளையை ஓட்ட சிறு சவுக்கு இருந்தால் மாத்திரம் போதாது—அதை கிழக்கேயும் மேற்கேயும் திருப்ப மூக்கணாங் கயிறும் வேண்டும். வீட்டிற்கு வாயிற்படி இருந்தால்மாத்திரம் போதாது—வாயிற்படிக்கு கதவுவேண்டும். கதவுக்கு தாழ்ப்பாளும் வேண்டும்: அதுபோலவே ஜனநாயக காலத்தில்-குடியரசு வந்த பிறகு- நாட்டில் நல்லாட்சி நடக்க வேண்டுமானால் ஆளும கட்சி ஒன்று இருந்தால்மாத்திரம் போதாது, மாற்றுக் கட்சியும் இருக்கவேண்டும். மாற்றுக் கட்சியில்லாத ஜனநாயக சர்க்கார், பிரேக் இல்லாத கார். கரையில்லாத ஆறு, மூக்கணாங்கயிறில்லாத மாடு. ஆகவே ஆளும் கட்சிக்கு அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும கட்சியாக மாறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை.

## பெயர் வந்த விதம்

பார்லிமெண்ட் நடவடிக்கைகளைத்தரும் வெளியீட்டின் பெயர் 'ஹன்ஸாட்' பிரிட்டிஷ் பார்லிமெண்ட் விவாதங்களை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டவரின் பெயர் லியூக் ஹன்ஸாட் 1752-1828) 1889 வரை இவருடைய வாரிசுகளே இவ்வறிக்கைகளை வெளியிட்டு வந்தனர். அச்சுக்கோப்பவராக ஆரம்பித்த ஹன்ஸாட் பின்பு பிரபல அச்சக முதலாளியானார். பிரிட்டனோடு தொடர்பு பெற்றிருந்த இலங்கை போன்ற நாடுகளில் 'ஹன்ஸாட்' என்ற பெயரே இன்றும் வழக்கத்தில் இருந்துவருகிறது.

## சி. ஐ. டி. சமர்த்து

ஒரு கொலைகாரனைப்பற்றி துப்பு விசாரித்தறியும்படி சி. ஐ. டி. இலாகா ஒரு கிராமசேவகரைக் கேட்டது. அவர் அவனுடைய புகைப்படம் ஒன்றை அனுப்பும்படி கோரினார். சி. ஐ. டி அவனைப் பல கோணங்களில், பல்வேறு உடைகளில் பிடித்த பன்னிரண்டு படங்களை அனுப்பினார். ஒரு வாரம் கழித்து கிராம சேவகரிடமிருந்து மறுமொழி வந்தது.

'கொலைகாரரில் பதினொருபேரையும் பிடித்துவிட்டேன். மற்றவனையும் இன்று கைதுசெய்யப்போகிறேன்.

தயாரிப்பு:—வழிப்போக்கன்.

# அருவிச் சுரங்கம்

புரட்டாசி மஹாளயப் பட்சத்து கடைசி நாள். அன்று அமாவாசை. கீரிமலை கதிரை ஆண்டவர் கோவிலை அடுத்த திடலில் பெருங் கூட்டம் கூடியிருந்ததைக் கண்டு அவ்விடத்தை இலக்கு வைத்து இறக்கைகளைச் சுருக்கினேன். என்ன புதினமென்று விசாரித்ததில் காங்கேயன் துறைமுக வேலைகளுக்கு கல்பெயர்க்க அங்குள்ள பாறைத்திடலில் வெடிவைத்தபோது கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்டதுபோல பூமி ஆவென்று வாயைப்பிளந்து உள்ளே பல விநோத நிலவறைகளையும் அரியதொரு அருவிச் சுரங்கத்தையும் காட்டிற்றாம். கூட்டம் கூட்டமாக இதனைத்தான் போய் பார்க்கிறார்கள்,

விரிசல் கண்ட பூமியின் பிலவினூடே இறங்கி நடந்தவர்களில் பலர் தீர்த்தமாடிய கோலத்தில் வெளியே திரும்புகிறார்கள். மூர்த்தி தலம் தீர்த்த மகிமை எல்லாமே கண்டு பரவசப்பட்ட அனுபவம் கூறுவோர் சிலர். பூகர்ப்ப இயற்கை விந்தைகளை எடுத்துரைப்போர் சிலர். சுரங்கத்தினூடே மண்டிக் கிடக்கும் அமாவாசை இருளை ஊடுருவி பழைய நாள் சரித்திரம் பேசுவோர் மற்றும் சிலர்.. இப்படியாக, நாலு குருடர் கூடி யானை பார்த்த கதை தான்

## அ. செ. மு

அன்றையதினம் சுரங்கம் பார்க்க இறங்கியவர்களுக்கு புரட்டாசி அமாவாசையில் கன்னி தீர்த்தமாடிய புண்ணிய பலனும் கிட்டியிருக்கும், ஆடி அமாவாசைத் தீர்த்தத்துக்குப் புகழ்பெற்ற கீரிமலை இனி வரும் காலத்தில் புரட்டாசி அமாவாசையினாலும் புகழடைய புதிய தீர்த்தக் குன்று ஒருவேளை வழிவகுக்குமோ, 'சொல்லேலாது'.

இறந்தவர்களுக்குத் திதி கொடுத்து நினைவு அஞ்சலி ஆற்றும் மஹாளய பட்சத்தில்தானே முன்னாள் பிரதமர் பண்டாரநாயகாவின் நினைவு நாள் அஞ்சலிகூட இம்முறை நாடெங்கிலும் (மலிவு அரிசி) தானதர்மத்துடனே அநுஷ்டிக்கப்பட்டது. ஆகவே, இப்படியாக வெல்லாம் புரட்டாசியில் தோன்றிய புதிய கன்னி தீர்த்தமும் மற்றும் தான தர்மங்களும் வாழ்க, வாழ்க வையகம் ,வீழ்க தண்புனல், பொங்குக அருவி, பொங்குக பானை என்று வாழ்த்துவோம்.

வெடிவைத்துப் பிளந்து போய்க் கிடக்கும் நெய்தல் திடல் முன்பொருகாலத்தில் சமுத்திரமாக இருந்ததென்றும் கடல்கோள் சம்பவித்தபோது சமுத்திரம் விலகி அப்பால் போனதாகவும், இவ்விதமாக தரையாக மாறிய கடல்படுகை-மணல் பரப்பு, அதன்பின் கால போக்கில் பாறைத் திட்டாக கெட்டித்துப்போயிற்றென்றும் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர் கூறுவர்.

கடல்கோள் சம்பவித்து சமுத்திரப்பரப்பு நிலப் பரப்பானபோது அந்நிலத்தில் 'அம்பர்' என்று புதிய சயன்ஸ் பாஷையில் சொல்லப்படும் கடல்படு திரவியமான பவளம் ஏராளமாகக் கிடைத்ததாம். அதையெல்லாம் யார் யார் எத்தனை எத்தனை கப்பல்களில் வந்து அள்ளிக்கொண்டு சென்றார்களோ! பவளக்கொடி பற்றியோ அல்லது பவளக் கொடியின்மேனி அழகில் கிறங்கிய அர்ச்சுனனைப் பற்றியோ இன்றைக்கெல்லாம் பேச்சே இல்லை. பவளமணிகளைப் போல அழகான பவளச் சிவப்பாக இப்பகுதியில் வளரும் ஈச்சம் செடிகள்தான் குலைகுலையாகக் காய்க்கின்றன இச்செடிகளிலுள்ள கூரிய முட்கள் குத்துவதையும் பொருட்படுத்தாமல் தீர்த்தக்கரைக்கு வருவோர் ஈச்சங் குலைகளை வெட்டிக் கட்டிக்கொண்டு போவார்கள். நமக்குப் பொசுப்பு அவ்வளவுதான்,

கேணி, குளம், குட்டை, கிணறு, வாவி, ஏரி, ஓடை, மடு, வாய்க்கால், ஆறு கங்கை, நதி, அருவி, பரவை பாய்ச்சல், விழ்ச்சி, தடாகம். புனல், சுனை, பொய்கை, ஊற்று, அணை, தேக்கம், சங்கமம், கால்வாய், சமுத்திரம், நீரிணை, தொடுவாய், குடா, வளைவு என்ன திகைக்கிறீர்கள்? இத்தனையும் நாம் வாழும் பூமியிலுள்ள நீர் நிலைகள்தாம், இவற்றிலே இந்தக் கற்றிடர் நீர்நிலைக்கு என்ன பெயர் பொருத்தமாயிருக்கும்? அருவிச் சுரங்கம் எனலாமா? சுண்ணாம்புச்

(18- பக்கம் பார்க்க)

# வெள்ளி மல்லிகை


இலங்கை தம்பதி திட்டச் சங்கம்



தொலைபேசி
ஆலோசனைகளும் சிகிச்சைகளும் 92354
23/5 ஹோர்டன் பிளேஸ் கொழும்பு-7
விசாரணைகளும் பிரசுரங்களும் 85189
457-காலி வீதி கொழும்பு-3

வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள்-ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

டயருமஸ்

(உங்கள் அபிமான ஜவுளிமாளிகை)
54, 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி : 316)

அன்பர்கள்-ஆதரவாளர்கள் அனைவர்க்கும்
எமது அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

சீப்சைட்

(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)
186-188 கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

பாரத் ஸ்ருடியோ
போன்: 252
கஸ்தூரியார் வீதி : : யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தலைவன் தாள்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மலை: என்ன... வேதாந்தம் பேசுகிருயா?

கங்கை: இல்லை விதியின் பயனைச் சொல்கின்றேன்.

மலை: கங்கா நீ குழந்தை.

கங்கை: இல்லையம்மா. நான் குழந்தையல்ல தாய்மையின் பாசத்தோடு என்னை நீங்கள் பார்க்கும்போது யான் குழந்தையாகத்தான் அம்மா தோற்றுவேன். ஆனல்... எனக்கென்ற வாழ்வை நிர்ணயிக்க வல்ல; பருவம் பெற்றுவிட்டேன்.

மலை: பருவம் வந்துவிட்டால் பாசத்தோடு பக்குவமாக வளர்த்த அன்னை தந்தையைப்புறக்கணிக்கவேண்டுமா.

கங்கை: இல்லையம்மா! காலம்வரும்வரைதான் உன் காவல். காலம் வந்துவிட்டால் என் காவல் உனக்கு உரியதல்ல.

மலை: மகளே! செல்வது மதியுடைய உனக்குச் சரி இலையாகுமா?

கங்கை: அம்மா புதிய வாழ்வுக்காகப் புறப்படுகிறேன் என்னைப் போகவிடு.

மலை: தாயைத் தள்ளிய வாழ்வு தகுந்ததாகுமா?

கங்கை: முட்டையிலிருந்து குஞ்சு தோன்றுகிறதற்குப் பெட்டைக் குருவிதான் காரணம் குஞ்சுக்கு இறகு முளைக்கும் வரைதான் பேட்டின் காவல் தேவை. அப்பால் அது தன் வாழ்வைத் தானே தேடிக் கொள்கின்றது.

மலை: உண்டுண்டுறங்கி உலகத்துடன் ஒட்டி வாழ்கின்ற வாழ்வில் மாதாவை மதிக்கின்ற பண்பு மலர்ந்துளது.

கங்கை: அந்த மரபில் பூத்த எனக்கா அதனைக் கூறவேண்டும். காலம் என்பது என்றும் ஒரே சீராக ஓடுவதில்லை.

மலை: காலம் ஓடுவது நியதி அதைத் தடுப்பதற்கு எவராலுமே முடியாது. காலத்துக்கும் உனக்கும் என்ன தொடர்பு.

கங்கை: காலந்தானம்மா எல்லோரது வாழ்வையும் நிர்ணயிக்கின்றது. ஓடும் காலத்துடன்... உலகத்தில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்கின்றன. வளரும் ஒவ்வொரு உயிர்களுக்கும்...... காலம் உருவையும் பொலிவையும் ஊட்டுகிறது. உருவுக்கும் பொலிவுக்கும் அமைய... உணர்ச்சிகளும் வளர்கின்றன. இந்த நல்ல நியதி இயற்கையானது எவராலும் தடுத்தற்குச் சாத்தியமற்றது.

மலை: உறவை - பாசத்தைத் துண்டிக்கும் நியதியே வேண்டியதில்லை. உன்பிறந்த இடத்தைப்பார். எங்கும் எழில் பூத்துக் குலுங்குகின்றது. பாரிய பாறைகளுக்கிடையே பசுமை. பசுமையினூடே பல வர்ணங்கள். அழகும் அமைதியும்கூடிக் குலவும் காட்சிகளின் மாட்சியில் திளைத்திருந்தாயே அவையெல்லாம் சலித்துவிட்டனவா?

கங்கை: சலிப்பும், சாந்தியும் பிறப்பதே உள்ளத்திலிருந்துதான். உள்ளம் உவக்கும் ஒன்றே உயர்வுடைத்தாகும். அவர் ஒருவரே உள்ளத்தின் இலட்சியம். என்னைத்தடுக்காதே நான் என்ன சொல்லியும் நிற்கப் போவதில்லை.

மலை: இதுவா உன்முடிவு.

கங்கை: கங்கைக்குரிய முடிவு (போய்க்கொண்டு) ஒன்றேயொன்றுதான். அது கடல்தேவனேடு கலந்தின்பம் காண்பதுவே.

(ஆற்றின் சத்தம்) (வளரும்)

## இன்றைய..

[13-ம் பக்கத் தொடர்ச்சி]

கருப்பு சிவப்பு கலர்களைப் பூசி அரைகுறைக் கவிஞன் கலர்கொண்டு அப்பிய ஓவியங்கள்போலக் காட்சியளிக்கிறுர்கள் கொஞ்சப் பவுடர் கூடிவிட்டாலும் கைக்குட்டைகொண்டு அதைத் துடைத்துவிடும் இவர்கள் இத்தகைய சாயம்போக்கும் சாயங்களை அப்பிக்கொண்டு திரிவது அதிசயத்திலும் பெரிய அதிசயமே!

### குதிரைவால் கொண்டை

ஒற்றைப் பின்னலோடு அழகாகத் தோற்றமளிக்க வேண்டிய எமது பெண்கள் குதிரைவால் கொண்டை மற்றும் ஏ. பி. ஸி டி. கொண்டைகளைப் போட்டுக்கொண்டு அவலட்சணமாகத் தோற்றமளிப்பதையும் வேதனையோடு இங்கு குறிப்பிட்டுத்தாகவேண்டும்.

### தீபாவளியிலாவது...!

இத்தகைய அலங்கோலங்களால் குனிந்த எமது தலைகள் இன்னும் நிமிருவதாக இல்லை. ஆண் மக்களாகிய எங்கள் தலைகளைக் குனிய வைப்பவர்கள் உண்மையான பெண்களுமில்லை. எனவே அவர்கள் தீபாவளித் தினமாகிய இன்ருவது தங்களை நமதுநாட்டுமுறையில் அலங்கரித்து, நாணத்தால் குனிந்த நமது தலைகளை நிமிர வைப்பார்களென எதிர்பார்க்கிருேம்.


எல்லோருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

புத்துணர்ச்சிக்கும் — உற்சாகத்துக்கும்

பாவியுங்கள்

அண்ணா கோப்பி

தயாரிப்பாளர்கள்:

அண்ணா இண்டஸ்றி

இணுவில்.



ஆரம்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வாவது முக்கியம்




இன்றைய குழந்தைகளுக்காக விசேஷமாகத் தயாரிக்கப்படுவதும் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படும் நவீன பாலுணவுதான் பெலார்கன்


நன்கு சமன் படுத்தப்பட்டது, ஜீரணிக்கக் கூடியது. அதிகப்படியான வைடமின்கள் கொண்டதுமான பெலார்கன் குழந்தைக்கு முக்கியமான ஆரோக்கிய வாழ்வை ஆரம்பத்திலேயே கொடுக்கும். பிறந்த நாள் முதல் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர உதவுவதுடன் குழந்தைக்கு தொற்று நோய் பிடிக்காமலும் பாதுகாக்கிறது பெலார்கன். அதனுல்தான் பெலார்கன் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது.

பெலார்கன்

ஆரோக்கியமான குழந்தைகளை மேலும் ஆரோக்கியமாக்குகிறது.

NESTLÉ

ZENITH




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபம் ஏற்றிடுவோம்!

[வேளகம்—நடராசா]

ஏட்டி லுள்ள கருப்பொருளை
எடுத்துப் படித்துச் சுவைப்பதற்கும்
நாட்டி லதர்மம் நலிவுற்றே
நன்மை பலவாய் விஞ்சிடவும்
காட்டில் வாழும் விலங்கினத்தின்
கயமைக் குணங்கள் நீங்கவும்
வீட்டில் விளக்கு வைப்பதுபோல்
விளங்கத் தீபம் ஏற்றிடுவோம்.

கட்டுப் பாடும் கண்ணியமும்
கடமை யுணர்ச்சி மூன்றினையும்
விட்டு விட்டுச் சுயநலத்தை
விரும்பி வாழும் கயவரது
துட்டத் தனத்தைத் தூரத்தே
துரத்து வதற்கு அறிவொளியை
அட்ட திக்கும் ஒளிவீச
அகத்தி லேற்றி வைப்போமே.

ஐந்து யானை ஆறலைத்து
அந்த கார இருளிடத்து
உந்தித் தள்ள வொட்டாது
ஒங்கு மாசை யுள்ளடக்கி
முந்தை வினையின் மூட்டறுத்து
முத்தி நெறியிற் சேர்வதற்கும்
சிந்தை யுள்ளே அறிவொளியாம்
சிறந்த தீபம் ஏற்றிடுவோம்.

உள்ளக் குகையி லொளியேற்ற
உண்மை ஞானம் உதித்திடுமே
வெள்ளை யுள்ளக் கமலமதாய்
விண்டு கருணை பூத்திடுமே
தள்ளி வைத்துக் குலம்பேசும்
தரங்க ளடியோ டழிந்திடுமே
தெள்ளத் தெளிவு முள்ளத்தே
தெய்வ அருளும் கிட்டிடுமே.

சிந்தனைச்சுருள் [5]

## பொறுப்புள்ள பிள்ளைகளாக

'தன் கையே தனக்குதவி'

நமது அன்றாட தேவைகளுக்கும், கடமைகளுக்கும் பெற்றோரையே நம்பியிருப்பது எத்துணை பேதமை. நாளடைவில் நாம் ஊதாரியாக — பொறுப்பற்ற பேதையராக மாறுவதை நாமோ நமது பெற்றோரோ விரும்புவார்களா?

நம்மில் பலர் பாடசாலையிலிருந்து வந்ததும் புத்தகத்தை ஒரு மூலையில் வீசிவிட்டு, உடைகளைக் களைந்து மேசைமேலோ, கட்டில் மேலோ நாற்காலிமேலோ போட்டுவிட்டு விளையாட ஒடுகின்றோம். இன்றுடன் நமதுதேவை முடிவதில்லை. நாளையும் தொடரும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நாளை மறுபடியும் துவைத்த சட்டைக்கும் தம்பி தங்கைகள் கிழித்துப் போட்டு விட்ட புத்தகத்துக்கும் ஓலமிடுகிறோம்.

இந்தப்பொறுப்பற்றநமது தன்மையால் நமது பெற்றோர் எவ்வளவு கஷ்டமடைகின்றனர். நாளடைவில் நம் கவலையீனத்தால் புத்தகங்கள் கிழிந்து வேறு புத்தகம் வாங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. நம் பெற்றோருக்கு நாம் செய்யும் உதவி இதுதானா?

நமது பொருட்களை குறிப்பிட்ட இடங்களில் ஒழுங்காகவும், கவனமாகவும் வைத்துக்கொள்ள நாம் பழகிக்கொள்ளவேண்டும்.

சாப்பாட்டு நேரத்தில் அடக்கமுடன் அம்மா தருவதை உண்பது நமது கடமை. எத்தனையோ கஷ்டத்துக்கு மத்தியில் அவர் எங்களுக்கு பசியாற்றத்தயாரிக்கும் உணவை 'அது கூடாது. இது பிடிக்கவில்லை' என முரண்டு செய்து ஒதுக்குவது பாவச் செயலாகும்.

நம் ஏழைச் சகோதரர்கள் எத்தனை எத்தனை பேர் இவைகூடக் கிடைக்காதுஏங்குகிறார்கள் எனவே நமக்குக் கிடைத்தது போதும் என்ற எண்ணத்துடன் ஒழுங்காகச் சாப்பிட்டெழுந்தால் பெற்றோருக்கும் நம்பேரில் அன்பும் நல்லெண்ணமும் பிறக்கும்.

பெண்பிள்ளைகள் பலருக்கு அம்மாதான் தலைவாரி அலங்காரம் செய்துவிட வேண்டும். தாய்மாருக்கு உதவியாக வேலைகளில்பங்கு கொள்ள வேண்டியவர்கள் அதை மறந்து தாய்மாரை வேலை வாங்குவது முறையல்ல. இன்றைய பொறுப்பு தான் நாளை நம்மை ஒரு நல்ல குடும்பத்தின், சமுதாயத்தின், நாட்டின் தலைவனாகவோ-தலைவியாகவோ ஆக்குகிறது.

நமது உடைகளை நாமே துவைக்கவும், கண்டபடி அழுக்குகளில் புரண்டெழாது கூடுமானவரை அழுக்குப்படியாமல் வைத்திருக்கவும், கூடுமானவரை எமது பொருட்களை கவனமாக வைத்தெடுக்கவும், நமது பெற்றோருக்கு நம்மாலான உதவியைச்செய்யவும் பயின்று கொள்ளவேண்டும்.

வருங்காலத்தின் பொறுப்புள்ள பிரஜையாக மாற இன்றைய கடமைகளைச் சரிசெய்வோம். நமது கரத்தை நமக்கு உதவியாக்கிக் கொள்வோம். — நீலா

சிறுவர் கவிநயம்—7

தம்பி தங்கைகளே! நீங்கள் படிக்கும் பாடசாலைகளில் மாணவர் சங்கம் நடப்பதைப் பார்த்திருப்பீர்கள். உங்களைப் படிப்பிக்கும் ஓர் ஆசிரியர் தலைமை வகிப்பார். மேல் வகுப்புப் பிள்ளைகள் அக்கூட்டத்தில் பேசுவார்கள். உங்களைப் போன்ற சிறுவர்கள் பாடுவார்கள்; ஆடுவார்கள், நல்ல பாட்டைக் கேட்டால் நீங்கள் கைதட்டுவீர்கள். மாணவர் சங்கம் நடக்கும் நாள் உங்களுக்குக் கொண்டாட்ட நாள்.

# காக்கை மகாநாடு

பாடசாலையில் மாணவர் சங்கம் நடப்பதுபோல உங்கள் ஊர் வாசிகசாலையில் பெரிய கூட்டங்கள் நடப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அக்கூட்டங்களில் வெளியூரில் இருந்து பலர் வந்து பேசுவார்கள், பாட்டுக் கச்சேரிகள் செய்வார்கள், நாடகங்கள் நடத்துவார்கள். நீங்கள் நித்திரை கொள்ளாமல் அவற்றை எல்லாம் பார்ப்பீர்கள், ஆனந்தம் கொள்வீர்கள்.

பாடசாலையில், ஊரில் கூட்டம் நடப்பதைப்போல நகரங்களில் பல கூட்டங்கள் நடக்கும். தொழிலாளர்கள் கூடுவார்கள், ஆசிரியர்கள் கூடுவார்கள், மாதர்கள் கூடுவார்கள். அக்கூட்டங்களில் தங்கள் கஷ்டங்கள், சம்பள உயர்வுகள், தொழில் முறைத் திருத்தங்கள் என்பவைபற்றி எல்லாம் பேசுவார்கள். அரசாங்கத்துக்கு முறையிடுவர்.

மனிதர்கள் இப்படியெல்லாம் கூட்டம் நடத்துகிறார்களே, நாமும் நடாத்திப் பார்த்தால் என்ன என்று காக்கைகளுக்கு ஒரு நாள் எண்ணம் உண்டாயிற்று. அவையெல்லாம் அழகான மகாவலிகங்கைக் கரையிலே கூடின. எங்கே கூடின? யார் தலைமைவகித்தார் என்பதை அறிய உங்களுக்கு ஆசையாய் இருக்கும் அல்லவா? பாட்டைப் படித்து அறிந்துகொள்ளுங்கள்:

—இரசிகமணி கனக. செந்திநாதன்—

"ஆற்றங் கரையில் ஓர்
ஆலமரம்-அங்கு
ஐம்பதினாயிரம் காக்கை
களாம்-குல
ஏற்றத்திற் காகிய
மார்க்கங்கள் சாற்றிட
எண்ணற்ற பண்டிதக்
காக்கைகளாம்.

அந்தக்காக்கை மகாநாட்டுக்கு, கார்வண்ணன் என்ற காக்கை தலைமைவகிக்கச் சொற்பொழிவுகள் ஆரம்பமாயின அவை பேசிய பேச்சுக்கள் சுவையானவை. சொற்பொழிவிலே பேர்பெற்ற கொடுங்கண்ணன் என்ற காக்கை ஆவேசத்துடன் பின்வருமாறு பேசியது:-

செத்த எலிகளைத் தூக்க
வேண்டாம் - வீதி
சிந்திய எச்சிலைக் கிண்ட
வேண்டாம் - தெருச்
சுத்த மாக்கும் தொழில்
செய்யா தொழிந்து, நம்
தோட்டிப் பட்டத்தினை
ஒட்டவேண்டும்.

'தோழர்களே! கிளி, குயில், புறா முதலிய பட்சிகள் எங்களைக் கேலிசெய்கின்றன. நாம் செத்த எலிகளைத் தின்கிறோமாம்; வீதியில் கிடக்கும் எச்சில்களை உண்கிறோமாம்; தெரு சுத்தமாக்க அழுக்குகளைப் புசிக்கிறோமாம். சீ இது என்ன வெட்கக்கேடு. இனி எமது இனம் இவற்றைச் செய்யக்கூடாது எனச் சபதம் செய்துகொள்ளவேண்டும்.'




கொடுங்கண்ணனை அடுத்து 'அண்டங்காக்கை' ஒன்று அழுது வடியும் குரலில் பேசியது:-

மானிடர் போற்றும்
அறிவுபெற்றாலும்-நம்
மத்தியிலே ஓர்குறை
பாடுஉண்டு - பெருங்
கானில் உறைகின்ற
கள்ளக் குயில்முட்டை
காத்து வளர்த்து
ஏமாறுகின்றோம்.

'என்இனச் சோதரர்களே ஏமாற்றுவதிலும் புத்திக்கூர்மையிலும் பேர்பெற்றதுஎங்கள் இனம். மனிதர்களே எங்களைப் புகழ்ந்து கூறுகிறார்கள். அப்படியிருக்க இந்தக் கள்ளக்குயில் எங்களை ஏமாற்றிவிடுகிறது பார்த்தீர்களா? அது தான் கூடு கட்டாமல் எங்கள் கூடுகளிலே முட்டை இட்டுவிடுகிறது. அதை நாம் அடைகாக்கிறோம் இது எவ்வளவு அவமானம்? இனிமேல் இப்படி நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அண்டங்காக்கை பேசியபின் வள்ளிமலைக் காக்கை ஒன்று சிறகுதட்டிப் பேசியது:

கள்ளப் பருந்தினைத்
தோற்கடிக்கும் - வீரக்
காக்கை கரிச்சானுக்
கஞ்சுவதேன் - என்று
வள்ளிமலைக் காக்கை
கூறியதும் - காக்கை
வீரர்கள் மார்தட்டிக்
கொண்டார்களாம்

வீரமிகு காக்கை நண்பர்களே, பருந்து எங்களிலும் வலியது. ஆனால் அதை ஓட ஓடக் குட்டுகிறோம், துரத்துகிறோம். ஆனால் கரிச்சான் ஒரு சிறிய குருவி அது நம்மைக் குட்டுகிறது. துரத்துகிறது. உங்கள் வீரம்எங்கே போய்விட்டது? இனி, காக்கைச்சாதி கரிச்சானுக்கு அஞ்சவே கூடாது.

இப்படிக் காக்கை மகாநாடு கலகலப்பாக நடைபெற்று, பத்துக் காக்கைப் பெண்கள் மங்களகீதம் இசைத்து முடிவடையும் சமயம், யாரோ ஒரு குறும்புப் பையன் ஒரு சீனவெடியைக் கொளுத்திப் போட்டுவிட்டான். அந்த இடத்தில் ஒரு காக்கைகளையும் காணோம்.

மனிதர்கள் நடாத்தும் மகாநாட்டைப்போல, காக்கை மகாநாட்டை சிறுவர் மனதில் பதியும்படி பாடியவர் 'ஜீவன்'. அவரது நூல் கவிதைக் கதம்பம்- இராமநாதபுரம் - புதுவயல், இந்திரா நிலையம் இதை வெளியிட்டிருக்கிறது;

பாடலை ஒருசேரப் பாருங்கள்; பாடி மகிழுங்கள்.

ஆற்றங் கரையில்ஓர்
ஆலமரம்- அங்கு
ஐம்பதினாரம்
காக்கைகளாம்-குல
ஏற்றத்திற்காகிய
மார்க்கங்கள் சாற்றிட
எண்ணற்ற பண்டிதக்
காக்கைகளாம்.

நேர்த்தியாய் வீசிடுந்
தென்றலிலே-சுப
நேரத்திலே மாலை
வேளையிலே-கருங்
கார்வண்ணக் காக்கை
தலைமையிலே- அந்தக்
காக்கை மகாநாடு
கூடியதாம்

செத்த எலிகளைத்
தூக்கவேண்டாம்-வீதி
சிந்திய எச்சிலைத்
தீண்டவேண்டாம் -
தெருச்
சுத்தமாக்குந் தொழில்
செய்யாதொழித்து -நம்
தோட்டிப் பட்டத்தினை
ஒட்டவேண்டும்.

மானிடர் போற்றும்
அறிவுபெற்றாலும்-நம்
மத்தியில் ஓர்குறை
பாடுஉண்டு-பெருங்
கானில் உறைகின்ற
கள்ளக் குயில்முட்டை

(18- பக்கம் பார்க்க)

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

நீர்ப்பாசன யந்திரங்களுக்குத் தேவையான உபகரணங்கள்
'3 பொயின்ட் பிளக்' கிருமிநாசினி மருந்து தெளிக்கும் கருவிகள்
அதன் உதிரிப்பாகங்கள்
மற்றும்
எஸ்-லோன் குழாய்கள், உதிரிப்பாகங்கள் எல்லாம் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில்
வழங்கும் ஒரே ஒரு ஸ்தாபனம்

சுவர்ணா ஸ்ரோர்ஸ்

20/5, ஸ்ரான்லி றேட் (போன்: 7035) யாழ்ப்பாணம்.

தலைமைக் காரியாலயம்: ஸ்மைல்ஸ் 287-289, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி மல்லிகை

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்பாறையாதலால் மழை நீரையெல்லாம் உள்வாங்கி இயற்கை, பத்திரப்படுத்தி வைத்திருக்கிறது. மழை காலத்தில் இந்த நீர்ச்சுரங்கத்தில் பெருகி வழியும் தண்ணீர்தான் கடற்கரையில் வரிசையாக உள்ள குன்றுத் தொடரின் அடிவாரத்துப் பிளவுகளினூடாக சில மாதங்களுக்கு ஊற்றெடுத்துப் பாய்கிறது. அவ்வளவும்முத்துப்போன்ற தண்ணீர்.

புதிதாக வெளிப்பட்டுள்ள அருவிச்சுரங்கம் இனிவரும் நாளில் மற்றொரு 'கீரிமலைக் கேணி'யையும் இங்கு தோற்றுவிக்கலாம்.

தமிழிலே நாம் வாவி என்பதை சிங்கள பாஷையிலே 'வீவர்' என்கிருர்கள், ஓடையை 'ஓயா' என்கிருர்கள். நெல்கரஞேயா, தெதுரு ஓயா, கல்லோயா மல்லோயா என நூற்றுக்கு மதிகமானநீரோடும் ஓயாக்'கள் இலங்கையில் உள்ளன. தண்ணீர் விழுந்தோடும் பரவை நீர்நிலைகளாக- ஓடுநீர் ஓடைகளாக அமைந்தவை இவற்றுள் பல. சங்கிலித்தொடராக 'ஓயாக்'களை அமைத்து ஊர்ஊராக, நாடு நாடாக வெகுதூரத்துக்கு தண்ணீர் பாய்ச்சும் பழைய நாள் நீர்ப்பாசன நுட்பத்திறன், ஓய்!

வீவா வாவி ஆனல் ஓயா ஓடையானல், (அட்டமி நவமி) போயா என்னவாகும்?

போயா 'பீடை' ஆகுமோ? சேச்சே, அப்படியெல்லாம் சொல்லக்கூடாது!

பேடை என்றுவேண்டுமானல் சொல்லுங்கள், அழகாயிருக்கும்,

பேடை உறங்கப் பெடும்
பறவை தாலாட்டும்; பூ
கூடை கூடையாய்
சொரியும்!
கோடைபோம்; குளிர்
வசந்தம்சிரிக்கும்-
அங்கே!

பார்த்தீர்களா'போயா — பேடை' எவ்வளவு அழகாயிருக்கிறது!

## தேவி....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டேசர் தாதையைத் தாளறத் தடிந்த சம்பவம் இதிலிருந்து நோக்கத்தக்கது.

வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் இரணியவன்மரைத் தாம் தரிசிக்கும் நடராஜ தரிசனத்தைத் தரிசிக்கவைக்கலாமோ என்று யோசித்ததுண்டு.

ஒரு மகான் பின்வருமாறு சொன்ஞர்:

"புண்ணிய காலங்களைப் போலவே புண்ணியதலங்களும் பேணப்பட வேண்டும். புண்ணிய தலங்கள் ஆன்மாக்களின் விசேட விருத்திக்கு உபகாரமானவை.

திருக்கேதீச்சரத்தை எடுத்துக் கொள்வோம். அது விசேட புண்ணிய தலம். அங்கே, சித்த புருஷர்கள் நமது கண்ணுக்குப் புலப்படாத உருவத்தில் தமக்குத் தியான சமாதி கைகூடுதற்றத் தவமுயற்சி செய்து கொண்டிருப்பார்கள். அவ்வாருகிய புண்ணியதலத்தில் சந்நிதியின் தூய்மையைக் கெடுக்கும் முறையில் தூய சிந்தனை தூய சொல் தூய செய்கையின்றி அணுகினல் சித்த புருஷர்களின் சாபத்துக்கு ஆளாகநேரும்; குளிக்கப் போய்ச் சேறு பூசியதாகும்.

தல விசேடத்தை உணருவார்களானல், பூசகர்கள் பூஜைக்குடன் படார்கள். தாம் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து ஓட்டம் பிடிப்பார்கள்".

## கக்கை மகாநாடு

17-ம் பக்கத் தொடர்ச்சி

காத்து வளர்த்து ஏ
மாறுகின்ருேம்.

கள்ளப் பருந்தினைத்
தோற்கடிக்கும்-வீரக்
காக்கை கரிச்சானுக்
கஞ்சுவதேன்-என்று
வள்ளி மலைக்காக்கை
கூறியதும்-காக்கை
வீரர்கள் மார்தட்டிக்
கொண்டார்களாம்.

# தேனும் அதன் உபயோகமும்

எமது சீவியத்தில் தேன் உணவுப் பொருளாகவும் ஔடதப் பொருளாகவும் மிக உதவுகிறது. அத்துடன் அபிஷேகப் பொருளாகவும் பாவிக்கப்படும். தேனீக்கள் பூக்களிலிருக்கும் மதுவை தேன்கூட்டில் சேகரித்து வைக்கும் பதார்த்தம் தேன் எனப்படும், மலைத்தேன். கொம்புத்தேன், புற்றுத்தேன், மரப்பொந்துத்தேன் எனப்பலவகை உண்டு.

மலைத்தேனினல் சுரம், சிலேஷ்மகாசம், விக்கல், தேகக்கடுப்பு, கண் விரணம் என்னும் பிணிகள் நீங்கும். கொம்புத்தேன் அரோசகம், திரிதோஷம், உளமாந்தம் என்னும் இவைகளைப் போக்கும். பொந்துத் தேனினல் உஷ்ணமும், ஜடராக்கினியும் உண்டாகும் புற்றுத்தேன் கபதோஷம், ஈளை, இருமல், சர்த்தி ஆகியவற்றைக் குணப்படுத்தும். புதிய தேன் சரீரவெப்பம், நிறை ஆயுள் தேஜசு என்னுமிவற்றை உண்டாக்கும். புளிப்பும் இனிப்பும் கலந்த பழையதேன் வாதமூல ரோகம், வாத ரோகம், வயிற்றெரிச்சல் போன்ற வியாதிகளை விளைவிக்கும். ஔஷதங்களின் நற்குணங்களைக் கெடுக்கும். தேன் கூட்டிலிருந்து எடுக்கும் போது இளமஞ்சள் நிறமாயிருக்கும். பிறகு படிப்படியாய் உறைந்து மங்கலாகிவிடும்.

தேனில் பொற்ருசிய தாதுப்பொருளும் லெவியுலோஸ் சீனிப் பதார்த்தமும் சீவசத்துக்கள் பி. பி2 சீவசத்து சி, பன்ரோ தினிக் அமிலம் என்பனவும் உண்டு. சுத்த தேனில் நூற்றுக்கு ஒரு வீதமாயினும் கழிவுப் பொருள் கிடையாது எமது உடலின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் இன்றியமையாத சுதையம் அயச்சத்து, செம்பு கெந்தகம், இன்னும் குளோறின், மங்கனீஸ், சிலிக்கா போன்ற பதார்த்தங்கள் தேனில் உண்டு. தேன் ஓர் பூரண உணவாகும். உடல் மெலிந்த பாலர்க்கும், கணைநோய் ஏற்பட்ட பிள்ளைகளுக்கும் பாலுடன் தேனும் சீனியும் சேர்த்துக் கொடுப்பதனல் கணை நோய் நீங்கும் பிள்ளைகளின் உடல் பூரிக்கும்.

நீரைக் கவரும் தன்மை தேனுக்கு உண்டு. இதனல் தேன் சேர்க்கப்பெற்ற உணவுப் பதார்த்தங்களும், ஔஷதங்களும் காய்ந்து போகாமலிருப்பதுடன் நாவிற்கு ருசியாகவுமிருக்கும். பொற்ருசியம் தாதுப்பொருள் உடல் இழையங்கள் நுண் கிருமிகளை எதிர்ப்பதற்கு உதவி புரிகிறது. இவ்வித தாதுப்பொருள் தேனில் உண்டு. பழவகை, நாவல், நெல்லி கிழங்குப் பதார்த்தங்களிலும் இத்தாதுப் பொருள் உண்டு, தேனிலுள்ள லெவியுலோஸ் சீனிச்சத்து இயற்கையாகவே இலகுவில் குடற்பகுதிகளில் உறிஞ்சப்படுவதில்லை. ஆகவேஇதில் பெரும்பகுதி பெருங்குடலில் இலகுவில் அடைந்து மலச்சிக்கலை நீக்கும். விளாம்பழம் வில்வம் பழம் என்னும் பழவர்க்கத்துடன் தேனையும் சிறிது பாவித்தல் மிக நன்று.

தேன்மிக அமைதியான ஆழ்ந்த நித்திரையை ஏற்படுத்தும். வாதரோகத்தில் சந்துக்களில் ஏற்படும் வேதனையை சாந்தப்படுத்தும் பேசிகளில் பிடிப்பு, திமிர்வாதம் என்னும் ரோகங்களை குணப்படுத்தும். சித்த ஆயுள்வேத ஔஷதங்களில் தைலம் (எண்ணெய் வகை) கிருதம் (நெய்) தேன் சில முக்கிய திரவியங்களாகும். சுவாசம் சன்னி, சுரம் போன்ற தீவிர வியாதிகளில் மருந்துகளைக் கொடுப்பதற்குச் சிறந்த அனுபானங்களில் தேனும் ஒன்ருகும். குறைந்த அளவில் பாவிக்கும்போது வயிற்றுளைவு சீதபேதி போன்ற வியாதிகளில் கை மருந்தாகவும் சிறந்த உணவாகவும் பயனளிக்கும்.

— வைத்தியாச்சாரி மு. சுவாமிநாதர் —
( எல். ஏ எம். பி. - இலங்கை )

படித்தவனுக்கு அழகு, இரகசிய தன்மை. இளைஞனுக்கு அழகு கற்பனை. மனப்பக்குவம் அடைந்தவனுக்கு அழகு உணர்ச்சியும் நிதானமும்.

— பாபுராவ் படேல்

மாது முதியவளாயின் அவளை நின் தாயெனக் கருதுக! இளையவளாயின் உனது சகோதரி எனக் கருதுக.

—புத்தர்

## மன வியாதி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தடவை சிறிதாக உணவு அருந்தும்படியும் ஆலோசனை கூறுவார். சாதாரணமான புண்ணாக இருந்தால் அது ஒரு வாரத்துக்குள் மாறிவிடும் ஆனல் நோயாளிக்கு மன நிம்மதியும் ஆறுதலும் இல்லாவிட்டால் விரைவில் வேருெரு புண் தோன்றிவிடும்.

அஜீரணம் சாதாரணமாக எவருக்கும் உண்டாகக்கூடியது. ஆனல் அது சாப்பாட்டுப் பிழையினலோ அல்லது நரம்புக் கோளாறினலோ ஏற்பட்டதென்பதைக்கண்டு பிடித்துவிட்டால் டாக்டர் மாறி டாக்டரிடம் அலைந்து திரிந்து அவதிப்படவேண்டியதில்லை! நல்ல டாக்டரானல் இதில் குடற்பிழையல்ல, மனக்கோளாறென்றும் கவலைப்படவேண்டியதில்லை என்றும் சொல்வார். இதை நோயாளி நம்பவேண்டும்.

சிலருக்கு க. க. க. சதாகாலமும் இருந்துகொண்டே வரும். வியாபாரத்தில் தொடர்ந்து நஷ்டம், மீளாத நோய்க்குட்பட்ட ஒரு குழந்தை; ஓயாது நச்சரிக்கும். மனைவி இப்படிப்பட்ட கரைச்சல்கள் தீராத அஜீரணத்தை சிலருக்கு உண்டு பண்ணும். இவை எல்லாவற்றிலும் மிகக்கொடியது பணமுடைதான் என்று டாக்டர்கள் அனுபவத்தில் கண்டிருக்கிருர்கள். பாவம், அவர்கள் இந்த வியாதிக்கு என்ன மருந்தைக் கொடுப்பார்கள்? பணமுடை தீர்ந்தால் வியாதியும்தீர்ந்துவிடுகிறது.

அஜீரணத்தால் அடிக்கடி கஷ்டப்படுகிறவர்கள் டாக்டரிடம் சென்று 'ஐயோ டாக்டர், ஏதாவது ஒப்பரேஷன் செய்து பாருங்களேன்' என்று கெஞ்சி மன்ருடுவதுண்டு. டாக்டருக்கல்லவா தெரியும்! ஒப்பரேஷனால் க. க. க. வைத் [illegible] தீர்க்கமுடியும்?

## தீய சக்திகளின் அழிவு

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

இத்தினத்தைக் கொண்டாடுபவர்களிடம் இருக்கின்றது. பழையன கழிதலும் புதியன புகுதலும் இவர்களிடமும் பிரதான இடத்தை வகிக்கின்றன.

சிறப்பாகச் சிறுவர்கள் இத்திருநாளில் புத்தாடை அணிவதிலும் பட்டாசு மத்தாப்புகள் கொழுத்துவதிலும் இனிய சுவையான பலகாரங்களையும் உணவுவகைகளையும் உண்பதிலும் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடுதலிலுமாக அன்றைய தினத்தைக் கழிப்பார்கள். அவர்களின் மகிழ்ச்சிப் பிரவாகம் கங்குகரையின்றிப் பெருகுவதை நாம் காணக்கூடியதாயிருக்கும், இதற்கு வீட்டிலுள்ள ஏனையோர்கள் தத்தம் பங்கை வெகு ஆர்வத்துடனும் கடமையுணர்ச்சியுடனும் செய்வார்கள். எனினும் பலர் இப்புனித நாட்களில் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது போல சாஸ்திர சம்பிரதாய விதிமுறைகளுக் கொவ்வாத பல விடயங்களிலும் ஈடுபட்டுக்கொண்டிருப்பதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. அநேகமாகப் பலர் அன்றைய தினத்தில் தாராளமாக மது அருந்துவதையும் மாசிசம் புசித்தலையும் மற்றும் ஈடுபடத்தகாத விடயங்களில் ஈடுபடுவதுமாகக் காலத்தைக் கழிப்பதுமுண்டு! இதுகாலந்தோறும் நன்கு ஊறிப் பழகிய பழக்கமாகிவிட்டது. இப்படியான தவருனகொள்கைகளைச் சரிசெய்வதற்கு இன்னெரு மகாத்மாகாந்தி தோன்றினல் முடியுமோ என்னமோ?

மேலும் முன் குறிப்பிட்ட வண்ணம்நரகாசுரவதம் திருமாலின் கிருஷ்ணவதாரத்திலேதான் நிகழ்ந்தது. இப்படியான தியோர்களினதும் தீயசக்திகளினதும் அழிவு ஏதாவதொரு அவதார நிகழ்ச்சியின் போதுதான் நடைபெறுகிறதென்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் குருக்ஷேத்திரத்தில் போர்நிகழமுன் அருச்சுனனுக்கு உபதேசித்ததை கீதைப் பேருரையிலே நாம் காண்கின்ருேம். எவ்வாருயின் தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போது அதை நீக்கித் தர்மத்தை நிலைநாட்ட யுக யுகாந்திரம் தோறும் நான் அவதரிக்கின்றேன்' என யுத்தகளத்தில் அருளிச் செய்திருக்கின்ருர்! ஆகவே தீபாவளியைக் கொண்டாடும் பொழுது இதை நினைவுகூருவதோடு தீபங்களின் வரிசைகள் எவ்வாறு இருளை அகற்ற உதவுகின்றதோ அவ்விதமே மனத்தின் கண் உள்ள அஞ்ஞான இருளை அகற்றி மனித [illegible] தற்கும் இறைவனை வேண்டி வழுத்துவோமாக!


சினிமா ரசிகர்கள் மற்றும் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
உயர்ந்த மனிதன்
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ஆசிரியர்:

பட்டதாரி ஆசிரியர்கள் செங்கதிர்ச் செல்வர் கல்விச்சேவையில் பணியாற்றவும், 'செங்கதிர் உதவி ஆசிரியர்களாகக் கடமை புரியவும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர் தேவை. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தகுந்த பாடங்களைக் கொண்டவர்களும் பாட விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம். த. பெ. எண் 47, யாழ்ப்பாணம்.

2373

சுன்னுகத்தில் புதிதாக தொடங்கவிருக்கும் தியேட்டருக்கு வேலையாட்கள் தேவை. 40 வயதுக்கு உட்பட்டோர் மாத்திரம் 5-11-70க்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். தெரிந்தெடுப்போர் அவரது பதவிக்கேற்ற பிணைப்பணம் செலுத்த வேண்டும். சிலோன் மெற்றல் லைன் இன்டஸ்ரீஸ், ஸ்ரேசன் ரோட், சுன்னுகம். 2372

### தேவை

கொழும்பில் மின்சாரயந்திர தொழிற்சாலையில் வேலைசெய்த நல்நடத்தையுடையவருக்கு வேலை தேவை. விளம்பர இலக்கம் 2368 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம்.

2368

கொன்டிநன்ரல் ரயர்(Continental Tyre) 5-60—15. நிலமையும் விலையும் அறிவிக்கவும். நடராசா, 450, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2377

### விற்பனைக்கு

எனது சொந்தப் பாவிப்பில் உள்ள லோட்மாஸ்டர் CV 1396 நம்பர் லொறி ஒன்று நல்ல நிலைமையில் ஓடிக்கொண்டிருக்கிறது. நேரில் வந்து பார்த்து விலை கேட்கவும். க. சண்முகநாதன், கள்ளியங்காடு, டச்சுரோடு, யாழ்ப்பாணம். 2376

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் — நல்லூரில் பெரியவளவும் புதிய வீடும் விற்பனைக்கு, அல்லது குத்தகைக்குக் கிடைக்கும். தொழிற்சாலைகள் - பண்ணைகளுக்கு தகுதியானது எழுதுங்கள். வெஸ்டன்றேட்ஸ், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 2356

வீடுகள்!

திருநெல்வேலி சிவன் கோவில் ரேட்டில் இரண்டு வீடுகள் விற்பனைக்குண்டு. இல: 36, 36A வீட்டில் விசாரிக்கவும். 2378

கொக்குவில்கிழக்கு தின்னவேலி ஆடியபாதம் ரேட்டுக்கருகாமையிலுள்ள நாற்சதுரக்காணி 4 1/4 பரப்பு உடன் விற்பனைக்குண்டு செ. விசாகரெத்தினம்,133, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

2375

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### 29-10-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30இஸ்லாமியநற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 மெல்லிசை. 7-30 தீபாவளிகவிஅரங்கம், 8-15 பேச்சு, 8-30 நாதஸ்வரம்.

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 20 கேள்விகள், 10-30 தீபாவளி நிகழ்ச்சி, 11-00 கிளாரினட், 12-00 எமததிதிகள், 1-05 பெண்ணுலகம்.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 பாமாலை, 6-30 அஞ்சல், 7-00 தாளவாத்தியக் கச்சேரி, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 நிகழ்ச்சி தொகுப்பு, 9-30 தீபாவளி நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.


## கேள்வி விளம்பரம்

### இ. போ. ச. சிற்றுண்டிச்சாலை

கோண்டாவில் — யாழ். டிப்போ

இலங்கை போக்குவரத்து சபை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியால் கோண்டாவில் யாழ். டிப்போ சிற்றுண்டிச் சாலைக்கு உணவு, சிற்றுண்டி முதலியன விநியோகிப்பதற்கு விலைப்பட்டியலுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் திருப்பிப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10/- செலுத்தித் தேவைக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளுக்கான விண்ணப்பங்கள் 10-11-70ம் திகதி பி. ப. 1 மணியுடன் முடிவடையும்.

2524

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

வெஸ்லி சினிமா

(மானிப்பாய்) இன்று 4 காட்சிகள்

எம். ஜி ஆர்-பத்மினி

நடித்த

# புதுமைப்பித்தன்

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம்நிறைந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

REGAL
Jaffna

Daily 4Shows
Clint Eastwood
Richard Burton
in

WHERE THE EAGLE DARE

ஆர். வி. ஜி. பீடி

பாவிக்கும் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

27-10-70 முதல் எமது ஆர். வி. ஜி. பீடிகளுக்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

சில்லறையாக பீடி வாங்குபவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விலைக்குஎல்லாக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சில்லறை விலை விபரம்

| | | |
|---|---|---|
| 2 பண்டல் பீடி | — | ரூபா 18-50 |
| 1 பண்டல் பீடி | — | ரூபா 9-25 |
| 1 கட்டு பீடி | — | 55 சதம் |
| 2 பீடி | — | 5 சதம் |

2529 ஆர். வி. ஜி. பீடி தயாரிப்பாளர்,

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

ஸ்ரீ காலிங்கன் இணுவில்

தினசரி 2-00, 6-00, 9-30

எம். ஜி. ஆர். ★ பானுமதி

நடித்த

# மலைக்கள்ளன்

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் நிறைந்த

தீபாவளி வாழ்த்துக்கள்

மனோஹரா

(யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00

போயா நாட்கள் 4 காட்சி

ஜெய்சங்கர்-கே. ஆர் விஜயா

நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்

ரஸிகப்பெருமக்களுககும் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள்

அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

ரஸிகப்பெருமக்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்

தமது அன்புகலந்த

தீபாவளி வாழ்த்துக்களை

தெரிவிக்கின்றனர்

ராஜா (யாழ்ப்பாணம்) — செயின்ஸ்தான் (கொழும்பு) — சரஸ்வதி (திருமலை)

தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன் ★ புஷ்பலதா

சுந்தரராஜன் ★ மனோரமா

எம். ஆர். ஆர். வாசு ★ சோ

மற்றும் பலர் நடித்த

# செல்லப்பெண்

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

சினிமா ரவிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனு நாகேஷ்-மஞ்சுளா நடித்த

# சாந்தி நிலையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள்-நண்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
பெ. அம்பலவாணர்
தங்க, வைர, நகைவியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்,
போன்: 7199 தந்தி: வைரம்

## மணி மொழி

கற்றுத் தேர்ந்த அறிவாளி ஒருவன், தன் சிந்தனையாலும் முயற்சியாலும் சோம்பேறித்தனத்தின் வெறும் பிரமைகளை விரட்டித் தள்ளிவிட்டு அறிவு என்னும் கோபுரத்தின் உச்சிமீது நிற்கும் போது, கீழே உள்ள முட்டாள்களைப் பார்க்கிறான். கீழே சமவெளியில் ஆறுக் கவலையோடு பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஜனக் கும்பலை, மலை உச்சிமீது ஏறிநிற்பவன் அமைதியாகப் பார்ப்பது போலவே அவன் மற்றவர்களைப் பார்க்கிறான்.

—புத்தர்

அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது இதயங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1. பெரியகடை. யாழ்ப்பாணம்.

# கோட்டை மைதானத்தில் இன்று 'ஈழநாடு' தீபாவளிப் பெருவிழா

'ஈழநாடு' தீபாவளிக் கலை விழா இன்று மாலை 1 மணிக்கு யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் குதூகலமாக ஆரம்பமாகிறது. 'ஈழநாடு' கலைவிழாவைக் கண்டுகளிக்க தீபாவளித்தினம் எப்பொழுது வரப் போகின்றதோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உங்கள் அனைவரையும் கோட்டை மைதானத்துக்கு அழைக்கிறோம்.

தீபாலங்காரம் செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் எமது விழாவுக்கென விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் ஈழநாடு' தீபாவளி விழாக்கலை நிகழ்ச்சிகள் இன்று மாலை இடம் பெறுகின்றன. உங்கள் அபிமான நடிகர்கள், மெல்லிசை வல்லுனர்கள், நாதஸ்வர வித்துவான்கள், நாட்டிய விற்பன்னர்கள் உங்களை இன்று இன்ப யுகத்துக்கு அழைத்துச்செல்லவிருக்கிறார்கள். தீபாவளியை இன்பமாகக் கொண்டாட இன்று மாலை கோட்டை மைதானத்துக்கு விரையுங்கள்!

## தீபாவளிப்பரிசு 100 ரூபா

உங்களுக்குத் தீபாவளிப் பரிசாக ரூபா 100 காத்திருக்கிறது. விழா நிகழ்ச்சிகளிலும், யாழ்ப்பாண நகரவீதிகளிலும் இன்று காலை தொடக்கம் உலாவித்திரியும் 'திருவாளர் ஸ்டீல்சனை'க் கண்டு பிடிப்பவருக்கு ரூபா 100 விழாவில்வைத்து வழங்கப்படும். தீபாவளிப் பரிசாக இதை நீங்கள் பெற்றுக் கொள்ள செய்ய வேண்டியது இதுதான்!

எமது இன்றைய பத்திரிகையில் பிரசுரமாகியுள்ள திருவாளர் ஸ்டீல்சனின் புகைப்படத்தைப் பாருங்கள். (27, 28-10-70 பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தார்.) 'ஈழநாடு' பத்திரிகையில் இவரது புகைப்படம் பிரசுரமாகியுள்ள 3 பத்திரிகைகளை (இவையாவும் ஒரே தினத்தில் பிரசுரமானவையாயிருக்கவேண்டும்) உங்கள் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். அடுத்தபடியாக யாழ்ப்பாணநகர வீதிகளிலும், 'ஈழநாடு' மாட்டுவண்டிச் சவாரி நடைபெறும் இடத்திலும் உலாவித்திரியும் திருவாளர்ஸ்டீல்சனை அடையாளம் கண்டுகொண்டு, நீங்கள் வைத்திருக்கும் 'ஈழநாடு' பத்திரிகைகளினுல் தோளில் மெதுவாகத்தட்டி 'நீங்கள்தான் 'திருவாளர் ஸ்டீல்ஸன்' உங்களை அடையாளம் கண்டு கொண்டேன்'' என்று கூறுங்கள். நீங்கள் அடையாளம் கண்டுகொண்டவர் 'திருவாளர் ஸ்டீல்சனாக'விருந்தால், அவர் உடனடியாக உங்களை ஒரு பொலிஸ் உத்தியோகத்தரிடம் அழைத்துச் சென்று விழாஅமைப்பாளரிடம் உங்களைக் கையளிப்பார். கலை நிகழ்ச்சிகளின்போது உங்களுக்கு 100 ரூபா பரிசாக வழங்கப்படும்.

### பிற்பகல் 1 மணி
### ★ மாட்டுவண்டிச்சவாரி
### மாலை 5-45
### ★ கலைநிகழ்ச்சிகள்

கலைவிழா நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

5-45—6-15 மங்கள இசை, நாதஸ்வர கலாநிதி வண்ணார்பண்ணை எம். எஸ். சண்முகநாதன் குழுவினர்

6-15: டாக்டர் கே. கனகரத்தினம் தீபம் ஏற்றி கலைவிழாவை ஆரம்பித்துவைப்பார்.

6-20: மெல்லிசை: கலாலயா குழுவினர்.

6-45: நாதஸ்வர கலாநிதிக்கு யாழ். மாநகரசபை என்ஜினியர் திரு. இ. வைத்திலிங்கம் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்.

6-55: 'மூன்று காதல்' நாட்டிய நாடகம் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் அளிப்பது.

7-20: 'மெல்லிசை' இரட்டையர் குழு

8-00: நடனம் திருநெல்வேலி கலைக்கோவில் வேல் ஆனந்தன் குழுவினர் அளிக்கிறார்கள்.

8-:30 வாத்தியக்கோஷ்டி இராமநாதன் இசைக் கழக மாணவிகள்.

8-50: மெல்லிசை கண்ணன் கோஷ்டியினர் அளிக்கிறார்கள்.

9-30: நாடகம் 'கலையும் கண்ணீரும்' புத்தூர் அ[illegible] வெற்றிப் படைப்பு.

### சவாரிப்போட்டி நீதிபதிகள்

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் திரு. டபிள்யு. பி. ராஜகுரு தலைமையில் பின்வருவோர் நீதிபதிகளாகக் கடமையாற்றுவர்.

இலங்கை வங்கி வடபிரதேச முகாமையாளர் திரு. வேர்ணன் சண்முகம், விற்பனவு இலாகா உதவி ஆணையாளர் திரு. எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் எலக்ரிக்கல் கம்பனி அதிபர் திரு. பி. சோமசுந்தரம், யாழ்ப்பாணம் மேக்கன்டைல்வங்கி மனேஜர் திரு. ஈ ஏ, ஊலி, மராமரத்து இலாகா பொறியியலாளர் திரு. எஸ். புவனேஸ்வரன், யாழ்ப்பாணம் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ் மாணிக்கம், யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். கார்த்திகேசு.

சவாரிப் போட்டியை ஒழுங்கு நிரைப்படுத்தும் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் பணியாற்றுவர்.

திருவளேர்கள் ரி. சுப்பிரமணியம் எஸ்,ஏ.ஜெரோம், ஏ. இராஜரத்தினம், ஏ ஸி. ஞானப்பிரகாசம், எஸ்.கே. காசிலிங்கம் (ஈழநாடு)



## 'திருவாளர் ஸ்டீல்சன்ஸ்' இவர்தான்

ஸ்டீல்சனை கண்டுபிடிப்பவருக்கு 'ஸ்டீல்சன்ஸ்' அதிபர் திரு. எம். பூபாலசிங்கம் ஜே.பி. ரூ. 100 பரிசு கொடுப்பார்.



பரிசுதரும்
திரு. பூபாலசிங்கம் ஜே பி

## பெரியபண...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பித்திருக்கிறார்கள் - மகத்தான சாதனைதான். ஹ...ஹ!''

இதே சமயம் என்னருகில் 50ரூபா- 100ரூபா நோட்டு விஷயம் 'வெளிக்கிட்ட' முதற்தினத்தில் தம்வீட்டுக்குப் பால் கொண்டுவந்த அப்பாவிப் பால்காரனுக்குத் தங்கள் சகலஉறவினரினதும் பால் காசாக ஒரு நூறு ரூபா நோட்டைக் 'கட்டியடித்த' தன் வீரப் பரிதாபத்தைப் பறை சாற்றிக் கொண்டிருந்தார் இன்னோர் உத்தியோகத்தர்.

### பிரம்படி

திடீரென்று பொலிஸ் அதிகாரியின் பிரம்பு ஓரன்பரின் முதுகில் விளையாடியது. வேறொரு 'கியூ'வில் நுழைய முயற்சித்தாராம். 'சொந்தக் காசை மாற்ற வந்து அடியும் வாங்கவேண்டியிருக்கிறது.'' வரிசை குழம்பும் வரை வேறெங்காவது போயிருந்துவிட்டுப் பின்னர் வந்து அகப்பட்டவர் எவராவது முதுகில்பிரம்பை 'விளாசுவதா' என்று அபிப்பிராயங்கள் பிறந்தன. எங்கிருந்தோ ஓர் எதிர்ப்பு (உதட்டு) விசில் கிளம்பி அடங்கியது.

''சுறுமீன்களைப் பிடிக்கையில் குஞ்சு மீன்களும் சற்றுக் கஷ்டமடைவதில் தவறில்லை... ஆனால் அரசாங்கத்திற் கடமையாற்றும் குஞ்சு மீன்களுக்கு' ஒருநாள் விடுமுறை கொடுத்தால்தான் இந்தப் புதுநோட்டை மாற்றிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்!'' என்றார் காலை எட்டு மணியிலிருந்து மாலை மூன்றுமணிவரை 'கியூ' தவமியற்றிப் புது நாணயத்தாள் பெற்ற ஒரு குமாஸ்தா என்னைக் கேட்டால், அது அனுபவபூர்வமான உண்மைதான்.

### இன்று

யாழ்ப்பாணம், வியா' இன்றும்நாளையும் வண்ணை வைத்தீஸ்வரன்' கோவில் மண்டபத்தில்மெய்கண்டார் கழக ஆண்டுவிழாவும், மெய்கண்டார் குருபூசையும், மகாநாடும் நடைபெறும்.

— —

### இசை விழா

அம்பன், புதன் அச்சுவேலி ஸ்ரீவிக்கினேஸ்வரா சனசமூக நிலைய இசைவிழா இன்று மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் திரு கு இரங்கநாதன் தலைமையில் நடைபெறும்,

— —

### "நூல் நிலையம் வேண்டும்"

**அரசாங்கத்துக்கு மகஜர்**

எழுதுமட்டுவான், செவ். நாவற்குழி கிராமசபை எல்லைக்குள் பொது நூல் நிலையம் அமைத்துத்தரும் படி கோரும் மகஜர் ஒன்றை இக்கிராமச்சபை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

### மரண அறிவித்தல்

**செ. செ. இமானுவல்**

மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி இலாகா பரிசோதகர் செல்வரத்தினம் செபஸ்தியாம்பிள்ளை இமானுவல் காலமாகிவிட்டார் நல்லடக்கம் 29-10-70 மாலை 4 மணிக்கு மயிலங்காடு, ஏழாலை தெற்கு, சுன்னாகத்தில் நடைபெறும். 2146

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு அக்டோபர் மீ 29-ந் உ அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org